திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

5 - MAR 1962
MADRAS

திரிபுராந்தகமூர்த்தி—சாட்டியக்குடி

மாலை 4] பிலவ மாசி-மார்ச் 1962 [மணி 6

ரதி

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



கபாலீசுவரர் கோயிலில் திருமுறை அர்ச்சனைத் துவக்கவிழா

பொருளடக்கம்

1. திருத்தலையூர்
2. அச்சுதமங்கலம்
3. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
4. இளையாத்தங்குடியில் பாவை மாநாடு
5. திருத்துருத்திக் கோயில் கல்வெட்டு வரலாறு
6. திருஞானசம்பந்தர் அருளிய திருமுறை
7. திருநாவுக்கரசு நாயனார்
8. இளையாத்தகுடி
9. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
10. திருவிழா விளக்கம்
11. சிவஞானபோதம்
12. தெய்வச்சேக்கிழார்

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 4] பிலவ மாசி - மார்ச் 1962 [மணி 6

திருத்தலையூர்

(பாலேசுவரர் கோயில்)

சைவ மெய்யடியார்களான அறுபான் மும்மை நாயன்மார்களும் அவதரித்த திருப்பதிகள் நம்முடைய நாட்டில் பல இடங்களில் பரவலாக இருக்கின்றன. **உருத்திரபசுபதி நாயனார்** அவதரித்த ஊர் **திருத்தலையூர்.** இது தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் பகுதியிலிருக்கிறது. மாயூரம் அறந்தாங்கி இருப்புப்பாதையில் கொலுமாங்குடி என்ற நிலையத்திலிருந்து கிழக்கே இரண்டு கல்தொலைவிலிருக்கிறது. காரைக்காலிலிருந்து கும்பகோணம் போகிற பஸ்கள் இவ்வூர் வழியாகச் செல்கின்றன. இந்த நெடுஞ்சாலைக்கு ஓரமாக நாட்டுவாய்க்கால் என்ற ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றின் தென் கரையில் சிவன் கோயில் இருக்கிறது. அதற்குத் தெற்கே கொஞ்சம் தொலைவில் திருத்தலையூர் இருக்கிறது. நாட்டுவாய்க்கால் கோயிலுக்கு மேல்புறமும் வடபுறமுமாக வளைந்தோடுவது கோயிலுக்கு அழகு தருகிறது.

கோயில் ஊருக்கு வடக்கே தனியாக இருக்கிறது. கிழக்கு நோக்கிய சிறு கோயில். அண்மையில் திருப்பணி செய்யப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. கோயிலுக்குக் கிழக்கே ஒருவாயிலும் தெற்கே ஒருவாயிலும் உள்ளன. ஒரே பிரகாரம்தான். கர்ப்பக்கிரகத்திலுள்ள சிவலிங்கமூர்த்தி **பாலேசுவரர்** என்னும் திருப்பெயருடையர், அம்பிகை சந்நிதி தெற்கு நோக்கியிருக்கிறது. தேவியின் திருநாமம் **பார்வதி** என்பது. தெற்குப் பிரகாரத்தில் உள்ள உருத்திரபசுபதி நாயனார் மூலவரின் திருவுருவம் சிரமேல் கரங்கூப்பிய தோற்றத்தில் காணப்படுகிறது.

கோயிலுக்குத் தெற்கே **உருத்திர கோடி தீர்த்தம்** என்ற திருக்குளம் இருக்கிறது. பசுபதி நாயனார் குளத்து நீரில் நின்று உருத்திரம் ஜெபித்த இடத்தில் ஒரு மேடை கட்டப்பட்டிருக்கிறது. நாயனார் திருநட்சத்திரமான புரட்டாசி அசுவதியன்று திருநாள் நடைபெறுகிறது. கோயிலில் மூன்று கால பூசை நிகழ்கிறது.

சேக்கிழார் பெரிய புராணத்தில் இந்த நாயனார் வரலாற்றைக் கூறத் தொடங்கும்போது "**பொன்னி நன்னாட்டு**......தலத்தின் மேம்படு நலத்தது பெருந் **திருத்தலையூர்**" என்று கூறியிருக்கிறார். தலத்தின் மேம்பட்டதால் தலையூர் என்ற பெயராயிற்றென்பது குறிப்பு. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் **திருந்தலையூர்** என்ற ஊர் இருக்கிறது. இதுதான் நாயனார் அவதரித்த திருப்பதி என்று சிலர் கூறுகின்றனர். முசிறியினின்றும்வடக்கே துறையூர் வழியில் எட்டு கல்லில் உள்ள சம்பு நாதபுரம் என்ற ஊருக்குக் கிழக்கே மூன்று கல்தொலைவில் இந்த திருத்தலையூர் இருக்கிறது. இவ்வூர்க் கோயிலில் சப்தரிஷீசுவரர், குங்குமவல்லி இவர்கள் எழுந்தருளி

யுள்ளனர். முப்பது ஆண்டுகளுக்கு முன் ஆதி சைவர் ஒருவர் உருத்திரபசுபதி நாய னாரின் திருவுரும் ஒன்றை இக்கோயிலில் செய்து வைத்தார் என்று கூறப்படுகிறது. கோயிலுக்கு எதிரிலுள்ள ஓமக்குளத்தில் நாயனார் ஸ்ரீருத்திரம் ஓதினார் என்றும் சொல்கின்றனர். இராவணன் தன் தலையை அறுத்து ஓமம் செய்ததால் ஓமகுளம் என்றும், தலையை அறுத்ததால் தலையூர் என்றும் பெயர்கள் ஏற்பட்டதாக அவ் வூர்ப் புராணம் கூறுகிறது. இந்த திருத் தலையூரில் அந்தணர்கள் வாழ்ந்ததாகத் தெரியவில்லை. மேலே சொன்ன தஞ்சை மாவட்டத் திருத்தலையூர் இன்றும் அந் தணர்கள் வாழ்ந்து வருகின்றனர். பெயர் ஒற்றுமை குறித்து, திருச்சிராப்பள்ளி மாவட்டத் திருத்தலையூர்க் கோயிலிலும் நாயனார் திருவுருவம் ஒன்று அமைத்தி ருக்கவேண்டும். சேக்கிழார் பெருமான் "பொன்னி நான்னாட்டுத் திருத்தலையூர்" என்றே பொதுவாகச் சொல்லியிருக் கின்றார். இரண்டும் சோழ நாட்டிலே உள்ளவைதான்.

திருத்தலையூரில் பசுபதியார் என்ற அந்தணர் அவதரித்தார். அவர் இடை யறாது உருத்திரம் ஓதி வந்த காரணத்தால் உருத்திரபசுபதி நாயனார் என்ற பெயர் ஏற்பட்டது. நாள் தோறும் திருக்குளத் தில் கழுத்தளவு நீரில் நின்று முறையாக அன்பொடு உருத்திரம் பயின்று வந்து இறைவன் திருவடி நீழல் எய்தினர், "அருமறை உருத்திரம்" என்பது சேக் கிழார் திருவாக்கு "மறையும் உருத்திரமும் உடலும் உயிரும்போல. வேத புருடனுக்கு உருத்திரமும் கண்ணும், இதனுள்ளிருக் கும் பஞ்சாக்கரம் கண்மணியுமாம் என்று சதுர்வேத தாத்பரிய சங்கிரகம் கூறுகிறது. வேதம் மூன்று என்ற முறை யில் நடுவணது எசுர் வேதம். அதன் ஏழு காண்டங்களுள் நான்காவதில் நடுவண தாகிய பதினொராவது அனுவாகத்தின் நடுவணதாகிய ஆறுவது சூக்கத்தில் விளங் குவது திருஉருத்திர மந்திரம். அதன் நடுவுள்ளிருப்பது சிவ என்ற திருநாமமு மாம்" — சிவக்கவிமணி பெரியபுராண விரிவுரை.

திருவதிகை :—வீரட்டானேசுவரர் கோயிலில் சிவ சிவ ஒலி மண்டபத்தை சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி. ஏ. பி. எல்., அவர்கள் 25—2—62ல் திறந்துவைத்தார்கள்.

சென்னை மயிலாப்பூர் :—திருவள்ளுவர் ஆலயத்தில் திருவள்ளுவர் திருநாளாகிய 21—2—62ல் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நிறுவிய அறக்கட்டளை நிதியிலிருந்து அன்னம்பாலிப்பு நடைபெற்றது.

திருவெண்காடு :—சுவேதாரண்யேசுவர சுவாமி கோயிலில் இந்திர மகோற்சவம் 14—2—62 முதல் 28—2—62 வரை நடைபெற்றது.

சங்கரநயினர் கோயில் :—சங்கரநாராயணசுவமி கோயிலில் தெப்ப உற்சவம் 9—2—62ல் நடைபெற்றது.

திருக்கண்ணபுரம்:—சௌரிராஜப்பெருமாள் கோயிலில் மாசி மகோற்சவம் 10—2—62 முதல் 23—2—62 வரை நடைபெற்றது.

கும்பகோணம் :—காசிமடத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் 19—2—62ல் ஏழை களுக்கு அன்னம்பாலிப்பு நடைபெற்றது.

வலயமாதேவி :—வேதநாராயணப்பெருமாள் கோயிலில் மார்கழிமாத முதல் தை மாதம் 23ஆம் தேதிவரை கோளறுபதிகம் பாராயணம் நடைபெற்றது.

திருப்போரூர் :—கந்தசாமி கோயிலில் புதிய வெள்ளி அன்ன வாகன புறப்பாட்டைச் சென்னை அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் 31-1-62ல் துவக்கிவைத்தார்கள்.

அச்சுதமங்கலம்

(சோமநாதர் கோயில்)

தமிழ் நாட்டில் பாடல் பெற்றதலங்களுக்கிடையே பாடல் பெருததலங்களும் உள்ளன. சோழ நாட்டில் அத்தகைய கோயில்கள் பல உள்ளன. தஞ்சைமாவட்டத்திலே நன்னிலம் பகுதியில் **அச்சுதமங்கலம்** என்ற ஒரு சிற்றூர் உண்டு. மாயூரம்—அறந்தாங்கி இருப்புப் பாதையில் நன்னிலம் என்ற நிலையத்திலிருந்து ஐந்து கல்தொலைவிலுள்ளது. நாகப்பட்டினம்—நாச்சியார் கோயில் பஸ்கள் இவ்வூர் வழியே செல்கின்றன. நன்னிலத்திலிருந்தும் வாடகை வண்டிகளில் சென்று இவ்வூரையடையலாம்.

ஊரின் நடுநாயகமாய் விளங்குகிறது கோயில். முன்னல் இராஜகோபுரம், அடுத்தவாயிலில் ஒரு கோபுரம், அம்பாள் சந்நிதிக்கு நேரே ஒரு கோபுரம் இவைகள் அழகாகக் காட்சியளிக்கின்றன. கோயில் கிழக்கு நோக்கியது; இரண்டு பிரகாரங்களை யுடையது. மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள சிவலிங்க மூர்த்திக்கு **சோமநாதர்** என்ற திருப்பெயர். மேற்கு உட்பிரகாரத்தில் முருகன், அப்புலிங்கம், ஸ்ரீதேவி, பூதேவியுடன் திருமால் இவர்களின் சந்நிதிகள் இருக்கின்றன. வடக்கு உட்பிரகாரத்தில் சண்டேசுவரர் எழுந்தருளியுள்ளார். அம்பிகைக்குத் தனிக்கோயிலும் அதைச் சுற்றிப் பிரகாரமும் உண்டு. தேவியின் திருநாமம் **சௌந்தர நாயகி** என்பது. இத்தலத்தின் தீர்த்தமான **விசால தீர்த்தம்** கோயிலுக்கு வடகிழக்கே இருக்கிறது. நாள்தோறும் நாலுகால பூசை நடக்கிறது. கந்தர் சஷ்டி விழாமாத்திரம் நடைபெறுகிறது. இத்தலத்தைப் பற்றி இதன் அருகிலுள்ள ஸ்ரீவாஞ்சியம் என்னும் தலத்தைப் பற்றிய புராணங்களில் கூறப்பெற்றிருக்கிறது. பஞ்சக்குரோஸத் தலங்களில் ஒன்ருகக்குறிக்கப்பட்டிருக்கிறது.

இது மிகவும் பழமையான கோயில் கோஷ்டத்தில் அற்புதச் சிற்பவேலைப் பாடுடைய திருவுருவங்கள் காணப்படுகின்றன. சிவபெருமான் சண்டேசுவரர்க்கு அருள்புரிதல், கிராதகமூர்த்தி, அம்பிகை ஒற்றைக் காலில் தவம் செய்தல் முதலிய சிலைகள் கண்கவர் வனப்பினதாகக் காட்சியளிக்கின்றன. சிவபெருமான் சண்டேசப் பதம் அருளும் உருவம் கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள உருவம் போன்றே தோன்றுகிறது. ஆதலின் இக்கோயில் இராஜேந்திரன் I (முதல் இராஜராஜ சோழன் மகன்) காலத்தில் கட்டப்பெற்றிருக்கலாம். இக்கோயில் கோபுரவாயில், கர்ப்பக்கிரகச் சுவர்கள் இவைகளில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் சோமநாதர் என்று இறைவன் பெயர் குறிக்கப்பெறுகிறது. அம்பாள் இத்தலத்தில் தவம் செய்து இறைவனை அடைந்ததாகவும் ஐதீகம்.

கூடலையாற்றூர் :—நர்த்தனவல்லபேசுவரசுவாமி கோயிலில் மாசி மக மகோற்சவம் 9—2—62 முதல் 22—2—62 வரை நடைபெற்றது.

விருத்தாசலம் :—விருத்தகிரீசுவரர் கோயிலில் மாசிமகத்திருவிழா 10—2—62 முதல் 19—2—62 வரை நடைபெற்றது.

திருப்பாதிரிப்புலியூர் :—வீரஆஞ்சநேய சுவாமி கோயிலில் 16—12—61 முதல் 13—1—62 வரை திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி திருப்பாவை பாசுரங்கள் ஒலிபெருக்கிமூலம் பரவச்செய்யப்பட்டது. ஹனுமந்தஜயந்தியை முன்னிட்டு 6—1—62ல் திருமஞ்சன ஆராதனை நடைபெற்றது.

மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. **அண்ணங்கராசார்ய சுவாமிகள்,** காஞ்சிபுரம்]

மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான திருவண்பரிசாரத்தை நம்மாழ்வாரொருவரே பாடியருளின ரென்றும், திருவாய்மொழி யெட்டாம் பத்தின் மூன்றாம் பதிகமான அங்குமிங்கும் பதிகத்தில் ஒரு செய்யுளில் மட்டும் திருவண்பரிசாரப் பேச்சு இருந்தாலும் அப்பதிகம் முழுவதுமே அந்தத் திருப்பதி விஷயமென்று பூருவாசாரியர்களின் திருவுள்ள மென்றும், எம்பெருமானிடத்தில் அபாய சங்கையினால் காப்பிடுவதே இந்தப் பதிகத்தின் பிரமேய மென்றும் முன்னிதழில் விவரித்தோம். இனி அப்பதிகத்தின் ஒவ்வொரு செய்யுளினுடையவும் சுவைப் பொருளைத் தருகின்றோம்.

1. அங்குமிங்கும் வானவர் தானவர் யாவரும்
எங்குமினையை யென்றுன்னை அறியகிலாதலற்றி
அங்கஞ்சேரும் பூமகள் மண்மக ளாய்மகள்
சங்குசக்கரக் கையவனென்பர் சரணமே.

எம்பெருமானே! மேலுலகங்களிலும் இவ்வுலகத்திலும் மற்றுமெவ்வுலகங்களிலுமுள்ள தேவர்கள் அசுரர்கள் முதலான யாவரும் உன்னை உள்ளபடி அறியப்பெறாது எதையோ சொல்லிக் கூப்பிட்டு, ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி யென்னுந் தேவிமார் திருமேனியில் சேர்ந்திருக்கப் பெற்றார்களென்றும், திருவாழி திருச்சங்குகளைத் திருக்கையிலேந்திய பெருமான் நம்முடைய ஆபத்துக்களைப் போக்க வல்லவன் என்றும் சொல்லி, 'எம்பெருமான் ரக்ஷகன்' என்பதை மட்டும் அநுசந்திக்கின்றார்களென்பது செய்யுளின் பொருள்.

எம்பெருமானிடம் வந்து பணிகின்ற அதிகாரிகளை யெல்லாம் ஆழ்வார் உற்று நோக்குகிறார்; எதற்காகவென்னில், எம்பெருமானுக்கு மங்களா சாசனம் செய்ய நமக்குத் துணையாவார் ஆரேனுமுளரோ? என்று அறிகைக்காக. உற்றுநோக்கினவிடத்தில் ஐச்வர்யார்த்திகள் முந்துறமுன்னம் திருவுள்ளத்திற்பட்டார்கள்; ஐயோ! இவர்கள் எம்பெருமானுடைய ஸௌகுமார்யத்தையறிந்து இதற்கு யாராலே என்ன தீங்கு நேரிடுகிறதோ வென்று பரிந்து நோகாமல் தங்களுக்கு அப்பெருமான் ரக்ஷகன் என்று மட்டும் கொண்டிருக்கிறார்களே!' என்று வெறுத்து இவ்வெறுப்பை எம்பெருமான் தன்னையே நோக்கியருளிச் செய்தாராயிற்று.

அங்குமிங்கும் எங்கும் வானவர் தானவர் யாவரும் உன்னை இனையை யென்று அறியகிலாது—மேலுலகங்களிலும் கீழுலகங்களிலும் மற்றுமுள்ள எவ்விடங்களிலுமிராநின்ற அனுகூலர்களான வானவர்களும் பிரதிகூலர்களான தானவர்களும், இவ்விரண்டு வகுப்பிலும் சேர்ந்தவர்களான மனிதர் முதலியோருமான யாவரும், எம்பெருமானே! உன்னை இப்படிப்பட்டவனென்று அறியாமல் என்பது சொல்லின்மேல் கிடைக்கும் பொருள். உன்னுடைய ஸௌகுமார்யத்தையறியாதவர்களாய் என்பது தாற்பரியம். இப்போது ஆழ்வாருடைய திருவுள்ளத்தில் அப்பெருமானுடைய ஸௌகுமார்யமே உறைந்திருப்பதனாலும், அதனாலேயே தாம் அப்பெருமான் பக்கலிலே பரியப் புகுந்தவராகையாலும் இவ்விடத்தில் 'இனையை யென்று உன்னையறியகிலாது' என்றதற்கு இதுவே பொருளாகத் தகும். "கருமுகை மாலை போலேயிருக்கிற உன்படியறியாதே" என்பது பூருவர்களின் வியாக்கியானம்.

எம்பெருமானுடைய ஸௌகுமார்யத்தை அவர்கள் அறியாதே செய்கிற காரியம் என்னவென்றால் [சரணமே யென்பர்] எம்பெருமானுக்கு ரக்ஷையிடப்பாராதே அவனிடமிருந்து தாங்கள் ரக்ஷைபெறப் பார்க்கிறார்களே! அந்தோ! என்று வயிறு பிடிக்கிறாராழ்வார். இன்னமும் அவர்கள்செய்வதென்னென்னில்; [பூமகள் மண்மகளாய் மகள் அங்கஞ்சேரும், சங்குசக்கராகையவன்] என்றுஞ் சொல்லாநின்றார்கள். இப்படிச் சொல்லுவது நன்றுதானே; இதில் பிசகு ஒன்றுமில்லையே; இதையிட்டு ஆழ்வார் வெறுப்பது ஏன்? என்னில்; கேண்மின். வாயாற் சொல்லுகிற வாசகம் நன்றேயானாலும் அவர்களின் அபிப்பிராயம் நன்றன்று என்பது ஆழ்வார் திருவுள்ளம். பூமகள் மண்மகளாய் மகளோடுண்டான் சேர்த்திக்கும் சங்குசக்கர கையவனான இருப்

புக்கும் பல்லாண்டு பாடுகிறவர்களாய்க் கொண்டு அந்த வாசகங்களைச் சொன்னார்களாகில் நன்றே. இவ்வாசகம் சொன்னவர்களுக்குப் பல்லாண்டு பாடும்படியான பரிவு இல்லையே. தங்களுடைய இஷ்டங்களைப் பெறுதற்கும் அநிஷ்டங்களைத் தொலைக்கைக்கும் எம்பெருமானைத் தஞ்சமாகப் பற்றினவர்களாய் அப்பேறு பெறுவித்தற்கு உறுப்பாகப் புருஷகாரம் செய்யப் பிராட்டிமார்களும், காரியத்தை நிறைவேற்றிக்கொடுக்க திவ்யாயுதங்களுமுண்டு என்று பிரயோஜனத்தில் விருப்பத்தாலே சொல்லுகிற வாசகமாகையாலே அதுபற்றி ஆழ்வார் வெறுத்துக் கூறுகின்றாரென்க.

அலற்றி—'ஐயோ! எம்பெருமானுக்கு என்வருகிறதோ?' என்று வயிறெரியாதே, அவன் நம்மை ரக்ஷிப்பவனென்பதையும், எல்லாவிதமான ஆற்றலும் நிறைந்தவனென்பதையும் தெரிவிக்கிற வாசகங்களைக் கொண்டு அலற்றுவார்களாம் அவர்கள். "வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு" என்று சொல்லி திவ்விய தம்பதிகளின் சேர்த்திக்குப் பல்லாண்டு பாடுவாரில்லையே; கையும் திருவாழி திருச்சங்குமான அழகைக் கண்டு. "வடிவார் சோதி வலத்துறையுஞ் சுடராழியும் பல்லாண்டு, படைபோர்க்கு முழங்குமப் பாஞ்சசன்னியமும் பல்லாண்டே" என்பாருமில்லையே! நம் இடையூறுகளைத் துணித்து நம்மைக் காத்தற்கு வேண்டுவனவுண்டென்று இவ்வளவே கருதி ஏதோ சொற்றொடர்களைச் சொல்லியலற்றுகின்றார்களே யென வருந்தியருளிச் செய்தாராயிற்று.

2. சரணமாகிய நான்மறை நூல்களுஞ் சாராதே
மரணந் தோற்றம் வான்பிணி மூப்பென்றிவை மாய்த்தோம்
கரணப்பல்படை பற்றறவோடுங் கனலாழி
அரணத் திண்படை யேந்திய வீசற்காளாயே.

ஐச்வரியம் பெறுதற்குரிய சாதனங்களை விதிக்கின்ற வேதங்களைத் தள்ளி, சத்துரு சேனைகள் தொலையும்படி திகழ்கின்ற திருச்சக்கரப் படையைத் தாங்கியுள்ள திருமாலுக்கு அடியவர்களாயிருந்து வைத்தும் பிறப்புமிறப்பும் பிணிகளும் மூப்புமாகிய இவை தொடராதபடி செய்துகொண்ட வித்தனையொழிய வேறில்லையே! என்பது பதப்பொருள். தாத்பரியம் ஆழ்ந்து அறியத்தக்கது. அதனை விவரிக்கிறோம்.

கீழ்ப்பாட்டில் ஐச்வரியம் விரும்புபவர்களை வெறுத்துப் பேசினார். இப்பாட்டில் கைவல்யம் விரும்புமவர்களை வெறுத்துப் பேசுகிறார். கைவல்யமாவது, பிறப் பிறப்பு மூப்புப் பிணிகளற்று நீடூழிகாலம் தன்னை மட்டுமே யநுபவித்தலாம். இதுவொரு மோட்சமெனப்படுகிறது. இதில் கிடைக்கும் பேறு என்னவென்றால், பிறப்பிறப்பு மூப்புப் பிணிகள் பின்னையும் தொடராதே தொலைகின்ற வத்தனையேயாம். மங்களா சாசனத்தில் குதூகலமாகிற மிகச் சிறந்த பேற்றைப் பெறாமல் இத்தனையே பெறுமவர்களிடத்து ஆழ்வார்க்கு வெறுப்புண்டாகச் சொல்ல வேணுமோ?

ஆனால் மேலெழப் பார்க்குமளவில் இப்பாட்டில் பிறர்மீது வெறுப்பு இருப்பதாகப் புலப்படாது. இரண்டாமடியில் "மரணம் தோற்றம் வான்பிணி மூப்பென்றிவை மாய்த்தோம்" என்று தன்மைப் பன்மையாக இருத்தலால் ஆழ்வார் தம்மைப்பற்றி ஏதோ சொல்லிக்கொண்டதாகத் தோற்றுகின்றதேயன்றி, பிறரை வெறுத்துரைத்ததாகக் காண இடமில்லையே; முன்னிலைவினை முற்று இருந்தாலன்றோ அது காணலாகும்; அஃது இல்லையே! என்று பலரும் சங்கிக்க இடமுள்ளது. ஆழ்ந்து குறிக்கொண்மின். முகுந்த மாலையில் "நாதே ந: புருஷோத்தமே" என்னும் சுலோகத்தில் "யம்கஞ்சித் புருஷாதமம் கதிபயக்ராமேசம் அல்பார்த்ததம் ஸேவாயை ம்ருகயாமஹே நரமஹோ மூகா வராகாவயம்" என்றுள்ளது. புருடோத்தமனை எம்பெருமான் நலமந்தமில்லதோர் நாடுதருவனாய் நிற்க, ஐயோ! அறிவிலிகளான நாம் அற்ப பலன்களைத் தருமவனான ஓர் நீசனைத் தேடியோடுகின்றோமே! என்று தம்முடைய நிந்தையே இதிலுள்ளது. ஆனாலும் இது தம்மையிகழ்ந்து கூறுவதில் நோக்குடையதன்று. பிறரை இகழ்ந்து கூறுவதிலேயே முழுநோக்கு இதற்கு. உலக வழக்கிலும் இந்த நடையுள்ளது. 'நீங்கள் நன்றாக வாழ்ந்துவிட்டீர்களே' என்று எதிரியை இகழ்ந்து இயம்பவேண்டுமிடத்து, 'நாம் நன்றாக வாழ்ந்துவிட்டோமே! என்று தம்மையே இகழ்ந்து கூறுதலுண்டன்றோ. அந்த நியாயமே இங்குக்கொள்ளத் தக்கது.

இப்பாட்டுக்கு ஆறாயிரப்படியுரையின் அவதாரிகை வெகு கம்பீரமானது, "கைவல்

யார்த்திகளும் தமக்குத் துணையல்ல ரென்கி றார்'' என்பது அவ்வவதாரிகை. கைவல்யார்த் திகளென்கிற சொல்லும் இப்பாட்டில் இல்லை; அவர்கள் துணையல்ல ரென்பதைத் தெரிவிக்கும் வாசகமும் இதில் இல்லை. ஆனால் ஆழ்ந்து நோக்குதலில் கிடைக்கு மிவை. "சரணமாகிய நான்மறை நூல்களுஞ் சாராதே'' என்று இகழ்ச்சியா புகழ்ச் சியா என்று பார்க்கவேண்டும். இகழ்ச்சி போல் தோன்றும்; ஆனால் இங்குப் புகழ்ச் சியே. எங்ஙனேயெனின்; நான்மறை நூல் களைச் சார்வது நன்றேயானாலும், செல்வம் சுவர்க்கம் மக்கட்பேறு முதலான அற்ப பலன்களைப் பெறுதற்குரிய சாதனங்களைக் காட்டிக் கொடுக்குமவையான நூல்களைச் சாராமலிருப்பது புகழ்ச்சியேயன்றே. பகவத் கீதையில் "த்ரைகுண்ய விஷயா வேதா: நிஸ்த்ரை குண்யோ பவார்ஜுந!'' என்று கட்டளையைப் பரிபாலித்தபடியாகுமன்றே. ஆக, பிறர் சிலர் நான்மறை நூல்களுஞ் சாராமலிருப்பதை நன்மையாகவே கொண்டா ராழ்வார். இத்தகைய நன்மை பெற்றுங்கூட மங்களா சாஸன மார்க்கத்தில் அடிவைத்தார் களில்லையே! என்பது மனக்குறை.

இதற்குமேல் மற்றொரு நன்மையும் பெற்றுள்ளார்கள் பிறர்; அதாவது, அரணத் திண்படை யேந்திய வீசற்கு ஆளாகப்பெற் றது. திருவாழி திருச்சங்குகளையேந்தியுள்ள பெருமானுக்கு ஆளாகப்பெற்றது பெரிய நன்மையே. ஆயினும் மங்களா சாசன மார்க் கத்திற்கு வந்திலரே! என்பது குறை. இக் குறைகளிரண்டும் "மரணம் தோற்றம் வான் பிணி மூப்பென்றிவை மாய்த்தோம்'' என்ற இரண்டாமடியில் உய்த்துணரத் தக்கன. சக்கரபாணியான திருமாலுக்கு ஆளாகியும் நீங்கள் என்ன பேறு பெற்றுவிட்டீர்கள்; மிக அற்பமான பேறுதானே பெற்றீர்கள் என்பதே இங்கு உட்கருத்தாகும்.

3. ஆளுமாளார் ஆழியுஞ்சங் குஞ்சுமப் பார்தாம்
வாளும் வில்லுங்கொண்டு பின்செல்வார் மற் றில்லை
தாளுந் தோளுங் கைகளையாரத் தொழக் காணேன்
நாளும் நாளும் நாடுவனடியேன் ஞாலத்தே.

எங்கள் திருமால் தமிழுக்குப் பணி விடை செய்வதற்காக ஒரு ஆளையும் வைத் துக் கொள்ளுகிறாரில்லையே. (அது எப்படி தெரிகின்றதென்றால்;) திருவாழி திருச்சங்கு களைச் சுமப்பவர் தாமேயாயிருக்கின்றாரே. அப்படியானாலும், நந்தகவாளையும் சாரங்க வில்லையுங் கொண்டு பின் செல்லுகைக்கு ஒருவருமில்லையே. திருவடிகளிலும் திருத் தோள்களிலுமீடுபட்டுக் கையாரத் தொழுவா ரையும் காண்கின்றிலேன். ஆதலால், இந் நிலத்தில் அடியேன் நாள்தோறும் பின்செல் வப் பார்க்கின்றேன் என்பது பதப்பொருள்.

கீழ் இரண்டு பாட்டுக்களிலும் தமக்கு ஒருவரும் துணையில்லையென்று சொன்ன முகத்தால் ஆழ்வார் தம்முடைய தனிமையை வெளியிட்டாராயிற்று. இங்ஙனே தம்மு டைய தனிமையைச் சொன்ன பிரசங்கத்தில் எம்பெருமானுடைய தனிமையை நினைத்து வருந்துகிறாரிப் பாட்டில். எம்பெருமானுக்கு விண்ணுலகும் மண்ணுலகுமாகிய உபயவிபூ தியும் ஆளாயிருக்கச் செய்தேயும், அப்பெரு மான் ஒரு சேவகனைத் தன்னிடம் வேலைக்கு வைத்துக்கொள்ள வில்லையே! என்கிற வருத் தத்தை "ஆளும் ஆளார்'' என்னுஞ் சொற் றொடரினால் காட்டுகின்றனர். அத்திருமால் ஒரு சேவகனை வைத்துக் கொள்ளவில்லை யென்பது எதனாலே தெரியவருகிறதென்ன; அதற்கு விடைகூறுகின்றார் ஆழியுஞ் சங்கும் சுமப்பார்தாம் என்று. ஆள் இருந்தால் திரு வாழிதிருச்சங்குகளைத் தாமே சுமப்பரோ? வைணவமடாதிபதிகளான பெரியார் [முக் கோல் பிடித்த முனிவர்கள்] தம்முடைய கைவிட்டு அகலக்கூடாத முக்கோலை ஒரு தொண்டர் கையிலே கொடுத்துவிட்டுத் தாம் கைவீசிக்கொண்டு போனார்கள். அவர்களு டைய திருமேனி அத்தனை ஸுகுமாரமானால் எம்பெருமானது திருமேனியின் ஸௌகுமா ரியம் வாய் கொண்டு வருணிக்கப்போமோ? திருவாழி திருச்சங்கு முதலான திவ்யா யுதங்களைத் தாம் சுமக்கலாமோ? என்கிறா ராழ்வார். இங்ஙனே கூறுகின்ற ஆழ்வா ருடைய திருவுள்ளத்தில் திருவண்பரிசாரத் தலைவனை திருவாழ்மார்பனுடைய திருமேனி ஸௌகுமார்யமொன்றே உறைந்துகிடக்கிற தென்றுணரலாம். அந்த ஸௌகுமார்யத் தினாலே, பூவேந்தினாற் போன்ற திவ்யாயுத தாரணமும் மலையெடுத்தாற்போலே சுமையா கத் தோன்றுகிறது ஆழ்வார்க்கு. (தொடரும்)

இலட்சார்ச்சனை நடந்த இடங்கள்

கிருஷ்ணராயபுரம்—திருக்கண்மாலீசுவரசுவாமி கோயில்
குத்தாலம்—மன்மதீசுவரசுவாமி கோயில்
திருவாழ்கொளிபுத்தூர்—துர்க்காபரமேசுவரி கோயில்
அம்பாசமுத்திரம்—அரசடி விநாயகர் கோயில்
அம்பாசமுத்திரம்—உலகாம்பிகை கோயில்
பாபவிநாசம்—பாபவிநாசர் கோயில்
சாட்டியக்குடி—வேதபுரீசுவரசுவாமி கோயில்
மடவார்விளாகம்—வைத்தியநாதசுவாமி கோயில்
திருத்தணி—சுப்பிரமணியசுவாமி கோயில்
கடலங்குடி—வரதராஜப்பெருமாள் கோயில்
திருமேனியார் கோயில்—திருமூலநாதசுவாமி கோயில்
ஓமாம்புலியூர்—பிரணவவியாக்கிரபுரீசுவரசுவாமி கோயில்
கோவிலூர்—மந்திரபுரீசுவரர் கோயில்
அச்சுதமங்கலம்—சோமநாதசுவாமி கோயில்
தேவூர்—மதுரபாஷிணி அம்பாள் கோயில்
குடந்தை—நாகேசுவரசுவாமி கோயில்
கோடாலிகருப்பூர்—சொக்கநாதசுவாமி கோயில்
மீஞ்சூர்—ஏகாம்பரநாதர்—வரதராஜபெருமாள் கோயில்கள்
சங்ககிரி—சோமேசுவரப்பெருமாள் கோயில்
பண்ருட்டி—வாசவகன்னிகாபரமேசுவரி அம்பாள் கோயில்
கொத்தப்புள்ளி—கதிர்நரசிங்கப்பெருமாள் கோயில்
தெ. விருத்தாங்கன்—சுவர்ணபுரீசுவரர் கோயில்
சின்னமனூர்—பூலானந்தீசுவரர் கோயில்
திருக்கோடிக்காவல்—திருக்கோடீசுவரசுவாமி கோயில்
சென்னை-புரசை—வேம்படிவிநாயகர் கோயில்
திண்டுக்கல்—ஆஞ்சநேயப்பெருமாள் கோயில்
திண்டுக்கல்—காளகஸ்தீசுவரர் கோயில்
திருவாஞ்சியம்—மங்களாம்பிகை கோயில்
அம்பாசமுத்திரம்—கிருஷ்ணசுவாமி கோயில்
குளித்தலை—நீலமேகப்பெருமாள் கோயில்
பெரம்பலூர்—பிரம்மபுரீசுவரர் கோயில்
திருமுருகன்பூண்டி—முருகநாதசுவாமி கோயில்
மதுரை—கூடலழகர் கோயில்
பூவாளூர்—திருமூலநாதசுவாமி கோயில்
கோயம்புத்தூர்—கோனியம்மன் கோயில்
சென்னை—மல்லீசுவரர் சென்னகேசவப்பெருமாள் கோயில்
வடமதுரை—சௌந்தரராஜப்பெருமாள் கோயில்
பள்ளக்கால்—நரசிங்கசுவாமி வகையருக் கோயில்கள்
கொல்லமலை—சிவலோகநாதர் கோயில்
கூடலூர்—கூடலழகியப்பெருமாள் கோயில்
தாந்தோணிமலை—கல்யாணவெங்கட்டரணக் சுவாமி கோயில்
திருப்புன்கூர்—சிவலோகநாதசுவாமி கோயில்
வடபழனி—வடபழனி ஆண்டவர் கோயி
கே. ஆடூர்—நிர்த்தபுரீசுவரர் கோயில்
சங்கரநயினார் கோயில்—சங்கரநாராயணசுவாமி கோயில்
ஓகளூர்—வரதராஜப்பெருமாள் கோயில் கோடி அர்ச்சனை விழா
காரைக்குடி—கொப்புடையம்மன் கோயில்
பாளையங்கோட்டை—இராஜகோபாலசுவாமி கோயில்
சிவகிரி—பாலசுப்பிரமணியசுவாமி கோயில்

திருக்குடந்தை :—*சக்கரபாணிசுவாமி கோயிலில் மகோற்சவம் 11—2—62 முதல் 19—2—62 வரை நடைபெற்றது.*

கச்சானம் :—*கச்சனேசுவர சுவாமி கோயிலில் 2—2—62ல் நவக்கிரகங்கள் நூதனப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அன்று மாலை இலட்சார்ச்சனை பூர்த்தி விழாவும் நடைபெற்றது.*

வேலூர் :—*நடுநக்கர் மத்தியபதீசுவரர் கோயிலில் திருவெம்பாவை திருப்பாவை மாநாடு 10—1—62ல் நடைபெற்றது.*

திருச்செந்தூர் ;—*சுப்பிரமணிய சுவாமி கோயிலில் சென்னை முதலமைச்சர் திரு. காமராஜர், லோக சபை அங்கத்தினர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஆகிய இருவரும் 5—2—62ல் வழிபட்டுச் சென்றார்கள்.*

திருப்புறம்பயம் :—*சாட்சிநாதசுவாமி கோயிலில் மகோற்சவம் 9—2—62 முதல் 18—2—62 வரை நடைபெற்றது.*

வேளூர்:—*நடுநக்கர் மத்தியபதி ஈசுவரசுவாமி கோயிலில் 6—2—62முதல் 15—2—62 வரை மாசித் திருவிழா நடைபெற்றது.*

செய்திகள்

திருப்போரூர்:—கந்தசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9—2—62 முதல் 23—2—62 வரை நடைப்பெற்றது. சமயச்சொற்பொழிவுகளும் நடைப்பெற்றன.

திருசிரபுரம் :—நாகநாதசுவாமி கோயிலில் மாசிமகத்திருவிழா 9—2—62 முதல் 22—2—62 வரை நடைபெற்றது.

திருவொற்றியூர் :—தியாகராஜசுவாமி கோயிலில் மாசிபிரமோற்சவம் 9—2—62முதல் 20—2—62 வரை நடைபெற்றது.

திருப்பேரூர் :—பட்டீசுவரசுவாமி கோயிலில் மார்கழி முதல் நடைபெற்றுவந்த கோளறுபதிகப் பாராயணம் 5—2—62ல் நிறைவுற்றது.

மதுரை:—மீனாட்சிசுந்தரேசுவரர் கோயிலிலுள்ள நவக்கிரகங்களுக்கு 3—2—62முதல் 5—2—62 வரை விசேஷ அபிஷேக, அர்ச்சனை, தீபாராதனைகள் செய்விக்கப்பெற்றன.

திருவாஞ்சியம் :—வாஞ்சிநாதர் கோயிலில் மாசி மகப்பெருவிழா 9—2—62 முதல் 19—2—62 வரை நடைபெற்றது.

திருக்குறுங்குடி:—வைஷ்ணவ நம்பி சந்நிதியில் தை 18முதல் 26 வரையிலும், லெட்சுமி நரசிம்மனுக்கும் சுதர்ஸன ஆழ்வானுக்கும் விசேஷ திருமஞ்சனாதிகளும், பாராயணங்களும் நடைபெற்றன.

வழுவூர்:—வீரட்டேசுவரர் கோயிலில் பிட்சாடன மகோற்சவம் 17, 18, 19—2—62 தேதிகளில் நடைபெற்றது.

கடிகாசலம் :—யோகலட்சுமி நரசிம்மசுவாமி கோயிலில் தவனோற்சவம் 16—2—62ல் நடைபெற்றது.

அழகர்கோயில் :—கள்ளழகர் கோயிலில் சுந்தரராஜப்பெருமாளின் கஜேந்திரமோட்சம், தெப்போற்சவம் விழாக்கள் 18, 19—2—62 தேதிகளில் நடைபெற்றன.

திருமோகூர் :—காளமேகப்பெருமாள் கோயிலில் கஜேந்திர மோட்சஉற்சவம் 19—2—62ல் நடைபெற்றது.

செட்டிகுளம் :—ஏகாம்பரேசுவரர் கோயிலில் எண்கோள் சேர்க்கையை முன்னிட்டு விசேஷ ஆதாராதனைகள் 4, 5—2—62 தேதிகளில் நடைபெற்றன.

பெருஞ்சேரி :—வாகீசுவரசுவாமி கோயிலில் ஏகதின உற்சவம் 16—2—62 முதல் 19—2—62 வரை நடைபெற்றது.

திருச்சத்திமுற்றம் :—சக்திவனேசுவரசுவாமி கோயிலில் ரதசப்தமி தீர்த்தவாரிஉற்சவம் 11—2—62ல் நடைபெற்றது.

இராமேசுவரம் :—இராமநாதசுவாமி கோயிலில் சிவராத்திரிப்பெருவிழா 24—2—62 முதல் 8—3—62 வரை நடைபெறும்.

திருஅம்பர் :—பிரம்மபுரீசுவரசுவாமி கோயிலில் மகோற்சவம் 16—2—62 முதல் 20—2—62 வரை நடைபெற்றது.

ஆடுதுறை :—அபராதரட்சமேசுவரர் கோயிலில் மாசிமக மகோற்சவம் 19—2—62ல் நடைபெற்றது.

திருமுருகன்பூண்டி :—திருமுருக நாதசுவாமி கோயிலில் தேர்த்திருவிழா 13—2—62 முதல் 24—2—62 வரை நடைபெற்றது.

திருத்தணி : சுப்பிரமணியசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9-2-62 முதல் 20-2-62 வரை நடைபெற்றது.

அதிராம்பட்டினம் : அபயவரதேசுவரசுவாமி கோயிலில் தை வெள்ளி உற்சவம் 9-2-62-ல் நடைபெற்றது.

இளையாத்தங்குடியில் பாவை மாநாடு

இளையாத்தங்குடியில் ஸ்ரீ காஞ்சி காம கோடி பீடம் ஜகத்குரு சங்கராச்சாரியாள் சந்நிதானத்தில் 3—1—62-ல் திருப்பாவை திருவெம்பாவை மாநாடு ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள், ஸ்ரீகைலாசநாத சுவாமி கோயில்களின் சார்பில் நடைபெற்றது. காலையில் வேத பாராயணம், மேளவாத்தியம், குழந்தைகளின் பாவை பாடல்களுடன் அலங்கரிக்கப் பட்ட தேவார—திவ்யப்பிரபந்த திருவேடுகள் வீதி வலமாக எடுத்து வரப்பட்டு பாவை மாநாட்டுப் பந்தலை அடைந்தன. பக்கத்து ஊர்களிலிருந்து வந்திருந்த பாவைப் பாடல்களில் தேர்வு பெற்ற மாணவ-மாணவிகட்கு ஸ்ரீசுவாமிகள் அவர்கள் பரிசுகள் வழங்கினார்கள். தேவஸ்தான ஓதுவார் திரு. வைத்தியநாத தேசிகரும், மதுரை திரு. பாலகிருஷ்ண அய்யங்காரும் கடவுள் வாழ்த்துப்பாட விழா தொடங்கியது. ஸ்ரீ ஆச்சாரிய சுவாமிகள் விழாவைத் துவக்கி வைத்துச் சொற்பொழிவாற்றினார்கள்:—

"குழந்தைகளுக்கு நல்ல குணம், செய்கை உண்டாக வேண்டும். அப்பொழுது தான் பெரியவர்கள் ஆனபின் உண்மையான தொண்டாற்ற முடியும். வயதானவர்கள் குழந்தைகளுக்குப் பக்திப் பாடல்களை மனப் பாடம் செய்வதற்கான காரியங்களைச் செய்ய வேண்டும். ஆண்டவனை நினைத்து, துதித்து அருள் வாக்காகப் பாடிய தொன்மையான பாசுரங்கள் நிறைய இருக்கின்றன. இறைவனைக் கண்ணால் பார்த்து அற்புதங்கள் செய்த அப்பெரியார்களின் பாக்களில் ஒரு பத்தாவது பாடும்படி செய்தால் நாட்டிற்கே உலகிற்கே நாம் செய்யும் பெருந்தொண்டாகும். ஒவ்வொருவரும், ஒவ்வொருவருக்கு எவ்வளவு சொல்லிக்கொடுக்க முடியுமோ, அப்படிச் செய்து குழந்தைகளை ஊக்குவிக்க வேண்டும். எல்லா கோயில்களிலும் வருடத்தில் ஒரு மாதமாவது அப்படிப்பாட ஏற்பாடு செய்திருக்கின்றனர். முடிந்த அளவு ஐப்பசி, கார்த்திகையிலேயே முன்னேற்பாடு செய்து மார்கழி எங்கும் விடாமல் நடத்த வேண்டும். பலதுளி பெருவெள்ளம் என்பது போல ஆங்காங்கு அப்படியப்படி செய்யப்படுகின்ற சிறிய முயற்சிக்கும் பலன் உண்டு. எல்லாத்

குழந்தைகட்கும் ஈசுவர அனுக்கிரகம் உண்டாகும்.

குணம் என்பது கடையில் வாங்கும் சரக்கு அல்ல. அது பழக்க வழக்கங்களாலும், கடவுள் அருளாலும் அமைய வேண்டும். மகான்களின் அருள்வாக்குகளை சிறு குழந்தைகளை "சிற்றஞ் சிறுகாலே" என்று கூறியிருப்பது போல் நெட்டுருச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தக் காலத்துப் பாடல்களில் மோகங் கொள்ளாமல் ஸ்ரீ ஆண்டாளின் திருப்பாவையிலும், ஸ்ரீ மாணிக்கவாசகரின் திருவெம்பாவையிலும் குறைந்த அளவிற்கு ஒரு பத்தாவது பாடச் செய்ய வேண்டும்.

எக்காலத்திலும் அதுவும் இக்காலத்திலும் மிகவும் அவசியமாகிறது. நம் நாட்டில் நம் மதம் எப்பொழுது தோன்றிற்று என்று சொல்ல முடியாது. சனாதனமானது வைதிக மதம். சைவத்திற்கும், வைஷ்ணவத்திற்கும் வைதிக மென்றே பெயர். வேதத்தை அடிப்படையாகக் கொண்டது. ஜோசியர் ஜாதகம் எழுதுகிறார். சிலர் தம் மதம் தோன்றி ஆயிரம் வருஷமென்பர். சிலர் நாலாயிரம் என்பர். நம் மதத்திற்குத் தோன்றிய காலமே இல்லை, அனாதியானது; தொன்று தொட்டு வருவது.

நமக்குப் பிரசாரம் அவசியமில்லை. நமது மத பக்தி பாடல்கள்போல் வேறெதிலும் இல்லை. இனியும் வரமுடியாது. அந்தந்த மதத்திற்கு, அவர்கள் மத புத்தகத்திலிருந்தே நிச்சயமாய் சிலவாவது, சில சொற்களாவது தெரியும். ஆனால் நம் மதத்தினர் பலருக்கு அப்படித் தெரியாது. கிறிஸ்தவர்கள் ஞாயிறுகளில் மாதாகோயில் செல்கின்றனர். முஸ்லிம்கள் வெள்ளிகளில் மசூதி செல்கின்றனர். ஆனால் நம் தமிழ்ப் பிள்ளைகள் எங்கு செல்வர். சினிமா செல்வர் (சிரிப்பு). காரணம் என்ன? நமக்கு அந்த எண்ணம் இல்லை. அந்தப் பாவம் நமக்குத்தான். அதுவும் எனக்குத்தான். நாம் தயார் செய்ய வேண்டும்; ஏற்பாடு செய்ய வேண்டும்; நமது மத நூல்கள் ஏராளமாய், எளியதாய், ஆழ்ந்த கருத்துக்களுடையதாய் இருக்கின்றன. நாம் செய்த செய்கிற குற்றம், அவைகளிலிருந்து சில சொற்கள் கூட, இரண்டொரு சீரிய கருத்துக்களைக்கூடத் தெரியப்படுத்தாமல் விட்டுவிட்டோம். அதைத் தெரியப்படுத்திவிட்டால் நம்மிடம் ஒருவரும் வரமுடியாது. நம்மிடம் எல்லையற்ற நூல்கள் இருக்கின்றன. திருமுறைகள், திவ்வியப் பிரபந்தம், புராணங்கள், இதிகாசங்கள் முதலியன பால் சமுத்திரங்கள்போல் இருக்கின்றன. பாலைக்கடைந்து வெண்ணெயைத் தருவது போல, சாரமாக நம் தமிழ் நூல்கள் இருக்கின்றன. அவைகளை நாம் புறக்கணித்து விட்டோம். நஷ்டம் யாருக்கு. பிற்காலத்தில் பாவத்திற்கு நாம்தான், நான் தான் காரணம்.

ஆகையால் அடுத்த ஆண்டு முதல் எப்படியாவது ஏற்பாடு செய்து, நம் குழந்தைகளை பாவைப்பாக்களை மனப்பாடஞ்செய்ய முயற்சிக்க வேண்டியது நமது கடமை. ஆண்டாள் குழந்தைப் பருவத்திலேயே பக்திகொண்டு பாட ஆரம்பித்தாள். மாணிக்கவாசகர் இளமையில் பக்தியில் ஈடுபட்டு, நம் குழந்தைகள் வாழையடி வாழையாகப் பயில, பாட சிவபெருமானே அப்பாடல்களை நமக்கு எழுதித் தந்துள்ளார். நமக்கு சுதந்திரம் வந்தும் பண்பு இல்லை. நம் நாட்டுப்பண்டைய பண்பும், ஆண்டாள் பக்தியும் உண்டாக பிள்ளைப் பருவத்திலேயே வித்திட்டு பக்தி, பண்பு, அன்புப் பயிர் வளர்ப்போம்.

கெட்டி மரம் காற்றில் அசையாது. ஆனால் இலேசான மரங்கள் விழுந்து விடும். நமக்குப் பகைவர்கள் வெளிக்காற்றைவிட உள்காற்று பலமாயிருக்கிறது. ஆகையால் குழந்தைகளை நாம் குணமும், பண்பும், பக்தியும் உள்ளவர்களாக்கி விட்டால், பலமாகி விடுவோம்; பயமில்லை. அந்தப் பணியில் ஈடுபடுவோம். வேண்டுவது ஆண்டாளின் இடையறு பக்தி, மாணிக்கத்தின் மனப்பான்மை. இவைகள் நமக்கு எடுத்துக்காட்டு. மாணிக்கவாசகரை அவர் பாடிய "பாக்களின் பொருளென்ன" எனக் கேட்டதற்கு இவ்வளவுதான் என்று நடராஜன் உருவத்தையே காட்டினாராம்.

நாம் கூடி இருக்கும் இடம் இளையாத்தங்குடிக் கோயில். இது பல அம்சங்களில் இணையற்றதாய் விளங்குகிறது. பல கோயில்கள் பார்த்திருக்கிறேன். துப்புரவிற்கும், நித்திய நைமித்தியங்களுக்கும், அறநிலையங்களை எப்படி ரட்சிப்பது பணிசெய்வது முதலியவற்றிற்கும் இது ஒரு ஒப்பற்ற வழி

காட்டியாய் விளங்குகிறது. இக்கோயிலும் இங்கு கலந்து கொள்ளும் ஸ்ரீ உத்தண்டராம பிள்ளையும், இடமும், மனுஷ்யரும் சிறந்த ஆதர்சனமாய் இருக்கின்றன. பின்னால் வரு பவர்கள் இக்கோயிலைப்போல் எல்லாக் கோயிலையும் நடத்தவும், உத்தண்டராம பிள்ளையைப்போல் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு செய்யவும் வேண்டும். ஈடில்லா கோயில்; இணையில்லா தொண்டர். அவரது தொண்டு எனக்கு மிகுந்த உற்சாகத்தை கொடுக்கிறது. எல்லாரும் உத்தண்டராம பிள்ளைபோல் செய்ய வேண்டும். நான் ஸ்தோத்திரம் செய்யவில்லை. அப்படி ஆக வேண்டும் என்பது தான் எனது நோக்கம்.

இப்பொழுது இருப்பவர்களும் ஆவன செய்கின்றனர். மேலும் ஊக்கங்கொண்டு நிறைய நற்பணிகள் ஆற்ற ஈச்வரன் அனுக்கிரகிக்க வேண்டும். அதுதான் நமது பிரார்த்தனை."

திரு. ஏ. உத்தண்டராம பிள்ளை பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்., முன்னாள் அறநிலையப் பாதுகாப்பு கமிஷனர் அடுத்துப் பேசினார். ஸ்ரீபரமாச்சாரியார் முன்னர் ஆசியுரை அறவுரை பின்னர் அடியேன் தெரிவித்துக்கொள்வது, நாம் எல்லோரும் தனித்தனியே நமக்கு நன்மை வேண்டுமென்று முதலில் விரும்புகிறோம். ஆனால் ஆச்சார்யரோ எங்கும், எப்பொழுதும், யாவரும், உலகமே க்ஷேமமாய் இருக்க வேண்டு மென்ற ஒரே பிரார்த்தனை புரிகிறார். அவர் நம் முன்னர் சிரித்துக் கொண்டே பேசினார். ஆனால் அதில் நீர் பூத்த நெருப்பு போல் மறைந்து கிடக்கும் உணர்ச்சி அதிகம். இடித்துக் குத்திக் காட்டினார். நம் தற்காலத்திய நிலைக்கு காரணம் நாமே; நமக்குப் பொறுப்புணர்ச்சிப்போதவே இல்லை. நம் குழந்தைகட்கு பண்பு உண்டாக்க, குணவான்களாக்கும் பணியில் நாம் ஈடுபடவேண்டும். இது விஷயத்தில் நாம் இதர மதத்தினர்களைப் பின்பற்ற வேண்டும். ஆனால், ஆதியும் அந்தமும் இல்லாக் கடவுளை ஒரு நூலிலோ ஒரு கோயிலிலோ அடக்கிவிட முடியாது. 'வேத நெறித் தழைத்தோங்க' என்றார் ஞானசம்பந்தர். 'வேதம் தமிழ் செய்தான்' என்றார் ஆழ்வார். நமது மதத்திற்குச் சைவம், வைணவத்திற்கு வேதம் அடிப்படை. இறைவன் நாமத்தை உலகில் பலவிதமாக அழைக்கப்படுகிறது. அரி, சிவன்என்று அழைக்கிறோம். நமது வாழ்க்கை செம்மைபட இறைவனைத் தொழுது, தூமலர் தூவி, துதிக்க வேண்டும். வாயாரப் பாட வேண்டும். பாடினால்தான் மனத்தை செம்மைப்படுத்திக் கொள்ளலாம். மனம் நிலையாது; சஞ்சலமானது. பாடினால் போதாது. அடிக்கடி நாமத்தைச் சொல்லவேண்டும், தியானிக்க வேண்டும். அப்படிச் செய்தே திருமுறைகளையும் திவ்வியப் பிரபந்தங்களையும் அருள் பொக்கிஷங்களாய் அருளாளர்கள், நமக்கு வழிகாட்டத் தந்திருக்கின்றனர். அடிக்கடி நாம் சொல்ல வேண்டும், கேட்க வேண்டும், பலரும் சொல்விக்கவும், கேட்பிக்கவும் செய்யவேண்டியது நம் கடன். மனதை ஒரு முனையில் இலேசில்சேர்ப்பிக்க முடியாது. ஒரு பெரியார் சொன்னார், பூஜை செய்வோருக்கு உதவி செய்; சேர்ந்து பஜி; அதில் ஈடுபடு; ஒருமைப்பாட்டிற்கு அதுவே வழி. எவன் உண்மை மனத்தோடு தோத்திரஞ் செய்கிறானோ அவனுக்கு அருள் கிட்டும்.

'கண்ணுக்கினியானை' என்று மணிவாசகரும், 'மனதிற்கினியானை' என்று ஆண்டாளும் அழைக்கின்றார்கள். சேக்கிழார் தென் திசையை வியக்கின்றார். அதன் நடுநாயகம் பாண்டி நாடு. அதில் அவதரித்தவர்களே, மாணிக்கவாசகரும், ஆண்டாளும். ஆனால் இருவரும் சோழ நாட்டிலுள்ள ஸ்ரீசிதம்பர நடராஜரிடமும், ஸ்ரீரங்கம் அரங்கநாதரிடமும் ஐக்கியமாயினர்.

ஸ்ரீ பரமாச்சாரியாள் அருளுரையில் கூறியது போல் நாம் எல்லாம் ஈச்வரன் முன் குழந்தைகளும் பெண்களும் ஆவோம். அவ்விறைவனது அடிகளைக் காட்டுவது அருட்பாக்கள். மழைபெய்ய, மக்கள்வாழ, அடியார்கட்குப் பணி செய்யப் பிரார்த்திக்கிறார்கள். அடியார்கள் மூலம்தான், நாம் இறைவனைக் காணமுடியும். குறிப்பாக, குழந்தைகளை மார்கழியில் பாடச்செய்து விட்டால் அதிலும் சிறப்பாக ஐந்தாவது வகுப்பு வயது சிறுவர் சிறுமிகளை மனப்பாடம் செய்யச் செய்வோமானால், அது அதில் ருசியை உண்டு பண்ணத் தூண்டுகோலாகும். திருவெம்பாவை, திருப்பாவைகளில் இல்லாத உண்மை வேறெதிலும் இல்லை. 19-வது பாடலில் குத்து விளக்கு எரிய என்கிறார். அதில் பெரிய உண்மை பொதிந்திருக்கிறது. அதை எங்கும் எடுத்துச் செல்லலாம். இருளைப்

*திருத்துருத்திக் கோயில் கல்வெட்டு வரலாறு

[வித்துவான் திரு வை. சுந்தரேசவாண்டையார், திருவையாறு.]

திருத்துருத்தி என்பது தஞ்சாவூர் ஜில்லா மாயூரந் தாலூகாவில் இக்காலம் குற்றாலம் என்று அழைக்கப்பெறும் ஊரின் பழம்பெயராகும். குத்தாலம் என்பது ஒருவகை ஆத்திமரம் என்பர் காலஞ் சென்ற டாக்டர் உயர்திரு. ஐயர் அவர்கள் (திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் முதற்பாகம், பக்கம் 295 அடிக்குறிப்பு) அம்மரத்தைத் தலவிருட்சமாக உடைமையின் குத்தாலம் எனவும் வழங்கப்படும். குத்தாலம் என்பதன் சிதைவே குற்றாலம் என்பது. இது சைவசமய குரவர்கள் நால்வராலும் பாடப்பெற்ற பழமையும் பெருமையும் வாய்ந்தது. சுந்தரமூர்த்தி நாயனார் இத்தலத்துக்கு எழுந்தருளி இறைவரை வணங்கி "அடியேன்மேல் உற்ற பிணி வருத்தமெனை ஒழித்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார். அதற்கு இறைவர் "வரமலர் வண்டறை தீர்த்த வடகுளத்துக்குளி" என்று திருவாய்மலர்ந்தருளினார். சுந்தரமூர்த்தி நாயனார் அந்தத் தீர்த்தத்தை அடைந்து அதில் முழுகினார். உடனே அவருடைய திருமேனி நோய் நீங்கிப் பிரகாசம் அடைந்தது.

* கல்வெட்டுத் துறையாளர் இக்கோயிலைப் பற்றி வெளியிட்டுள்ள 1926 ஆம் ஆண்டு அறிக்கை கொண்டும், நேரில் முழுவதும் இக்கோயில் கல்வெட்டைப் படித்தும், இவ்வரலாறு எழுதலாயிற்று.

போக்கும். அதே போல பெரியோர்களின் அருள்வாக்கு விளக்கு, நம் அஞ்ஞான இருளைப் போக்குவது. இறைவன் ஒருபொழுதும் தூங்கவில்லை. அவருக்குத் தூக்கமும் இல்லை. உலகை ஆட்டி வைக்கிறார். ஞானசம்பந்தர் தொண்டர்கள் உள்ளம்தான் கோயில் என்கிறார். சமய உண்மைகளைப் பாவைப் பாக்களில் காணலாம். வாழ்க்கைக்கு வேறு அருள் நூல்கள் வேண்டுவதில்லை.

'வாரவழிபாடு' என்பதில் வாரம் என்றால் அன்பு. அன்புடன் வாழ்ந்தால் ஆண்டவன் வழிபாடு ஆகும். எப்பொழுதும் எங்கும் அன்புடன் நடந்தால் வழிபாடாகும். பூஜைக்கு மணி ஓசை சின்னம். சின்னங்கள் கேட்கச் 'சிவனென்றே வாய்திறப்பாய்' என்றார். ஆகையால் குழந்தைகளையாவது நல்வழிப்படுத்த, இந்த நற்பணியில் ஈடுபட, நம்மைத் தூண்டுகிறார்கள். ஏன் இரு பாவைகளையும் இணைக்கிறார்கள். இறைவன் ஒருவனே. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பது திருமந்திரம். எல்லாவற்றிற்கும் வேதமே அடிப்படை, அதுதான் நமது வைதிக மதம்.

நாம் எல்லோரும் பெரு நோக்கு கொண்டு வேற்றுமையில் ஒற்றுமைகண்டு தொண்டு செய்ய வேண்டுகிறேன். நான் இங்கு ஆச்சாரியாரின் ஆசிபெற வந்திருக்கிறேன்; தலைமை தாங்க அல்ல.

பிறகு நாகர்கோயில் மகாவித்வான் திரு. ஆறுமுக நாவலர், இராமநாதபுரம் விசேஷ டிப்டி கலெக்டர் திரு. இராமச்சந்திர பத்தர், மதுரை அறநிலையத்துறைத் துணை ஆணையாளர் திரு. ஏ. சக்கரை. பி.ஏ., பி.எல். முதலியோர்கள் பாவை மாநாட்டின் முக்கியத்தையும், சைவ வைணவ சிறப்பையும் ஒற்றுமையையும் பற்றிச் சிறப்பாகப் பேசினர்.

ஸ்ரீசுவாமிகள் அவர்கள் திரு. உத்தண்டராம பிள்ளை அவர்கட்கு பொன்னுடை போர்த்தி சிவலிங்கம் பதிக்கப்பெற்ற டாலர் கோத்த தங்கத்தில் கட்டிய ருத்திராக்ஷ மாலையை அவருடைய சென்றகாலசேவையைப் பாராட்டியும் மேலும் தொடர்ந்து அருட்பணி செய்ய ஆசியாகவும் அணிவித்தார்கள்.

இரவு மதுரை திரு. டி. கே. பாலகிருஷ்ண அய்யங்கார் குழுவினரால் பாவைப் பாடல்கள் கலா நிகழ்ச்சியுடன் விழா முடிவுற்றது.

தேவஸ்தான மானேஜர் திரு. சுவாமிநாத ஐயரின் முயற்சியால் மாநாடு அதி விமரிசையாய் நடைபெற்றது.

இச்செய்தியை,

> மிக்கபுனல் தீர்த்தத்தின் முன்அணைந்து
> வேதமெலாம்
> தொக்கவடி வாயிருந்த துருத்தியார்
> தமைத்தொழுது
> புக்கதனில் முழுகுதலும் புதியபிணி
> அதுநீங்கி
> அக்கணமே மணியொளிசேர் திருமேனி
> ஆயினார்.

என்னும் சேக்கிழார் பெருமான் திருவாக்கால் அறியலாம். புதியபிணி நீங்கப்பெற்றதை இத்தலத்துப் பதிகத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் "என்னுடம்படும் பிணியிடர் கெடுத்தானை" என்று திருவாய்மலர்ந்தருளியிருப்பது நோக்கத்தக்கது. இவ்வடகுளம் கோயிலுக்குள் இருக்கிறது. இக்குளத்தின் மேல் கரையில் சுந்தரமூர்த்தி நாயனார்க்குத் தனிக் கோயில் உண்டு. இந்நாயனாரின் பிரதிமம் கண்கவரும் வனப்பில், முடி, உடைவாள் இவைகளுடன் இறைவனைத் தாழ்ந்து இறைஞ்சும் நிலையில் இருக்கின்றது. இவர்க்கு உடைவாள் இருப்பது, நரசிங்கமுனையரையர் என்னும் பல்லவ மன்னனால் மகன்மை முறையுடன் வளர்க்கப்பெற்ற வரலாற்றை உணர்த்துவதாகும்.

இத்தலத்துக்குத் திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய "திருத்துருத்திப் புராணம்" செவ்விய முறையில் அச்சிடப்பெற்றுள்ளது.

திருக்கோயில் தூய்மையாய் இருக்கின்றது. இத்துணைச் சிறப்புடைய இக்கோயில் தருமபுர ஆதினத்துக்குச் சொந்தமானது.

இத்திருக்கோயிலில் சோழமன்னர்களில் முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், இரண்டாம் இராசேந்திரன், விக்கிரம சோழன், மூன்றாம் இராசேந்திரன் இவர்கள் காலங்களிலும்; விசயநகர வேந்தர்களில், புஜபல வீரப்பிரதாப கிருஷ்ணதேவ மகாராயர், கம்பண்ண உடையார் இவர்கள் காலங்களிலும் செதுக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் உள்ளன.

திருக்கோயிலைக் கட்டியவர்

இத்திருக்கோயிலைக் கற்றளியாகக் கட்டியவர் உத்தம சோழனது தாயாராகிய செம்பியன்மாதேவியார் ஆவார். இச்செய்தி இக்கோயில் கருப்ப இல்லின் கிழக்கிலும் வடக்கிலும் பொறிக்கப்பெற்று "ஸ்வஸ்தி ஸ்ரீகோவிராஜ கேசரிபன்மற்கு யாண்டு எ-ஆவது" என்று தொடங்கும் கல்வெட்டால் அறியக் கிடக்கின்றது.

கோயில் கட்டப்பெற்ற காலம்

ஈண்டுக் குறிக்கப்பெற்ற இராசகேசரி பன்மர் முதலாம் இராசராச மன்னர் ஆவர். இவர் கி. பி. 985 முதல் கி. பி. 1014 வரை சோழமண்டலத்தை ஆண்டவர். இவர் அரியணை ஏறிய கி. பி. 985 உடன் எழைக் கூட்டக் கி. பி. 992 ஆகின்றது. இந்தக் கி. பி. 992-ஆம் ஆண்டே கோயில் கட்டி நிறைவெய்திய காலமாகும். எனவே கோயில் கட்டப்பெற்று இற்றைக்கு 970 ஆண்டுகள் ஆகின்றன.

கோயில் நிலைபெற்றுள்ள இடம்

இத்திருக்கோயில் சிவநெறிக் குரவராகிய திருநாவுக்கரசு பெருந்தகையார் காலத்தில் (கி. பி. ஏழாம் நூற்றாண்டில்) காவிரியின் நடுவில் இருந்தது. இச்செய்தி "பொன்னியின் நடுவுதன்னுள் பூம்புனல் பொலிந்து தோன்றும் துன்னிய துருத்தியானை"—என்னும் அவரது தேவாரப் பகுதியால் விளங்கும். அது கருதியே இதற்குத் துருத்தி என்று பெயர் ஏற்பட்டுள்ளது. துருத்தி எனினும் அரங்கம் எனினும் ஒக்கும். துருத்தி என்பதற்கு ஆற்றிடைக்குறை என்று பொருள். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் இருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்து இறைவரை "காவிரி அகன்கரையுறைவார்" என்று குறிப்பிட்டிருப்பதால், அவர் காலத்தில் இதுகரைக்கோயில் ஆயிற்று என்பது வெளிப்படை. முதலாம் இராசராசன் காலத்தில் (பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்) இக்கோயில், காவிரிக்குத் தென்கரையில் இருந்தது. இச்செய்தியைத் "திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட கோவிராஜகேசரி பன்மற்கு யாண்டு கஎ (17) ஆவது தென்கரை உய்யக்கொண்டார் வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டுத் தேவதானம் வீங்குநீர்த் துருத்தி சொன்னவாறறிவார் ஆடுகின்ற பொற்பலகை விடங்கருக்கு"—என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியக் கிடக்கின்றது. [தென்கரை—காவிரிக்குத் தென்கரை].

இறைவரின் திருப்பெயர்

இக்கோயிலில் எழுந்தருளி யி ருக் கு ம் இறைவர்க்குச் சொன்னவாறறிவார், கற்றளி யுடைய மகாதேவர், வீங்குநீர்த்துருத்தியுடை யார் என்னும் பெயர்கள் வழங்கி வந்துள் ளன. இவற்றுள் கற்றளியுடைய மகாதேவர் என்னும் பெயர் முதலாம் இராசேந்திர சோழனின் நான்காம் ஆண்டுக்கல்வெட்டிலே முதன் முதலாகக் காணப்படுகின்றது.

திருக்கோயிலின் பெயர்

இக்கோயில், வீங்கு நீர்த்துருத்தியுடை யார் கோயில், சொன்னவாறறிவார் கோயில், செய்ய பாதஞ்சேர் கழல்வலார் பொற் கோயில் என்னும் பெயர்களுடன் வழங்கப் பட்டுள்ளது. இச்செய்தி "ஆக நிலம் எட்டு மாவில் மேனோக்கின மரமும் கீழ்நோக்கிய கிணறும் அகப்பட இறையிலி செய்து கொடுத்து இறைப்பொருளுக்கும் விலைப் பொருளுக்கும் வீங்குநீர்த் துருத்தியுடையார் கோயில், சொன்னவாறறிவார் கோயில் செய்யபாதஞ்சேர் கழல்வலார் பொற்கோயில் பிச்சன் வழிகொண்ட காசு ௩௦ (முப்பது) இக்காசு முப்பதுங்கொண்டு இந்நிலம் எட்டு மாவும் சந்திராதித்தவற் அநுபவிக்கக் கட வார்களாகவும்" என்னும் அர்த்த மண்டபத் தின் வடபுறத்தில் விக்கிரம சோழதேவரின் ஐந்தாம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல் வெட்டுப் பகுதியால் விளங்கும்.

வழிபாடு

இத்திருக்கோயிலில் சிறுகாலை, உச்சியம் போது, அந்திப்போது, அர்த்தயாமம் என் னும் நான்கு காலங்களில் வழிபாடுகள் நடை பெற்று வந்தன.

திருவமுது வகைகள்

வழிபாடு நடக்குங் காலங்களில் பயற் றுப்பொங்கல் (கும்மாய அமுது), பருப்ப முது, தயிரமுது ஆகிய இவைகள் பொரிக் கறியமுதுகளுடன் நிவேதிக்கப்பட்டு வந்தன.

வாத்திய வகைகளும் பிறவும்

வழிபாடு நடக்குங் காலங்களில் பறை ஒன்று, மத்தளம் நான்கு, சங்கு இரண்டு, காளம் இரண்டு, செகண்டிகை ஒன்று, தாளம் ஒன்று, கைம்மணி இரண்டு இவை கள் ஒலிக்கப்பட்டு வந்தன. நடனம் இருந்து வந்தது.

ஆண்டு விழா

இத்திருக்கோயிலில் வைகாசித்திங்களில் திருவிழா நடந்து வந்தது. இச்செய்தி "இதில் உடையார் சொன்னவாறறிவார் வைகாசித் திருநாள் திருவெழுச்சிக்கு வண்ணான் செய்நிலம் காலும், கும்பிட வந்து பூசித்தார் அமுது செய்கைக்கு நிலம் முக்காலே அரைமா அரைக்காணியும் ஆக நிலம் சந்திராதித்த வரை இறையிலியாக நாங்களே அநுபவிக் கக்கடவோமாகவும்" என்னும் விக்கிரம சோழனது எட்டாம் ஆண்டில் செதுக்கப் பட்ட கல்வெட்டாற் பெறப்படுகின்றது.

பிற செய்திகள்

இக்கோயிலுக்குக் கல்யாண ஆலயம் என்று பெயர்வைக்கப்பெற்றிருந்தது என் பதைக் கிரந்தத்தில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டு அறிவிக்கின்றது. இவ்வூருக்கு அருகே வடபாலுள்ள கண்டியூர் இக்கோயிற் கல்வெட்டில் குறிக்கப்பெற்றிருக்கின்றது. அவ்வூர் விக்கிரமசோழன் கல்வெட்டில் காணப்படுவதால் பழமைவாய்ந்த ஊராக வேண்டும். [இவ்வூர் வேறு, கண்டியூர் திரு வீரட்டம் வேறு].

நாட்டின் பாகுபாடு

இவ்வூர் முதல் இராசராச சோழன் காலத்தில் உய்யக்கொண்டார் வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டுக்கு உட்பட்டிருந்தது. முதற் குலோத்துங்கன் காலத்தில் இவ்வள நாட்டின் பெயர் மாற்றப்பட்டு இராசநாரா யண வளநாடு என்னும் பெயருடன் நிகழ்ந் தது. மூன்றாவது குலோத்துங்கன் காலத்தில் இந்த இராசநாராயண வளநாடு, ஜயங் கொண்ட சோழவளநாடு என்னும் பெயரெய் திற்று. அப்பெயரே பிற்பட்ட காலத்தும் நின்று நிலவுவதாயிற்று.

கோயிலின் நிர்வாகச் சிறப்பு

சிறு கோயில்களெல்லாம் ஊர்ச்சபை யார்களின் ஆதிக்கத்தில் இருந்துவந்தன. அச் சபையார் கோயில்களின் திருமுற்றங்களில் கூட்டம் குறைவறக் கூடியிருந்து நிறைவேற் றிய தீர்மானங்களின்படியே கோயிலைப் புரந்துவந்தனர். இவைகளெல்லாம், "திரிபு வனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு யாண்டு மூன்றாவது மகரஞாயிற்று அபரபக்ஷத்துத் தசமியும் திங்கட்கிழமையும்

பெற்ற அத்தத்து நாள் விருதராஜ பயங்கர வளநாட்டு நல்லாற்றூர் நாட்டுப் பிரமதேயம் பூலோக மாணிக்கச் சதுர்ப்பேதி மங்கலத்து மகாசபையோம் நம்மூர்த் திருமேற்கோயில் அழகிய மணவாள ஆழ்வார் கோயில் திருமுற்றத்தில் கூட்டம் குறைவரக் கூடியிருந்து, தென்கரை ராஜநாராயண வளநாட்டு வீங்குநீர்த் துருத்தியுடையார் சொன்னவாறறிவார் கோயில் ஆதிசண்டேசுவர தேவர்க்கு இறையிலியாக மடப்புறம் செய்துகொடுத்த நிலமாவது"—என்னும் இக்கோயிலில் உள்ள விக்கிரம சோழ தேவரின் மூன்றும் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுப் பகுதிகளால் அறியக் கிடக்கின்றன.

கோயிற் குருக்கள் திருவாராதனை செய்யும் பிராமணர் என்றும், திருவாராதனை செய்யும் நம்பி என்றும் வழங்கப்பட்டுள்ளனர். அவருக்கு நாடோறும் நெல்லுப் பதக்கு நானுழியாக ஓராட்டைக்கு நெல் எழுபத்தைங்கலங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. கோயில் பிராமணப்பிள்ளை திருவமுதாக்குதல், திருமஞ்சன நீர் எடுத்தல், திருமெய்ப்பூச்சுத் தேய்த்தல் (சந்தனம் அரைத்தல்), விதானம் பிடித்தல் ஆகியவைகளைச் செய்து வந்தனர். அவர்க்கு நிசதி நெல் குறுணி இருநாழியாக ஓராட்டை நாளைக்கு நாற்பத்தைங் கலங்கள் கொடுத்து வந்தனர். திருப்பள்ளித் தாமம் பறித்துத் தொடுப்பார்க்கு நிசதி நெல் குறுணிநானுழியும், திருவலகிடல் திருமெழுக்கிடல், இவைகளைச் செய்வார்க்கு நிசதி குறுணி இருநாழியும் திருமெய் காப்பார் இருவர்க்கு நிசதிநெல் முக்குறுணியும், கரணத்தான் ஒருவனுக்கு நிசதிநெல் பதக்கும், இராச நீதி ஓடி செய்வார்க்கு நிசதிநெல் பதக்கும் ஆகச் சம்பளங்கள் கொடுக்கப்பட்டு வந்தன. திருப்பதியம் பாடுவார் இருவர்க்கு எழுமா அரை நிலம் கொடுக்கப்பட்டிருந்தது. [திருப்பள்ளித்தாமம்—பூ]

அளிக்கப்பெற்ற நிவந்தங்கள்

முதலாம் இராசராச சோழரின் பதினுமும் ஆட்சியாண்டில் காவிரி நல்லூரில் இருந்த வலங்கை வேளைக்காரனை வீரானராமன் சொன்னவாறறிவார்க்கு அர்த்தயாம வழிபாட்டிற்கு உடலாக 360 கழஞ்சு பொன்னைத் திருத்துருத்திப் பிச்சனிடம் கொடுத்துள்ளான். இம்மன்னனின் பதினேழாம் ஆண்டில் நாங்கூருடையான் அமரன் பல்லவரையன் பொற்பலகை விடங்கருக்குத் திறநுந்தாவிளக்கு ஒன்றினுக்குத் தொண்ணூறு ஆடுகளை அளித்துள்ளான். முதலாம் இராசேந்திர சோழரின் நான்காம் ஆட்சியாண்டில் திருக்கற்றளி மகாதேவர்க்காகத் திருவழுந்தூர் நாட்டுப் பிர்மதேயம் வில்லவன் மாதேவி சதுர்வேதி மங்கலத்துச் சபையார் அத்தேவரின் பழைய அடியாராகிய சண்டேசுவரரிடம் 43 காசுக்கு எட்டு மாநிலத்தை விலையாவணம் செய்து கொடுத்துள்ளனர். இம்மன்னனுக்கு வெற்றியுண்டாகுமாறு கழுமலநாட்டு வீரசோழ நல்லூருடையான் புழுக்குக்கறி, மிளகு பொடிக்கறி, இவைகளுடன் சட்டிச்சோற்றைத் திருக்கற்றளியுடைய மகாதேவர்க்கு உச்சியம்போதில் நிவேதனஞ் செய்து சிவப்பிராமணர்களுக்கும், தபசிகளுக்கும் கொடுக்கும் பொருட்டுக் காவிரிநல்லூர்க் கீழ்க்கண்டத்தில் அரையே இரண்டு மாநிலத்தை வாங்கிக்கொடுத்திருந்தான். இம்மன்னன், இக்கோயிலில் மூத்த ராஜராஜ தேவர் காலத்தில் வெள்ளான் எழுந்தருளுவித்த கூத்துடையடிகளாரின் பிராட்டியார்க்குச் சிறுகாலை, உச்சியம்போது, இரவு ஆகிய முப்போதைக்கும் திருவமுதுக்காக முடிகொண்ட சோழபுரத்தில் நிலம் அளித்திருந்தான். பரகேசரிவன்மன் கோனேரின்மை கொண்டான் தன் ஆட்சியின் 12-ஆம் ஆண்டில் காவிரிநல்லூர் என்னும் ஊரைத் திருக்கற்றளி மகாதேவர்க்குத் தேவதான இறையிலியாக விட்டுள்ளான்.

"திருமாது புவியெனும் பெருமாதர்" என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியையுடைய விசய ராசேந்திர சோழமன்னனுக்கு வெற்றி யுண்டாகுமாறு கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள வெண்காடன் ஆடவல்லான் என்னும் வணிகன் சொன்னவாறறிவார்க்கு உச்சியம்போதில் திருவமுதை நிவேதனஞ் செய்து சிவப்பிராமணர்க்கு இடுமாறு இருபத்தைந்து காசைக் கொடுத்திருந்தான். [இங்குக் குறித்துள்ள விசயராசேந்திரன், இராசேந்திரன் II ஆவன்]

"திருமருவிய செங்கோல் வேந்தன்" என்று தொடங்கும் வேறு மெய்க்கீர்த்தியையுடைய இம்மன்னன் (இராசேந்திரன் II) இக்கோயிலில் திருவிழா எழுந்தருளும்

திருஞானசம்பந்தர் அருளிய திருமுறை

[திரு. மாணிக்கவாசக அடிகள், தஞ்சை]

முன்வந்த கட்டுரையில், திருமுறைகளுள் உணர்த்தப்பெறும் முழுமுதற் பொருள் இன்னதென்பது விளங்கிற்று. அப்பொருளே தமிழ்வேதப் பிரதிபாத்தியம். இவ்வுண்மையை அறியாதவர் மூவருள் ஒருவனாகக் கருதித்தாம் அறிந்தவற்றை வெளியிட்டு வருதல் எத்துணையும் உண்மைக் கூற்றாகாது. நம்மாழ்வார் திருவாய்மொழியுள் 'முனியே நான்முகனே முக்கண்ணப்பா' என்றது மூவருள் ஒருவனான உருத்திரனையே. சிவபரஞ்சுடரை அன்று. அதற்குப் பின்னரும் 'மேவித் தொழும் பிரமன் சிவன் இந்திரன் ஆதிக்கெல்லாம் காவிக்கமல முதற்கிழங்கே" என்றுள்ளது. இங்குப் பிரமனுக்கும் இந்திரனுக்கும் இடையில், 'சிவன்' என்றது உருத்திரனையே. பரசிவத்தை அன்று. நம்மாழ்வார் திருவாய்மொழியின் முடிவில் உள்ளதான "சூழ்ந்த கன்றாழ்ந்துயர்ந்த முடிவில் பெரும் பாழேயோ...சூழ்ந்தாயே" என்னும் திருப்பாசுரத்தைச், சைவர், சமயாதீதப் பழம் பொருளாகிய சிவபரம்பொருளுக்கும் உரியதாகக் கொள்ளினும் குற்றமில்லை. சைவ சித்தாந்தச் செம்பொருள் நிலை உணர்வார்க்கு அது.

அப்பரம்பொருளை வழிபடுவதே ஞானத் தெளிவு பெறுவதற்குரியதாகும். பேரின்பப் பேற்றிற்கு ஞானமும், ஞானத்தெளிவும், அத்தெளிவிற்கேற்ற நிலையும் அன்றி வேறு வழி இல்லை. இதனைத், 'தேன் இயன்ற நறுமாமலர்கொண்டு நின்று ஏத்தத்தெளிவு ஆமே" 'உள்நிறைந்த பெருமான் கழல் ஏத்த நம் உண்மைக்கதி ஆமே' எனவரும் திருவடிகள் உணர்த்துகின்றன.

சிவபரஞ்சுடர் தூயவுயிருடன் இரண்டறக் கலந்திருக்கின்றது. இதை அத்துவிதம் என்பர். இதை விரித்து விளக்குகின்றேன். சிவஞான போதத்தில்,

'மன்னுசிவன் சந்நிதியின் மற்றுலகம்
சேட்டித்த
தென்னும் மறையின் இயல்மறந்தாய்—
சொன்னசிவன்
கண்ணா உளம்விளையாற் கண்டறிந்து
நிற்குங்காண்
எண்ணான் சிவன் அசத்தை
இன்று'

என்னும் திருவெண்பா மும்முறை சிவ நாமத்தை முழக்குகின்றது. அம் மூன்றிடத்தும், ஆசிரியர் மாதவச் சிவஞான மாமுனிவர் அருளிய 1. 'பேரின்பத்துக்குக்காரணன்' 2. 'முற்றுணர்வினன்' 3. 'தூயதன்மையன்' என்பது. இப்பொருள் மூன்றனுள் ஒன்றான 'தூயதன்மை'யை அடையாத உயிர்க்கு எத்

தேவர்க்குப் பெருந்திருவமுதுக்கு நிவந்தம் அளித்திருந்தான்.

திரிபுவனச் சக்கரவர்த்திகள் மூன்றாம் இராசேந்திர சோழதேவரின் பதினைந்தாவது ஆட்சியாண்டில் குலோத்துங்க சோழநாட்டுத் திருவம்பலமுடையான் இக்கோயில் திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியாரின் திருமடைவிளாகத்தில் திருச்சம்பந்தன் திருமடத்துக்காகப் பதினான்கு கோல் மனையை 168 பொன்னுக்கு வாங்கிக்கொடுத்துள்ளான்.

சகம் 1440 அதாவது கி. பி. 1518–ல் விசயநகர அரசராகிய புஜபல வீரப் பிரதாப கிருஷ்ண தேவராயர் சொன்னவாறறிவார்க்கு சூலவரியாகத் தொண்ணூறு பொன்னை அளித்துள்ளார்.

அம்மன் கோயிலைப்பற்றிய செய்தி

சகம் 1552-ல் அதாவது கி.பி. 1630-ல் நாச்சியார் (அம்மன்) கோயில் சுற்றுமதில், உள்மதில், கோபுரம் இவைகள் பிப்பிலி சிதம்பர தீட்சதரால் கட்டப்பெற்றன. காவிரிக்குப் போகும் தெருவிற்குச் சிதம்பர தீட்சதர்புரம் என்று இவர் பெயர் வைக்கப் பெற்றுள்ளது. இச்செய்தியை வடகுள தீர்த்தக்கரையில் உள்ள கல்வெட்டு தெரிவிக்கின்றது.

தனை பிறவி எடுக்கினும் பேரின்ப வீடு கிட்டாது. அதனல், உயிர்கள் தூய்மைத் தன்மையை அடைதல் வேண்டும். அதுவே உயிர்களுக்கு முதலாய செயல். தூய்மைத் தன்மையை, நீதிநூல், "தூஉய்மை என்ப தவா இன்மை" என்றும், அது வருவதற்கு உரிய வழியை 'மற்று அது வாஅய்மை வேண்ட வரும்' என்றும் கூறிற்று. அவா இல்லார்க்கு ஒரு துன்பமும் இல்லை. அவா உடையார்க்கு எல்லாத் துன்பங்களும் முடிவின்றி இடைவிடாமல் வரும்.

'அவா இல்லார்க் கில்லாகும் துன்பம்அஃ [துண்டேல்
தவாஅது மேன்மேல்வரும்.' (குறள். 368)

உயிர்க்கு அவா முற்றும் இல்லாதொழியும் நிலையும் முற்றுணர்வு பெற்றொளிரும் நிலையும் ஒரே காலத்தில் அமைவன. அவாவும் சிறிது சிறிதாக நீங்கும். உணர்வும் சிறிது சிறிதாக ஓங்கும். 'அறிவு நுணுகி வர வர அறியாமையாகிய மலமும் அம்முறையே தேய்ந்து தேய்ந்து வருதல்' இங்கும் கொள்ளற்பாலதே. அவா இன்மை மும்மல நீக்கத்தின் ஒரு கூறு. அவா முற்றும் நீங்குதல் மும்மலம் முற்றும் நீங்குதலின் பாற்படும். மும்மல நீக்கம் வியாபகம். அவா நீக்கம் வியாப்பியம். அது கன்மமல நீக்கத்தில் அடங்குவது.

அவாவும் சிறிது சிறிதாகத்தான் நீங்கும். அறிவும் சிறிது சிறிதாகத்தான் ஓங்கும். "ஆன்மாக்களின் அறிவு தூல அறிவு ஆகலின், முதல்வன் வியாபகமாய் நின்றவாறே விளக்கினும், அவ்வாறு விளங்கமாட்டாது தத்தமக்கு ஏற்ற சோபான(படி) முறையே சிறிது சிறிதாக ஏகதேசமாய் விளங்கி விளங்கி மேம்பட்டு வந்ததே வியாபகமாய் விளங்குவது (ஆகிய) ஓர் இயல்பிற்று." (சிவஞானபோதமா பாடியம். சூ. 8. அதி. 1.)

"ஆன்மாக்களின் அறிவு அங்கனம் விளங்காத வழி நிகழும் அறியாமையாகிய மலமும் அதற்கு ஏற்ற பல பல சத்திகளுடையதாய் அம்முறையே சிறிதுசிறிதாக மூற்பக்கத்து இருள்போலக் கீழ்ப்பட்டுத் தேய்ந்து தேய்ந்து முடிவின்கண் பற்றுஅறக் கழியும். அது தேயத்தேய அதற்கு ஏற்பத் திரோதான சத்தியும் அம்முறையே சிறிது சிறிது ஆகத் தன் தன்மை நீங்கிச் சிற்சத்தி ரூபமாய்ப் பதிந்து பதிந்து முடிவின்கண் அதி தீவிர சத்தியாய்ப்பதியும். அது பதியப் பதிய அம்முறையே விடயவெறுப்பு உண்டாம். அஃது உண்டாக, உண்டாக அம்முறையே வீட்டின்கண் விருப்பம் நிகழும். அது நிகழ நிகழ அதற்கு ஏற்ப ஆண்டு ஆண்டுப் பலவேறு வகைப்பட உபதேசங்கள் சோபான முறையான் மேற்பட்டு உளவாம். அதற்கு ஏற்ப ஆன்மாவின்கண் அநுபவ ஞானங்களும் அவ்வாறே மேற்படும்." சத்தி நிபாதமும், மலபரிபாகமும், இருவினை யொப்பும், சிவபுண்ணியமும் ஆகிய நான்கும் சிறிது சிறிது ஆக விளைவனவே ஆகும். ஒரே காலத்தில் முற்றும் விளைதலும், ஒன்றன்பின் ஒன்ருக விளைதலும் இல்லை. சிவபுண்ணியம் எவ்வளவு உண்டாயிற்று? அவ்வளவு இருவினை யொப்பும், அவ்வளவு மலபரிபாகமும், அவ்வளவு சத்தி நிபாதமும் உளவாகும். அவா நீக்கம் இருவினை யொப்பு மலபரிபாகத்துள் அடங்கும். அவா முற்றும் நீங்கிய காலத்தில், இந்நான்கும் ஒருசேர முற்றுப்பெற்ற அளவினவாகும். அதனுல்தான், திருவள்ளுவர்,

'ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்'

என்றருளினுர். இங்கு ஆராமை-நிரம்பாமை. அஃதாவது 'தாமே அன்றித் தம் பயனும் நிலையாமையின், வேண்டாதன ஆய பொருள்களை வேண்டி மேன்மேல் வளர்தல்.' 'அவ்வளர்ச்சிக்கு அளவு இன்மையின் நீத்தலே தக்கது என்பது கருத்து.' ஆராவியற்கையவா ஒருகாலும் நிரம்பாத இயல்பினை உடைய அவா. பேராவியற்கை-களிப்பும் கவலையும் பிறப்பும் பிணியும் மூப்பும் இறப்பும் முதலியனவை இல்லாமல், உயிர், எல்லையில்லாத பேரின்பத்தையுடையதாய் நிற்றல்.

1 தூயதன்மையும் 2. முற்றுணர்வும் 3. பேரின்பமும் ஆகிய மூன்றும் ஒரு சேரக் கூடிய முழு நிலையே சிவநிலை. அதைப் பெறுதலே 'வீடுபேறு' என்பதில் உள்ள 'பேறு' என்றதன் உட்கருத்து. "நிலை பெறுமாறு எண்ணுதியேல்...நில்" என்னும் தேவாரம் அந்நிலையைத்தான் உணர்த்திற்று. தூயதன்மையும் சிற்றுணர்வும் சிற்றின்பமும் முற்றும் விடுதலே வீடு. இவ்விரண்டும் 'பாச வீடு' 'சிவப்பேறு' என்னும் தொடரால் அறி

யப்படும். வீடுபேறு உம்மைத்தொகை. இரண்டன் வேற்றுமைத் தொகையன்று. வீடுபெற்றான் என்பது போலும் தொடர்கள் இரண்டன் வேற்றுமைத் தொகைப்பாற் படும். ஆண்டும் அவை தொகையாகா. 'எல் லாத்தொகையும் ஒரு சொன்னடைய' என் பது தொல்காப்பியம். விட்டிசைக்கப்படும் எல்லாத்தொடரும் தொகையாகா. அதனால் தான், தொல்காப்பியர் 'கபிலபரணர்', 'சேர சோழ பாண்டியர்' முதலிய தொடர்களைக் குறித்து, (ஒருசொல் நடைய அல்ல) பல சொல் நடைய என்றார். அதனை,

"உயர்திணைத் தொகையின் உம்மைத்தொகையே
பலசொல் நடைத்தென மொழிமனார் புலவர்"

என்றதாலறிக. அந்நூற்பாவில் 'பல சொல் நடை' என்றது, அதன் முன்னூற்பாவில் 'ஒருசொல் நடை' என்றதற்கு மறுதலையா தலை உணராமல்,பலர் சொல்நடை' எனப் பிழை படக்கொண்டு உரைத்தது நூலாசிரியர் கருத்திற்கு முரணாயிற்று. 'நிலங்கடந்தான் குன்றத்திருந்தான், எனப் பெயரும் வினையும் தொக்கன ஒரு சொன்னீர்மையில ஆகலின் தொகையெனப்படா' என்னும் உண்மை சேனாவரையர்க்குத் தெரிந்ததே. (சூ. 420. உரை) உரையாசிரியர் முதலிய பலரும் அதில் வேறுபட்டிலர்.

இத்காறும் எழுதியவற்றால் 'சிவம்'என் னும் சொற்பொருளும் அச்சிவம் தூய்மைத் தன்மையில் முழுமையுடையது என்பதும், அதனோடு முற்றுணர்வும் பேரின்பமும் உடையது என்பதும் விளக்கப்பட்டன. அத் தூய்மைத்தன்மை 'சத்து' என்றும், முற்று ணர்வு'சித்து' என்றும்,பேரின்பம் 'ஆனந்தம்' என்றும் நினைவிற் கொள்ளல்வேண்டும். வேண்டவே, சச்சிதாநந்தமே 'சிவம்' என்னும் மெய்ப்பொருள் என்பது தெளிவுறும். 'சிவம்' என்பதற்குச் சிவஞான மாமுனிவர் உரைத் தருளிய முப்பொருளும் 'சச்சிதாநந்தம்' என் னும் உண்மையை விளக்குதல் இதனால் அறி யப்படும். உயிர் சச்சிதாநந்தம் ஆதலே இரண்டறக் கலத்தலாகும். இக்கலப்பே அத்துவிதம். 'சிவஞானபோதம்' கூறுவது.— 'பண்ணையும் ஓசை(யை)யும் போலப் பழமது வும் எண்ணும் சுவையும்போல் எங்கும் ஆம்- அண்ணல்தாள் அத்துவிதம் ஆதல் அருமறை கள் ஒன்றென்னு தத்துவிதம் என்றறையும் ஆங்கு', என்பது. அத்துவிதக் கலப்பினைத் திருஞானசம்பந்தர் அருளிய திருமுறையில்,

"பூவினில்வாசம் புனலிற் பொற்புப்
புதுவிரைச் சாந்தினில் நாற்றத்தோடு
நாவினிற் பாடல் நள்ளா றுடைய
நம்பெருமான்இது என்கொல் சொல்லாய்
தேவர்கள் தானவர்சித்தர் விச்சா
தரர்கணத் தோடுஞ் சிறந்துபொங்கி
ஆவினில் ஐந்துகந் தாட்டும்கூடல்
ஆலவாயின்கண் அமர்ந்த வாறே"

என்பதிற் காண்கின்றோம். இதிலே மலரும் மணமும் புனலும் பொலிவும் சாந்தமும் நாற் றமும் அத்துவிதத்திற்கு உவமைகளாகி நின் றன. நாவினிற் பாடலும் 'பண்ணிசை' என் னும் பொருட்டாகும்.

சச்சிதாநந்த சொருபத்திற்கு ஒப்பாகப் பூவும் பூவின் வண்ணமும் பூவின் மணமும் கூறுதல் மரபு. பரஞ்சோதி முனிவர்,

'பூவண்ணம் பூவின் மணம்போல்
[*மெய்ப்போதவின்பம்
ஆவண்ணம் மெய்கொண்டவன்'

என்றது உணர்க.

பூவினின்று மணத்தையும் நிறத்தையும் பிரித்தல் இயலாது. மணத்தினின்றும் நிறத்தினின்றும் பூவைப் பிரித்தலும் இய லாது. ஏனையதும் அன்னதே. அவ்வாறே சத்தும் சித்தும் ஆநந்தமும் பிரித்தற்கியலாத ஒருமை உடைய முழுப்பொருள். அச்சிவ மாம் சச்சிதாநந்தத்தை ஏதேனும் ஒரு சத்தி விருந்துதான் காண்டல்வேண்டும். சத்து முத்திறம் உடையது. அத்திறமே பதிபசு பாசம். பதியாகிய சத்தும், பசுவாகிய சத் தும், பாசமாகிய சத்தும் சத்தாந்தன்மையில் வேறுபடா. பதியும் பசுவும் சித்தாதலின், சத் தாகிச் சித்தாகாத பாசத்தின் வேறாயின. சித் தாம் தன்மையில் பதியும் பசுவும் வேறுபடும். பதியாகிய சித்துக்கும் பசுவாகிய சித்துக்கும் வேறுபாடு பெரிது. இதைச் சிவஞான சித் தியாரில், விளக்கியருளினார் ஆசிரியர்.

"சிவன்சீவன் என்று இரண்டும் சித்து.
ஒன்று ஆம் என்னில்
சிவன் அருட்சித்து. இவன் அருளைச்
சேரும்சித்து, அவன்தான்
பவம்கேடு; புத்திமுத்தி பண்ணும்
சித்து. அவற்றில்

* 'மெய்போகம் இன்பம்' என்னும் பாடமும் பொருந்தும்.

படியும்சித்து; அறிவிக்கப் படும்
சித்தும் இவன்தான்.
அவன்தானே அறியும்சித்து. ஆதலினால்
இரண்டும்
அணைந்தாலும் ஒன்று ஆகாது.
அநந்நியமாயிருக்கும்.
இவன்தானும் புத்தியும் சித்து.
இவன் ஆமோ புத்தி?
இது அசித்து என்றிடில், அவனுக்கு
இவனும் அசித்து ஆமே''

என்பது அது. இத்திருவிருத்தத்தில்,' இவன்' என்றது உயிரை. அவன் என்றது சிவனை. புத்தி முத்தி - போக மோட்சம் (புத்தியும் முத்தியும்) சிவன்தானும் புத்தியும், ஆன்மாவும் புத்தி தத்துவமும் சிவன் ஆமோபுத்தி. புத்தி தத்துவமாகிய சடம் ஆன்மாவாகிய சித்து ஆகுமோ? என்று பொருள் கொள்க.

பதியாகிய சித்துக்கும் பசுவாகிய சித்துக்கும் வேறுபாடு பெரிது என்னும் உண்மையை இத்திருவிருத்தத்தால் அறியலாம். பதியாகிய சித்து, தனியாய்த் தூயதாய் நிற்பது. பசுவாகிய சித்து பதியுடனுவது பாசத்துடனுவது அறியலாவது. தனியாய் நில்லாது.

'அருவுருவாய்த் தோன்றி உடன்நில்லாது
[தோன்றுதும் நில்லாது
தோன்றல் மலர்மணம்போல் தொக்கு.'
(சிவஞானபோதம் வெண்பா 42)

பூவின்கண் மணம் விளங்கித்தோன்றி ஒப்ப நிற்பதும் அன்று. விளங்காது சூனியமாய் நிற்பதும் அன்று. அதுபோல, உயிரும், பதியாகிய சத்திலும் பாசமாகிய அசத்திலும் சார்ந்ததன் வண்ண'மாய்த் தோன்றும் இயல்புடையது அன்று. மலரும் மணமும் இதற்கு உவமையாய் நின்றவாறும் சச்சிதாநந்தத்திற்கு உவமையாய் நின்றவாறும் கருத்தால் வேறுபடுதல் அறிக. பல திருப்பதிகங்களில் திருஞானசம்பந்தர் இவ்வுண்மையைக் குறித்தருளியவாறு ஊன்றி உணர்வார்க்குப் புலப்படும்.

இது 'ஞானநெறியாகும். இனி, யோக நெறி'யும் திருஞான சம்பந்தர் திருமுறையுள் உணர்த்தப்பட்டுளது.

'ஒளி நெறி' என்பது அறிவின் ஒளியைக் குறித்ததாய் ஞானநெறிக்கும் உரியதாகும். ஆயினும், 'ஒளி' என்றது 1. காண்பான், 2. காட்சி, 3. காணப்படும் பொருள் ஆகிய மூன்றும் நீங்காத காட்சி நிலைக்கு உரியது. ஞானநெறி அம்மூன்றும் நீங்காது நீங்கியது.

கல்லாலின் நிழலில் நால்வர்க்கு இறைவன் உணர்த்திய பொருள்களாகப் பல குறிக்கப்படுகின்றன திருமுறைகளில். அவற்றுள் ஒன்று 'ஒளிநெறி'யும் ஆம்.

''ஓர் ஆல் நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு
ஒளிநெறி காட்டினை''

எனத் திருவெழு கூற்றிருக்கையுள் உள்ளது. இங்கே 'நால்வர்க்கு' உபதேசித்தருளிய உண்மை தெரிகிறது. இவ்வாறே திருவீழிமிழலைத் திருப்பதிகத்தில்,

''ஏரிசை வடவாலின் கீழ்இருந்தங்
கீரிருவர்க்கு இரங்கி நின்று
நேரியல்நான் மறைப்பொருளை யுரைத்து
ஒளிசேர் நெறியளித்தோன் நின்ற
கோயில்''

என்று அருளினர். (ஒளிசேர் நெறி - ஒளியை இடைவிடாது நினைக்கும் வழி.)

அத்திருவீழிமிழலைக்கே உரிய பிறிதொரு திருப்பதிகத்தில்,

''அணிபெறு வடமர நிழலினில்
அமர்வொடும் அடியினை இருவர்கள்
பணிதர அறநெறி மறையொடும்
அருளிய பரன் உறைவிடம்ஒளி
மணிபொருவரு மரக தநிலம்
மலிபுனல் அணைதரு வயல்அணி
திணிபொழில்தரு மணமது நுகர்
அறுபதம்முரல் திருமிழலையே''

என்னுந் திருப்பாடலில், 'இருவர்க்கு' அறநெறியும் மறைப்பொருளும் உபதேசித்தருளிய உண்மை தெரிகிறது. 'நால்வர்', 'இருவர்' என்னும் வேறுபாடு சிற்சில தலங்களில் தென்முகக் கடவுள் சந்நிதியில் காணக்கிடக்கின்றது.

இவ்வுண்மைகளை உணர்ந்த திரிகூடப்பராசப்பக் கவிராயர் தமது திருக்குற்றாலப் புராணத்தின் தென்முகக் கடவுள் வணக்கம் ஆகிய பாடலில்,

''ஆல்வருக்கந் தனில்உயர்ந்த வடநிழற்கே
தென்முகம் கொண்டு அறவோர் ஆய
நால்வருக்குள் இருவருக்கும் ஒருவருக்கும்
நவின்றருளி நவிலொ ணுதை

நூல்வருக்கம் ஒருவருக்கு
நுவலாமல் நுவன்றோன்"

என்று குறித்தார்.

ஒருவர் - திருநந்திதேவர்.

இருவர் - திருமால், நான்முகன் என்றலும் அகத்தியர், புலத்தியர் என்றலும் உள. பழைய (சிவஞானபோத) உரையிற் காண்க. உமாபதிசிவம் அருளிய 'ஞானபூசா விதி'யில் உணர்த்தும் நால்வர் அகத்தியர் முதலியோர் ஆவர். எல்லாரும் சொல்லாநிற்கும் நால்வர் சநகாதிமுனிவரே.

(1) "ஆலின்கீழ் அறம் ஓர் நால்வருக்கு அருளி
அனலது ஆடும்எம் அடிகள்"
(திருப்பாம்புரப்பதிகம்)

(2) "மால்அடைந்த நால்வர்கேட்க
நல்கிய நல்லறத்தை
ஆல் அடைந்த நீழல்மேவி
அருமறை சொன்னது என்னே"
(திருச்சேய்ஞலூர்ப் பதிகம்)

(3) "ஆலதன்கீழ் இருந்து நால்வர்க்கு
அறம்பொருள் வீடுஇன்பம் ஆறங்கம்
வேதம் தெரிந்தான்"
(திருநாகேச்சுவரம்-உ.)

(4) "அறங்கிளரும் நால்வேதம் ஆலின்கீழ்
இருந்தருளி அமரர் வேண்ட
நிறங்கிளர்செந் தாமரையோன் சிரம்ஐந்தில்
ஒன்றறுத்த நிமலர் கோயில்"

எனத் திருமுதுகுன்றத் திருப்பதிகத்தில், நான்மறையுபதேசம் உணர்த்தப்பட்டது.

(1) மறைப்பொருளையும் ஆறங்கத்தையும் உரைத்ததும், (2) ஒளிசேர் நெறி அளித்ததும் (3) அறநெறி (சிவதன்மம்) அருளியதும், (4) நான்குறுதிப்பொருள்கள் அருளியதும் ஒன்றுகுமோ? திருமுறைகளில் வெவ்வேறு உணர்த்தப்படுதல் ஆங்காங்குக் கண்டு கொள்க. அறம் பொருள் இன்பம் வீடு நான்மறை ஆறங்கம் எல்லாம் உபதேசித்த உண்மையைத் திருமுறையின் பிற இடங்களிலும் காணலாம்.

அவற்றுள், 'ஒளிநெறி' என்றது சிவ யோக பேதங்களுள் ஒன்றான பிராசாதயோகத்தைக்குறிக்கின்றது. பிராசாத யோகத்தின் கலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறம் உடையது.

பிராசாத யோகம்
கலைகளின் பெயர்

கோஷகலை
1. மேதாகலை
2. அர்க்கீசகலை (படிகம் பொன் ஒளிக் கலப்பு)
3. விஷகலை
4. விந்துகலை
5. அர்த்தசந்திரகலை
6. நிரோதி(னி)கலை
7. நாதகலை
8. நாதாந்தகலை
9. சத்திகலை
10. வியாபினிகலை
11. வியோமரூபாகலை
12. அநந்தாகலை
13. அநாதாகலை
14. அநாசிருதாகலை
15. சமனகலை
16. உன்மனகலை
17. பராகலை }
18. சிவம் }
19. சிவாந்தம் }
20. சரணம் }

நிறவேறுபாடு

மின்னல் ஒளி
1. தீயின்ஒளிக்கொழுந்து
2. சந்திரனொளியும் சூரியனொளியும் கலந்த ஒளி
3. மின்னல் ஒளி
4. விளக்கொளி
5. உச்சிவேளையில் கதிரவனெதிரே காட்டிய மாசிலாதவாளின் ஒளி
6. புகையின் நிறம்
7. மாணிக்கத்தொளி
8. இருமின்னலொளி
9. நூறு கதிரோன் ஒளி
10. ஆயிரம் கதிரோன் ஒளி
11. ஞானவெளியொளி
12. ஞானக்கடலொளி
13. ஞானக்கண்ணாடியொளி
14. லக்ஷம் கோடி சரற்கால நிலவொளி
15. கோடி அளவு கதிரொளி
16. அளவிலாக் கதிரொளி

என்னும் நான்கும் உன்மனகலைக்கும் அதீத கலைகள் ஆதலின் சிவஞான - சொரூபம் ஆகும்.

சிவாகமத்தில் உபதேசிக்கப்படும் பிராசாத யோகத்தைத் தமிழில் 'ஒளிநெறி' என்று திருமுறை உணர்த்திற்று. இது முழு விளக்கம் ஆகாது. பிராசாதத்தின் பேதம், நாமம், உத்தாரம், பிரஸ்தாரம், பிரகாசம், இடம், எல்லை (யளவு), மாத்திரை, காரணேசுரர், வியாப்தி, சூன்யம், மலங்கள் நிற்கும் நிலை, சோதிக்கப்படும் மலமும்யோனியும்,மூலாதார நாடிகளின் தோற்றம், நிவர்த்தி முதலிய கலை ஐந்தும் நிற்கும் நிலை, பிரணவ மந்திரத்தின் கலைகள் நிற்கும் முறை, திருவைந்தெழுத்து நிற்கும் நிலை, அத்துவாக்கள் ஆறன்தோற்றம், திருவைந்தெழுத்தில் தீட்சை நிற்கும் நிலை, பிராசாத கலைகளில் பரசாக்கிரம்,பரசொப்பனம், பரசுழுத்தி, பரதுரியம், பரதுரியாதீதம் என்னும் ஞான அவஸ்தாஸ்தானம் ஐந்தும் ஆகிய எல்லாவற்றையும் விரித்து விளக்கப் பெற்றால்தான், சைவசித்தாந்தச் செந்நெறிக்கே உரிய இவ்வொளி நெறியை நன்குணர்ந்து கொள்ளல் கூடும். இந்நெறி நலம் யார்க்குக் கிடைக்கும்? யாரால் கிடைக்கும்? எத்தகைமை உடையவரானால் இதைப்பெறலாம்? இதைக் கல்லால் நிழல் மலைவில்லார் அருளினார் ஆயின், இதன் பெருமை என்ன? இதை உபதேசிக்கப்பெற்றவர் 'நால்வர்' முதலோர் ஆயின், இதை உணர்தற்கு உரியார் எத்தகைமை உடையவர் ஆதல்வேண்டும்? இப்பிராசாதயோகம் எவ்வளவு பெருமையுடையதாயிருந்தால், திருஞானசம்பந்தப் பெருமானார், தம் திருப்பாடற்கண், சிவமகிமையுள் ஒன்றாக, 'ஒளிநெறி காட்டினை', 'ஒளிசேர்நெறி அளித்தோன்' என்றும், சிவயோகியர் மகிமையுள் ஒன்றாக 'ஒருக்கியவுணர்வினொடு ஒளிநெறி செலுமவர்' என்றும் ஓதத் திருவுளங் கொள்வார்?

திருவீழிமிழலையை நாமும் நினைக்கின்றோம். ஏனையோரும் நினைக்கலாம். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் உணர்த்தும் நிலையில் நம் நினைப்பு இருந்தால், நாம் திருவருளைப் பெறுதலில் என்ன அருமை கிடக்கும்? திருவீழிமிழலையை நினையத்தக்கவல்லமை ஒளிநெறி செல்லும் உத்தமர்க்கே உண்டு என்றால்,அதைப் பெறுவதே நமக்கு முதலாய கூறாகும். சிவதலங்களை நினைவதற்குரிய வல்லமையும், அவற்றில் வாழ்ந்து சிவதரிசனம் புரியும் ஆற்றலும், திருவருள் பெறும் நெறியும், 'ஒளிசேர் நெறி'யில் தான் உண்மையும் ஒழுங்கும் உறுதியும் உடைய நலமாக அமையும். இதனை அத்திருவீழிமிழலைத் திருப்பதிகப் பாடல் குறிக்கின்றது.

"ஒருக்கிய உணர்வினொடு ஒளிநெறி செலுமவர்
(அரக்கன்நன் மணிமுடி ஒருபதும் இருபது
கரக்கனம் நெறிதர மலரடி விரல்கொடு
நெருக்கினன்) மிழலையை நினைய வலவரே."

இதில் ஒளிநெறிச் செலவுக்கு உணர்வு ஒருங்குதல் இன்றியமையாதது என்னும் உண்மை உணர்த்தப்பட்டது. திருவீழிமிழலையிற் சென்று நினைந்து சிவதரிசனம் புரியும் வல்லமையை வேண்டின் ஒளிநெறிச் செலவுடையவராதல் முக்கியம் என்றும் அறிவித்தருளினார் ஞானமாமுனிவர் ஆகிய நம் சமயாசாரியர்.

இவ்வொளிநெறியைக் குறித்துத் தமிழ்ப் புராணங்கள் சிலவற்றுள் நல்லபாக்கள் உள்ளன. அவற்றால் அவற்றை இயற்றிய பாவலர்க்கு ஒளிநெறிப் பயிற்சியோ உணர்ச்சியோ ஆர்வமோ உண்டு எனக் கொள்ள இடன் உண்டு. செவ்வந்திப் புராணத்திலும் அதன் ஆசிரியர் நன்கு தெரிவித்தார். கச்சியப்ப முனிவர் பல இடங்களில் உணர்த்தியருளினார். நிரம்ப அழகிய தேசிகர் சேதுபுராணத்தில், காயத்திரி சரசுவதி தீர்த்தச் சருக்கத்தில் (பா. 23), சந்த விருத்தம் ஒன்றில்,

"யான்ஆர் எனது ஆர்உன் அருள்
எல்லாம்எனும் நல்லோர்
ஆனார் அவர் உள்ளத்து எழும்
அறிவின்சுடர் ஒளியே
மீன்ஆர் ஒளி முதல்மேல் நிலை
விண்டுன்மனை விரவா
வான்ஆர் தினகரனே மழுமான்
ஏந்தின கரனே"

என்று இவ்வொளிநெறியைச் சுருக்கமாகக் குறித்து விளக்கம் உறநிறுத்திய பாத்திறத்தால், அச்சைவாசாரியர் நம்மால் வணங்கப் பெறும் மாண்புடையோர் ஆகும் சற்பாத்திரர் அல்லரோ?

"நிலைமை சொல்லு நெஞ்சே தவம்என்செய்தாய்
கலைகள் ஆயவல்லான் கயிலாயநன்
மலையன் மாமயிலாடு துறையறன் நம்
தலையின் மேலும் மனத்துள்ளும் தங்கவே."

"எந்தமாதவம் செய்தனை நெஞ்சமே
பந்தம்வீடவை ஆய பராபரன்
அந்தம்இல்புகழ் ஆரூர் அரனெறி
சிந்தையுள்ளும் சிரத்துளும் தங்கவே."

என்னும் திருக்குறுந்தொகை இரண்டிலும் பிராசாதநெறி குறிக்கப்பட்டுளது என்பது பெரியோர் கருத்து. யாழ்ப்பாணம் சிவஸ்ரீ குமாரசுவாமி குருக்கள் ஐயா அவர்கள், இவற்றுள் ஒன்றனை எடுத்தாண்டு இக் கருத்தை விளக்கினார்கள். (பிராசாதஷட் சுலோகி வியாக்யானம் பக்கம் 19-பார்க்க).

'ஐயிரண்டும் ஆறொன்றும் ஆனார்போலும்
அறுமூன்றும் நான்மூன்றும் ஆனார்போலும்'

என்னும் தேவாரப் பகுதியின் முதலடிக்கும் 'சோடசகலா ப்ராசாதம்' எனப் பொருள் கொண்டாரும் உளர். பத்துத்திக்கும் ஏழு லோகமும் பதினெண் தேவகணமும் பன்னிரு சூரியரும் ஆனார் என்னும் பொருள் அடியேன் கொண்டது.

'சித்தம் ஆர நினைந்துள்கி யெழுதல்', 'நெஞ்சு ஒன்றி நினைந்தெழுதல்' 'ஒன்றியிருந்து நினைதல்' முதலிய தொடர்க்குப் பொருள் ஒளிநெறியே ஆகும்.

இத்திருமுறையிற் குறித்த 'ஒளிநெறி' பத்தாவது திருமுறையாகிய திருமந்திர மாலையிலே மிக்க விளக்கம் உறத் திருமூலதேவ நாயனார் உபதேசித்தருளினார்.

"ஆதார யோகத்து அதிதே வொடும் சென்று
மீதான தற்பரை மேவும் பரனொடு
மேதாதி ஈரெண்கலை செல்ல மீதுஒளி
ஓதா அசிந்தம் ஈதானந்த யோகமே' (709)

மீதானந்தயோகம் என்றருமுளர் இதன் முந்திய திருமந்திரம் மூலாதாரம்முதல் நிற்கும் அதிதேவதைகளை விளக்கிற்று. "ஈரொட்டொடு ஆறிரண்டு ஈரைந்துள் ஏகின்ற அக்கலையெல்லாம்" அது கூறுகின்றது.

"மேதாதி ஈரெட்டும் ஆகிய மெல்லியல்
....
நாதாதி நாதத்து நல்லருளாளே (1070)

என்றும்,

'ஏன்றுள ஈரா றெழுகலை யுச்சியில்
தோன்றும் இலக்கு' (1187)

என்றும்,

'ஈராறு நாதத்தில் ஈரெட்டாம் அந்தத்தின்
மேதாதி நாதாந்த மீதாம் பராசக்தி (1705)

என்றும்,

'ஆதார சோதனை யான்நாடி சுத்திகள்
மேதாதி ஈரெண் கலாந்தத்து விண்ணொளி' (1707)

என்றும்,

'மேதாதி யாலேவிடாது ஓம்எனத் தூண்டி
ஆதார சோதனை அத்துவ சோதனை
தாதாரம் ஆகவே தான்எழச் சாதித்தால்
ஆதாரம் செல்போகம் ஆவது காயமே.' (1708)

என்றும்,

திருமந்திரம் ஒளிநெறியை விளக்கிய துணர்க. 'ஆறும்பதினாலும்' என்று இருபது கலைப் பிராசாதத்தையும் அது குறித்தது.

திருக்களிற்றுப்படியாரிலும் அதன் முதன் நூலான திருவுந்தியாரிலும் ஆதார யோகம் நிராதார யோகம் மீதானம் என்னும் மூன்று நிலையும் கூறும் உண்மையைத் தெளிவாக உணர்தல் வேண்டின், இவ்வொளி நெறியைப் பயில்வது இன்றியமையாதது.

'ஆதாரத் தாலே நிராதாரத்தே சென்று
மீதானத்தே செல்க உந்தீபற
விமலற்கு இடம்அது என்று உந்தீபற.'

இதில் ஆதாரம், நிராதாரம், மீதானம் என்னும் மூன்றையும் நன்கு உணரவேண்டின், திருஞானசம்பந்த சுவாமிகள் கூறியருளிய 'ஒளிநெறி'ச் செலவு இன்றியமையாத சிவ யோகப் பயிற்சியாகும்.

1. சிவபுண்ணியம் கருவி கரணங்கள் எல்லாம் கொண்டு செய்யத் தகுவன.

2. ஆதாரயோகம் கருவிகளை விட்டு நீங்கிக் கரணங்களோடு கூடிச் செய்யத் தகுவது.

3. நிராதார யோகம் கரணங்களையும் விட்டு நீங்கி ஞானம் ஆகிய அருட்குணத்தால் செய்யலாவது. ஆதலால்தான் அவற்றின் ஒளியை ஞானச் சார்புடையனவாக விளக்கியருளின சிவாகமங்கள். அவ்வுண்மை நாதாந்தகலை முதலியவற்றின் நிலைமை நோக்கியுணர்தற்பாலது.

4. மீதானம் அவ்விரண்டும் இன்றி அவற்றின் துணையால் மேலோங்கிச் சிவானுபூதிமானாகும் இடம். மீ - மிசை. தானம் - நிலம், மிசை நிலம், நிலமிசை. 'மலர்மிசை ஏகினான் மாணடி, சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்', 'வரன் என்னும் வைப்பும் அதுவே', 'நிலையுடை பெருஞ்செல்வம் நீடுலகிற் பெறுவாரே' என்று காழி வேந்தர் குறித்தருளிய 'நீடுலகு'ம் அதுவே. 'நிலையுடைய் பெருஞ்செல்வம்' பேரின்பச் செல்வம். அதுவே நிலையுடையது.

இங்கு இக் காலத்துச் சைவருலகம் உள்ள நிலைக்கு எடுத்துக்காட்டாக ஒன்றைக் குறிக்க உள்ளம் துணிந்தது. அதனால் உண்மைச் சைவத்தில் நாட்டம் உண்டாக லாம் என்பது அடியேன் வேட்டம்.

"ஆதார யோகத்தாலேனும் நிராதார யோகத்தாலேனும் மீதானத்தை யெய்தலுறு வார்க்கு வழியாயிருப்பது இச்சுழிமுனை நாடி. மீதானம் பிரமரந்திரம்." (திருவிளையாடற் புராணம் இந்திரன் பழிதீர்த்த படலம் 35. உரை) என்று ஒருவரால் எழுதப்பட் டுள்ளது.

இதில், மீதானத்தை எய்த ஆதாரயோ கமோ, நிராதாரயோகமோ போதும். இரண் டும் வேண்டா. ஒன்றே அமையும் என்றும் மீதானம் பிரமரந்திரம் என்றும் உள்ளது சைவருக்கு மிக்க வருத்தம் தரும் ஒரு பெரும் பிழையாகும்.

நிராதார யோகம் ஆதார யோகத்தால் ஆவது. நிராதார யோகத்தால்தான் மீதா னத்தை எய்தல் கூடும். ஆதாரம், நிராதாரத் திற்கு அடியும், நிராதாரம் மீதானத்திற்கு அடி யும் ஆகி ஒன்றன்பின் ஒன்று எய்தற்பாலன. மீதானம் பிரமரந்திரம் ஆனால், அதன்மேலும் பல நிராதாரயோகத்தின்பாற்பட்ட கலைகள் உள்ளமையால், பிரமரந்திரம் மீதானம் ஆகுமோ? இரண்டற்கும் மேலான முடிவை இடைப்பட்டதாக்கியது இத் தடுமாற்றம். 'விமலற்கு இடம் மீதானம்' என்று வெளிப் படக் கிளந்து கூறியும், இவ் விபரீத ஞானம் விளைகின்றது. உண்மைச் சைவம் உலகில் விளங்கத் திருஞான சம்பந்தர் திருவடி 'ஒளிநெறி' அருள்வதாகுக. (தொடரும்)

சென்னை: ஏகாம்பரேசுவரர் கோயிலில் அஷ்டகிரக சாந்தி அபிஷேகம் 3—2—62 முதல் 5—2—62 வரை நடைபெற்றது.

எட்டிகுடி: சுப்பிரமணிய சுவாமி கோயிலில் அஷ்டகிரக யோக பரிகார உற்சவம் 31—1—62 முதல் 5—2—62 வரை நடைபெற்றது. 3,4,5-2-62 மூன்று நாட்களிலும் மூன்று இலட்சம் அர்ச்சனையும் நடைபெற்றது.

திருநெல்வேலி: திருஞானசம்பந்தர் திருக்கோயிலில் வருடாபிஷேகம் 18—1—62 ல் நடைபெற்றது.

வேலூர்: வைத்தியநாதசுவாமி கோயிலில் நவக்கிரக அஷ்டபந்தன மகா கும்பாபி ஷேகம் 2—2—62 ல் நடைபெற்றது.

திருமீயச்சூர்: மேகநாதசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 31—1—62 முதல் 13—2—62 முடிய நடைபெற்றது.

பூவாளூர்: திருமூலநாதசுவாமி கோயிலில் 22—1—62ல் பெரியபுராணச் சொற் பொழிவுப் பூர்த்திவிழா நடைபெற்றது.

மதுரை: கூடலழகர் கோயிலில் மாசி மகம் தெப்ப பிரம்மோற்சவம் 8—2—62 முதல் 20—2—62 வரை நடைபெற்றது.

அரத்துறை: தீர்த்தபுரீசுவரசுவாமி கோயிலில் மாசிமகப் பிரம்மோற்சவம் 10—2—62 முதல் 20—2—62 வரை நடைபெற்றது.

மயிலாப்பூர்: கபாலீசுவரர் கோயிலில் அஷ்டகிரக கூட சாந்தி மகா அபிஷேகம் 2—2—62 முதல் 5—2—62 வரை நடைபெற்றது.

பைராகிமடம்: வெங்கடேசப்பெருமாள் கோயிலில் அஷ்டகிரக சேர்க்கைக்கு அற் புத சாந்தி 2—2—62 முதல் 5—2—62 வரை நடைபெற்றது.

கோயம்புத்தூர்: கோணியம்மன் கோயிலில் பிரம்மோற்சவம் 20—2—62 முதல் 12—3—62 வரை நடைபெறும்,

திருநாவுக்கரசு நாயனார்

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்]

ஆளுடைய பிள்ளையார்தம் அடிதொழ விரும்பல்

நாயனார் தில்லையிலே தங்கியிருக்கும் நாட்களில், சீகாழியில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருவவதாரம் செய்து, மூன்றாம் ஆண்டிலே சிவபிரான் உமையம்மையோடு விடையின்மேல் எழுந்தருளி வந்து திருமுலைப்பால் உண்பிக்க உண்டு அப்போதே அப்பெருமானை ஒருதிருக்கை விரலாற் சுட்டி, "தோடுடைய செவியன்" என்னும் திருப்பதிகத்தால், "என் உள்ளம் கவர் கள்வன் இவனன்றே" எனத் தம் தந்தையார்க்கு இயம்பி, பின்னும் பல திருக்கோயில்கள் தோறும் சென்று வணங்கித் திருப்பதிகம் அருளிச் செய்துவரும் அதியற்புதச் செயலை அடியார்கள் சொல்லக் கேட்டருளினார்.

கேட்டருளியதும், அதிசயமும் காதலும் அளவிறந்து பெருகப் பெற்றவராய், அவரைக் கண்டு அவரது திருவடிகளை வணங்குதல் வேண்டும் என அவாவினார்.

'நற்குடியிற் பிறந்து, நன்முறையில் வளர்க்கவும் நற்கலைகள் பயிற்றுவிக்கவும் பெற்றும், நன்னெறியில் நிற்கமாட்டாது, நெறியில்லா நெறிதன்னை நெறியாக நினைந்து, காத்தாள்பவர் காவலையும் இகழ்ந்து புன்னெறியிற் சென்று பற்றில்லா வாழ்க்கை வாழ்ந்து, எழுபதாண்டுகாறும் பாழுக்கே நீர் இறைத்து, அப்பால் ஆண்டவன் என் அம்மையாரது வேண்டுகோளினால் இரங்கி, ஆற்றற்கரிய கொடுஞ்சூலை நோயைக் கொடுத்து அறிவுறுத்தி ஆட்கொள்ள, அதன் பின்பு அவனது அடியை அடைந்து அவனுக்குத் தொண்டு செய்யத் தலைப்பட்ட எனது சிறுமை எங்கே? மூன்றாவது ஆண்டிற்றானே எம்பெருமான் எழுந்தருளிவந்து ஞானப் பாலை உண்பிக்க உண்டு, அவன் அடியலாற் பேணா ஒருநெறிய மனத்து உணர்வினராய் உலகெங்கும் அருள்நெறியைப் பரப்பிவரும் ஆளுடைய பிள்ளையாராகிய அத் திருஞான சம்பந்தப் பெருமானாரது பெருமை எங்கே?' என்று, தம்மோடு அவரிடையுள்ள நிலைவேறுபாட்டினை நினைந்து உருகுதலும், அவ்வுருக்க மிகுதியால் 'அப்பெருமானாரைக் கண்டு அவரது திருவடிகளை வணங்கியல்லது யான் அமையேன்' என விரைந்து எழுதலும், "எம்பெருமானாரைச் சாராதே சாலநாள் போக்கினேனே" என இரங்குபவராகிய நாயனார்க்கு இயல்பின் உளவாவனேயாம்.

இவ்விடத்தில் நாம் ஒரு பேருண்மையினை நன்கு தெளிந்துகொள்கின்றோம். அஃதாவது, 'இறைவனிடத்து உண்மையன்புடையவர்கள், அவன் அடியாரிடத்தும் அத்தகைய அன்புடையவர்களாய் இருப்பர்' என்பது. எனவே, அடியார்களிடத்து அன்பில்லாதவர்கள் இறைவனிடத்து அன்புடையராய் இருத்தல் போலியேயன்றி உண்மையன்று என்பதும், ஒருவர்க்கு அடியார்களிடத்து நிகழும் அன்பின் அளவே, அவர்க்கு இறைவனிடத்து நிகழும் அன்பின் அளவை அறிவதற்குக் கருவியாகும் என்பதும் புலப்படும். இதனை, "ஈசனுக்கன்பில்லார் அடியவர்க் கன்பில்லார்" என இனிது எடுத்தோதியது, 'சிவஞானசித்தி' என்னும் பெருநூல்.

உலகியலில், ஒருவனுக்கு அவன் மனைவியிடத்து உள்ள அன்பின் அளவை, அவன் அவளது சுற்றத்தாரிடம் காட்டும் அன்பின் அளவுபற்றி யறியலாம். அவ்வாறே ஒருத்திக்கு அவள் கணவனிடம் உள்ள அன்பின் அளவினை, அவள் அவனது சுற்றத்தாரிடம் காட்டும் அன்பின் அளவுபற்றி யறியலாம். மற்றும் ஒருவனுக்குக் கல்வியில் உள்ள அவாவினை, அவன் கற்றவரிடத்துக் காட்டும் அன்பு பற்றி யறியலாம். பண்டைத் தமிழ் மன்னர்கள் தமிழ்ப்புலவர்களுக்குப் பொன்னும், மணியும், நாடும், ஊரும், மாவும், களிறும் பரிசிலாக வாரி வாரி வழங்கினர் என்றால், அஃது அவர்கட்குத் தமிழ்மொழியின் மீதுள்ள அளவுகடந்த ஆர்வத்தினையே

காட்டுகின்றது. இஞ்ஞான்றும் அத்தகை யோர் காணப்படாமைக்குக் காரணம், பொரு ளின்மையன்று; அன்பின்மையேயாம். ஆகவே, இறைவன் தம்மினும் தமக்கு இனிய னுதலை யுணர்ந்து, நெஞ்சத்தை அவனுக்கே இடமாக வைத்து காராண்ட மழை போலக் கண்ணீர் சோரக் கரைந்துருகும் மனத்தின ராய், அவனுக்கு மனம் மொழி மெய் என் னும் மூன்றிலும் தொண்டு செய்து இன் புற்றிருப்பவராகிய நாயனார்க்கு, திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரது திருவருட்பேற்றி னைக் கேட்டவுடனே அவரைக் கண்டு வணங் குதல் வேண்டுமென்னும் வேட்கைக் கரை கடந்து பெருகுவதாயிற்று. எனவே, அம் பலக் கூத்தனைத் தினைத்துணைப் பொழுதும் பிரியமாட்டாது அங்கே தங்கியிருந்த நாய னாரை, சம்பந்தப் பெருமானை வணங்கவேண் டும் என்றெழுந்த பேரார்வமே, அவ்விடத்தை விட்டு நீங்குதற்கு ஒருப்படுவித்ததென்பது தெளிவாகும்.

தில்லையைவிட்டுப் புறப்படுதல்

காழிப் பிள்ளையாரைக் காணவேண்டும் என்னும் அவா மிகுந்தமையால், நாயனார் திருவம்பலத்திற் சென்று திருக்கூத்துடையா னது ஆடுகின்ற திருவடிக்கீழ் வீழ்ந்து வணங் கினார். அப்பொழுது அப்பெருமானது திரு வருளும் அவரது விருப்பத்திற்கு இசைந்ததா கவே இருந்தது. அதனால், நாயனார் விடை பெற்றவராய் வெளிப்போந்து, அத்தலத்தின் கண் தமக்குள்ள அன்பின் மிகுதியால், அதன் திருவீதிகளைப் புரண்டு வலம் செய்து எழுந்து கும்பிட்டு நடந்தருளினார்.

தில்லைக்கு எழுந்தருளிய பொழுது நாய னாரை வரவேற்ற அடியார்கள் அத்தலத்தில் அவர் தங்கியிருக்கும் வரையிலும், அவரோடு உடனிருந்து அருளின்பத்தை நுகர்ந்து வந்த மையால், மேலும் அவரோடே இருந்து அத்த கைய பயனைப் பெறுதற் பொருட்டு அவரைப் புடைசூழ்ந்து சென்றனர்.

திருநாரையூர் வணங்குதல்

செல்ல, நாயனார் நடந்து தில்லையின் எல்லையைக் கடக்குங்கால், அதனை வணங்கி வாழ்த்திக் கடந்து அப்பால் திருநாரையூரை நோக்கி நடந்து சென்று அதனையடைந்து அங்கு எழுந்தருளியுள்ள பெருமானை வணங் கித் திருப்பதிகம் அருளிச் செய்து, திருத் தொண்டு இயற்றியருளினார். அத்தலத்தின் திருப்பதிகமாக இன்று நாம் பெற்றுள்ளது, 'சொல்லானைப் பொருளானைச் சுருதியானை'' என் னும் திருத்தாண்டகத் திருப்பதிகம் ஒன்றே. அதனுள் நாயனார், இறைவனை அவனது பெருமை அளவிடற்கு அரியதாய் இருத்தலை வியந்து, பல்பெயர்க்கோவையாகப் பாடி, இப் பெருமானை ''நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே'' எனச் சொல்லி, அவனது திருவருள் இன்பத்தில் திளைத்தருளினார். அத்திருப்பதி கம், தன்னை ஓதி உணர்வார்க்கு உளமாசைத் தேய்த்துக் கழுவுவதாய் உள்ளது.

சீகாழியை அடைதல்

பின்பு நாயனார், தொண்டர்குழாம் புடைசூழ்ந்துவர, அக்குழாத்தின் நடுவே, கும்பிட்டகைகளும், திருவெண்ணீறு நிறைந்து விளங்கும் திருமேனியும் காண்பவரது மனங் களையெல்லாம் கரைந்துருகச் செய்ய, திருவுள் ளத்திலே பொங்கி எழுகின்ற கருணைவெள்ள மானது வெளியே இனிது பொழிய திருநாரை யூரைவிட்டுப் புறப்பட்டு வழிநடந்து திருப் பதிகத் திருமொழியால் கருங்கல்லையே தெப்ப மாகக் கொண்டு கடலைக் கடந்து கரையேறிய வராகிய அவர், ஏட்டின் புறத்து எழுதப் படும் வேதத்தை வளம் நிறைந்த தமிழ்மொ ழியினால் அருளிச் செய்பவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் எழுந்தருளியுள்ள சீகாழித் தலத்தின் அருகில் அடைந்தருளி னார்.

திருஞானசம்பந்தர் எதிர்கொண்டருளல்

மேருமலையை வில்லாகக் கொண்டு திரி புரங்களை யழித்துத் தேவர்கட்கு வெற்றி யைத் தந்தருளிய சிவபிரான், தானே சூலை நோயைக் கொடுத்து வலிதின் ஆட்கொண்டு, 'நாவுக்கரசு' என்று நன்னுமம் சூட்டியருள, பின்னர் அவனது திருத்தொண்டின் உழைப் பினாலே சமணர் செய்த சூழ்ச்சிகளையெல் லாம் வென்று, கல்லே மிதப்பாகக் கடலைக் கடந்து கரையேறி, அரசனையும் அவனுக்கு அடியவனாகச் செய்து, அப்பெருமானது திருக் கோயில்கள் தோறும் சென்று திருத்தொண் டாற்றி வருபவராகிய பெரியார், தாமே தம் மைக் காண எழுந்தருளி வருதலையறிந்த திருஞானசம்பந்தப் பெருமானார், அவரைக் காணவேண்டுமென்று முன்பே தமது உள் ளத்தில் இருந்த விருப்பம் மீதூர்ந்து எழ,

மற்றும் ஆர்வமுடைய அடியவர் பலர் புடை சூழ எழுந்து எதிர்சென்றருளினர்.

ஆளுடைய பிள்ளையாரே தம்மை எதிர் கொள்ள வருதலை யறிந்த நாயனர், அவரின் முற்பட்டு, அவருடன் வந்த அடியார் கூட்டத்தினுள்ளே விரைந்து சென்று அவரது திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினர். அதனைக் கண்ட பிள்ளையார் உடனே தம் கைகளால் நிலத்தினின்றும் எடுத்தருளி, முன்பு தாம் 'அப்பா' என்று அழுதழைத்த தோணியப்பராகவே காணப்படுகின்ற நாயனரை, அங்ஙனமே அன்பு மீதூர்வால், 'அப்பரே' என்று அழைத்துத் தழுவிக்கொண்டார். அதுமுதல் நாயனரை அடியவர்கள் 'அப்பர்' என்றே குறிப்பாராயினர்.

தம்மையும் தாங்குதலைத் தன்கடனகக் கொண்டு, சமணர் இழைத்த தீங்குகளுக்குட்படாமலும், பின்னும் எந்நாளும் இன்பமேயன்றித் துன்பம் உருமலும் தாங்கி வரும் தலைவனகிய சிவபிரானுக்குப் பணிசெய்து கிடப்பதே தம்கடனகக் கொண்டு, அவனுக்கு எல்லையில்லதோர் அடிமை பூண்டு ஒழுகிவருபவராகிய நாயனர் அவனது திருமகனராய் விளங்குகின்ற பிள்ளையாருக்கும் அவ்வாறே 'அடியேன்' என்று உரைத்தருளினர். இருபேராசிரியர்களும் ஒருவழிக்கூடி அளவளாவும் பேற்றினைப் பெற்ற அடியார்கள் அனைவரும் பெருமகிழ்ச்சிக் காரணமாக 'அரகர, சிவசிவ' என்பன போன்ற சிவநாமங்களை முழக்கி ஆரவாரஞ் செய்தார்கள்.

'ஆளுடைய பிள்ளையாரது திருவடிகளை அடியேன் வணங்கப் பெற்றேன்' என்று சொல்லி நாயனர் பெருமகிழ்ச்சியுற்ருர். 'நாவுக்கரசர், தாமே எழுந்தருளிவர நான் காணப்பெற்றேன்' என்று பிள்ளையாரும் பெருமகிழ்வெய்தினர். இவ்வாறு பேரன்பினல் ஒருவர் உணர்வில் மற்றொருவர் கலந்து இருமை நீங்கி ஒருமையுற்றபின், இருவருமாகத் திருக்கோயிலுக்குச் சென்று பெருமானை வணங்க விழைந்தார்கள். உலகை உய்விக்க வந்த அவ்விரு பெருமக்களும் ஒருங்கு கூடித் திருக்கோயிலுக்குச் சென்ற பெறலருஞ் சிறப்பை எவ்வாறு எடுத்தியம்புவது! அதனைச் சேக்கிழார் அருளிச் செய்யும் அருமை, ஒரு தலையாக இங்கு உணரற்பாற்று:

"அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம்
அன்புசெறி கடலுமாம் எனவும், ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் இரண்டெனவும், புவனம் உய்ய
இருட்கடு உண்டவர் அருளும் உலகமெல்லாம்
ஈன்றருள்தன் திருவருளும் எனவுங் கூடித்
தெருட்கலைஞா னக்கன்றும் அரசுங் கூடிச்
செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தாரன்றே'

என்பது அவ்வருமைத் திருப்பாடல். 'ஒரு பொருள் இருநிலையில் தோன்றும் தன்மையே இவ்விரு பெருமக்களது தன்மையும்' என்ற உண்மையையே சேக்கிழார் இவ்வருமைத் திருப்பாடலில் அழகுபட விளக்கியருளினர். 'அருட்கடல், அன்புக்கடல்' என்றது, 'துறவுநிலை, இல்நிலை' என்னும் இருவகை அறநிலைகளைக் குறிக்கும். 'இருகண்' என்றது 'நுகர்வுணர்வு (பரஞானம்)', நூலுணர்வு (அபரஞானம்) என்னும் இருவகை மெய்யுணர்வு (ஞான) நிலைகளைக் குறிக்கும். இறைவன் அருள், இறைவியின் அருள்' என்றது, 'இன்பப்பேறு, அருட்பேறு, என்னும் இருவகை வீடுபேற்றின் நிலைகளைக் குறிக்கும். இதனனே, 'இப்பொருள்களை இவ்விரு நிலைகளால் உலகிற்கு அருள வந்த அருட்பேராசிரியர்களே இவ்விரு பெருமக்களும்' என்பது விளக்கப்பட்டதாம். இவர்கள் இப்பொருள்களை இவ்விருவகையானும் உலகிற்கு அருளினமையை, இவர்களது வரலாறுகளும், திருப்பதிகத் திருமொழிகளும் பற்றி நுண்ணுணர்வான் ஓர்ந்துணர்க. யாமும், 'சைவநெறிதான் பெற்ற புண்ணியக்கண் இரண்டு' என்னும் தனிக்கட்டுரையில் சிறிது விரித்துரைத்தோம்; அதனை, 'சித்தாந்தம்' சென்ற ஆண்டு பங்குனி சித்திரை இதழ்களில் காண்க.

இங்ஙனம், அடியவர் குழாங்களுடன் இருவருமாகத் திருத்கோயிலை அணுகித் திருவாயிலை வணங்கி உட்சென்று, வானுலகத்தையும் கடந்து நிற்பதுபோலத் தோன்றுகின்ற திருமாளிகையை வலம்வந்து திருமுன்பையடைந்து, திருப்பிரமபுரப் பெருமானது திருவடியில் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்றனர். அதுபோழ்து, பிள்ளையார் அரசனை நோக்கி, 'உங்கள் பெருமானை நீங்கள் பாடுங்கள்' என்று திருவாய்மலர்ந்தருளினர். இது, விருந்தினரை வரவேற்பவர் அவரை முன் உண்பித்தற்கு, 'உண்மின்' எனக் கூறுதல்போல்வதோர் இன்றியமையாத முகம

துரை. இஃது இல்லையேல், எதிரில் படைக்கப்பட்டுள்ள உணவை உண்ணுது தடையுண்டிருக்கும் விருந்தினர்போல, நாயனுர் இனியன பலவற்றினும் இனியனுய இறைவனைப் பாடுதற்கு வாய்விரைந்தெழினும் பாடாது தடையுண்டு நிற்பார். அதுபற்றியே பிள்ளையார் இவ்வாறு அருளிச்செய்தார். அவர் "உங்கள் பெருமான்" எனத் தமக்கு இயைபில்லாதார் போல அருளிச்செய்ததும், தாய் தந்தையர் தம் மகனைச் சிற்சில சமயங்களில் ஒருவருக்கொருவர் 'உன் மகன்' என்று குறித்தல் போன்றதேயன்றிப் பிறிதன்று. அஃதாவது, 'உம் இருவரையும் இயைபு படுத்தற்கு ஒருவர் இடை நிற்றல் வேண்டா; உமக்கே நேராய இயைபு உண்டு' என்பதனை விளக்கியவாறேயாம்.

பிள்ளையார், "பாடுமின்" எனப் பணித்த உடனே நாயனுர் அணைமுரிந்த வெள்ளம் போலப் பெருகிய அன்பினுல், கண்ணீர் பெருகக் கசிந்துருகி, மெய்க்கலைகளிற் பயிலும் சொற்கள் நிறைந்த திருப்பதிகத்தினைப் பெருமான்மீது பாடியருளினுர். அத்திருப்பதிகத்தினை இன்று யாம் பெற்றிலேம்.

பின்னர்த் திருமாளிகையின்மேல் நிலையாகிய திருத்தோணியில், பெரியபெருமாட்டியுடன் வீற்றிருந்தருளும் தோணியப்பரை இருவருமாகச் சென்று வணங்கினுர்கள். அங்கு அப்பர், "பார்கொண்டு மூடி" என்னும் திருவிருத்தத் திருப்பதிகத்தை அருளிச்செய்து வணங்கினுர். அதனுள்,

"யாவர்க்கும் எஞ்ஞான்றும் புகலிடமாவது
சிவபிரானது திருவடியே"

என்பதை விளக்கியருளினுர்.

தோணியப்பரை விட்டுப்பிரியமாட்டாதவராய் இருபெரு மக்களும் பின்பு அரிதிற் பிரிந்து வெளிப்போந்தருளினுர்கள். அப்பொழுது திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் திருநாவுக்கரசு நாயனுரைத் தம் திருமாளிகைக்கு அழைத்துச் செல்ல, அடியார் குழாங்களுடன் இருவருமாக எழுந்தருளி, அவண் திருவமுது கொண்டருளினுர்கள்.

இரு பேராசிரியர்க்கும் அன்று உண்டாகிய அருள் நட்பு நாள்தோறும் வளர்பிறை போல வளர்ந்தோங்க, திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தருடனே பல நாட்கள் சீகாழியிலே எழுந்தருளியிருந்தார். (தொடரும்)

வள்ளிமலை: சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9—2—62 முதல் 21—2—62 வரை நடைபெற்றது.

கீழையூர்: வீரட்டேசுவர சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9—2—62 முதல் 22—2—62 வரை நடைபெற்றது.

குன்றத்தூர்: சேக்கிழார் சுவாமிகள் கோயிலில் எட்டுக்கிரக சாந்தி விசேட அபிடேக அலங்காரமும் சிறப்புச் சொற்பொழிவும் நூல் நிலையத்திறப்புவிழாவும் 4—2—62 ல் நடைபெற்றன.

காஞ்சிபுரம்: காமாட்சி அம்பாள் கோயிலில் பிரம்மோற்சவம் 9—2—62 முதல் 21—2—62 வரை நடைபெற்றது.

கந்தகோட்டம்: முத்துக்குமார சுவாமி கோயிலில் அஷ்டகிரக சம்பந்தமான பரிகார சாந்தி மகாபிஷேகம் 2—2—62 முதல் 5—2—62 வரை நடைபெற்றது.

திருப்பனந்தாள்: அருணஜடேசுவர சுவாமி கோயிலில் நவக்கிரகப் பிரதிஷ்டை முகூர்த்தம் 2—2—62 ல் நடைபெற்றது.

திருச்செந்தூர்: சுப்பிரமணிய சுவாமி கோயிலில் மாசித் திருவிழா 10—2—62 முதல் 21—2—62 வரை நடைபெற்றது.

சிதம்பரம்: இளமையாக்கினுர் கோயிலில் திருநீலகண்ட நாயனுர் திருவிழா 28,29—2—62 தேதிகளில் நடைபெற்றது.

திருப்பந்தணைநல்லூர்: பசுபதீசுவர சுவாமி கோயிலில் மாசிமக மகோற்சவம் 10-2-62 முதல் 20—2—62 வரை நடைபெற்றது.

இளையாத்தகுடி

(கைலாசநாதசுவாமி கோயில்)

சீர்மலிந்திடுகைலை நன்முயகச் செம்மல்
வார்மலிந்திடு வனமுலைமங்கலை யுடனே
நேர்மலிந்திடு மிளசையை யகந்தழீஇ நிலவும்
பார்மலிந்திடு பாண்டிநாட்டணிசில பகர்வாம்.

பயன்மருவுற்றிடும் பாண்டி நாட்டினுள்
நயன்மருவுற்றிடு நகரம் யாவினும்
வியன்மருவுற்றிடு மேன்மை சான்றதோர்
இயன்மருவுற்றுள திளசை மாநகர்

—இளசைப் புராணம்.

இளையாத்தகுடி என்னும் திருவூர் இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்புத்தூர்ப் பகுதியிலிருக்கிறது. இவ்வூரை இளையாற்றங்குடி, இளையாத்தங்குடி, இளசை என்றும் வழங்குவர். திருமெய்யம் புகைவண்டி நிலையத்திலிருந்து இது 10 கல் தொலைவிலுள்ளது; செட்டிநாடு நிலையத்திலிருந்தும் 10 கல் தொலைவுதான்; காரைக்குடி இருப்புப் பாதை நிலையத்திலிருந்து 15 கல் தூரம். காரைக்குடி, திருப்புத்தூர், புதுக்கோட்டை, முதலிய ஊர்களிலிருந்து இவ்வூருக்கு பஸ் மூலம் செல்லலாம், மதுரையிலிருந்து திருப்புத்தூர் வழியாகச் சென்றால் 50 கல் தொலைவில் இருக்கிறது. இங்கு நகரத்தார்கள் விடுதிகளும், மற்றையோர் தங்குவதற்கு வசதியான விடுதிகளும் இருக்கின்றன.

இளையாத்தகுடி ஒரு அழகிய சிற்றூர். அதன் அமைப்பு ஒரு மாதிரிக் கிராமத்திற்கு வேண்டிய பலவகை அம்சங்களுடனும் பொருந்தியிருக்கிறது. கோயில்கள், பள்ளிகள், மருத்துவ நிலையம், அஞ்சல் நிலையம், நந்தவனம், திருக்குளங்கள், பூங்கா, பசுமடம் விடுதிகள் எல்லாம் முறையாக நன்கு அமைந்து விளங்குகின்றன. ஊருக்குள் நுழைந்ததும் நமக்கு முன்னர் தெரிவது திருக்குளமும், சிவன் கோயிலும், கோயில் அழகிய சிறு கோயில். கிழக்கு நோக்கியது; கோபுரத்துடன் திகழ்கிறது. நந்தி மண்டபம், உற்சவ மண்டபம், நவக்கிரக மண்டபம், மகா மண்டபம், அர்த்த மண்டபம், கர்ப்பகிரகம் முதலியவை முறையே அமைந்திருக்கின்றன. மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கமூர்த்தியே ஸ்ரீகைலாசநாதசுவாமி. அம்பிகையின் சந்நிதி தெற்கு நோக்கியிருக்கிறது. அம்பாளின் திருநாமம் நித்தியகல்யாணி என்பது. கிழக்குப் பிரகாரத்தில் மதில் சுவரில் காமாட்சியம்பிகை சிவலிங்கத்தை ஆலிங்கனம் செய்துகொண்டிருக்கும் காட்சி வனப்புடையது. இந்த சிற்பம் மிகவும் பழமையானதாகக் கூறப்படுகிறது. இந்த கோயிலிலுள்ள எல்லா உற்சவமூர்த்திகளும் கண்கவர் வனப்பினதாக உள்ளன. கோயிலும், மூர்த்திகளும், சுற்றுப்புறமும் மிகவும் தூய்மையாக வைக்கப்பட்டுள்ளன. பூசைகள், திருவிழாக்கள் முதலியன ஆகம முறைப்படி மிக ஒழுங்கான முறையில் நடக்கின்றன. நவராத்திரி விழா, திருவாதிரை விழா முதலியவை மிக்க சிறப்பாக நடைபெறுகின்றன.

கோயிலுக்கு முன்னிருக்கும் திருக்குளம் பிரளய தீர்த்தம் என்ற பெயருடையது. கோதாவரி தீரத்திலுள்ள சுபத்திரனர் என்ற அந்தணருக்கு மனக்கலக்கம் ஏற்பட, அவர் இளையாத்தகுடி வந்து இந்த தீர்த்தத்தில் நீராடி, கைலாசநாதர்—நித்தியகல்யாணி அம்மையை வழிபட்டு மனக்கிலேசம் நீங்கினர் என்று சொல்லப்படுகிறது. இதை,

இளசையெனுந் திருப்பதியை
யெய்திடுசு பத்திரனரினிய மைந்தர்
தெளிவுதரும் சிவதீர்த்தம்
திளைத்தாடித் தீர்த்தத்தின் செம்மையாலே
உளமிகுந்த சங்கையெலா
மொருவினவ சித்தரென வுரைத்தார் மிக்க
அளிதருமத் தீர்த்தத்தின்
அருமையினை அனைவோரும் அறியலாமே

என்று தலபுராணம் கூறுகிறது. இந்த திருக்குளம் பல ஆயிர ரூபாய் செலவில் தேவஸ்

த்தானத்தின் நகரத்தார்களின் ஒரு பகுதியாகிய ஒக்கூருடையார் கரைப்பிரிவு நகரத்தார்களால் ஏழு அலங்கங்களுடன் வெகு அழகாகக் கட்டப் பெற்றது. அதன் மேல் கரையில் ஒரு விநாயகர் கோயிலும் இருக்கிறது. இந்த கோயிலிலுள்ள ஏழு கரைப்பிரிவு நகரத்தார்களில் ஒக்கூர்ப் பிரிவு நகரத்தார்களைப்போல் மற்ற ஒவ்வொரு கரைப்பிரிவு நகரத்தார்களும் இவ்வூரில் தனித்தனியாக ஒரு ஊருணியும், அதற்காக ஒரு விநாயகர் கோயிலும் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

பாண்டிய மன்னர்கள் இத்தலத்து இறைவனைப் பூசித்ததாகப் புராணம் கூறுகிறது. பின்னர் ஆங்கில அரசாட்சிக்கு முன்னிருந்த இந்திய அரசர்கள் காலத்தில் இப்போது செட்டிநாடுகளிலுள்ள இளையாத்தகுடி கோயில் நகரத்தார்களுக்கு இந்தக் கோயில் சொந்தமாகி, அவர்களுடைய பராமரிப்பில் இருந்து வருகிறது. கோயில் பழமையானதாக இருந்தாலும் 1936-ல் திருப்பணி தொடங்கப் பெற்று 1939-ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கைலாசநாதர் கோயிலின் பின்புறம் திருமால் கோயிலும், திருக்குளக்கரையில் மங்தையம்மன் கோயிலும் இருக்கின்றன. ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தின் 65-ஆவது ஆசாரியர்களாக விளங்கிய ஸ்ரீமகாதேவேந்திர சரசுவதி சங்கராச்சாரிய சுவாமிகள் இவ்வூரில் தங்கியிருந்த போது, 20—3—1890-ல் கைலாசநாதர் சந்நிதியில் அகண்டாகார பிரம்ம சைதன்யமானார்கள். அவர்களுடைய சமாதியின் மேல் ஒரு கோயில் எழுப்பப் பெற்று அழகுடன் திகழ்கிறது. மற்றும் இங்குள்ள நந்தவனம் தனிச்சிறப்புடையது. ஏறக்குறைய இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் பல வகை வண்ணப் பூச் செடிகள், கொடிகள், மரங்கள் இவைகள் வைக்கப்பெற்றுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பொதுவாகச் சொன்னால் கைலாசநாதர்—நித்தியகல்யாணி அம்மன் கோயில் மற்ற கோயில்களுக்கு ஒரு வழிகாட்டியாக இலங்குகிறதென்று சொல்லலாம்.

இத்தலத்திற்குத் தலபுராணம் இளைசைப் புராணம் என்பது. இதைச் செய்யுள் வடிவிலும், உரைநடையிலும் இயற்றியவர் கணேச பண்டிதர் என்பவர். வடமொழியில் பிரமாண்ட புராணத்தில் பன்னிரண்டு அத்தியாயங்களில் இளைசை மான்மியம் சொல்லப் பட்டிருப்பதாக இந்த இரண்டு தமிழ் நூல்களிலும் குறிக்கப்படுகிறது.

களிதருங் காட்சி மேய
கயிலை நாயகனுர் செம்பொன்
அளவில் சீரடிகள் வாழ்க
நித்ய கல்யாணி யம்மை
ஒளிர்திரு முகத்திற் பூத்த
ஒப்பிலாக் கருணை வாழ்க
இளைசை மாநகரம் வாழ்க
இசை நகரத்தார் வாழ்க.

—இளைசைப் புராணம்.

வடபழநி: வடபழநி ஆண்டவர் கோயிலில் திரு. என். எஸ். சிதம்பரம் அவர்கள் இயற்றிய 'வடபழநி முருகன் பாமலர்' என்னும் கவிதைக்கொத்தை 2—2—62-ல் மாலை 6-30-மணிக்கு அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி. ஏ., பி. எல்., அவர்கள் வெளியிட்டார்கள்.

சிதம்பரம்: அனந்தீசுவரர் கோயிலில் அஷ்டக்கிரக சாந்தி நிவர்த்தி பூசை 2-2-62-ல் நடைபெற்றது.

திருக்கடம்பந்துறை: கதம்பவனேசுவரர் கோயிலில் மாசிமகப் பிரம்மோற்சவம் 9-2-62 முதல் 21—2—62 வரை நடைபெற்றது.

கும்பகோணம்: ஆதிகும்பேசுவர சுவாமி ஆலயத்தில் 10—2—62 முதல் 22-2-62 வரை மாசிமக உற்சவம் நடைபெற்றது.

காஞ்சிபுரம்: ஏகாம்பரர் கோயிலில் இவ்வாண்டு திருவெம்பாவை திருப்பாவை மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

[திரு. K. பட்சிராஜன், B.A. B.L., திருநெல்வேலி]

ஸ்ரீ உய்யக்கொண்டார் வைபவம்

ஸ்ரீ உய்யக்கொண்டார் திருவெள்ளறை என்ற புண்ணிய க்ஷேத்திரத்தில் கலி 3927-ல் பராபவ வருஷம் சித்திரை மாதம் கார்த்திகை நாளன்று இந்நிலவுலகில் அவதரித்தார். இவரை ஐயத்ஸேனும்சமாக அவதரித்ததாக வைணவர் கருதுகின்றனர். இவருக்குப் புண்டரீகாக்ஷர்,பத்மாக்ஷர், இராஜீவாக்ஷர், அரவிந்தாக்ஷர் என்னும் திருநாமங்கள் உண்டென்பர். கருவிலே திருவுடையவராய் அவதரித்த உய்யக்கொண்டார் உரிய பருவங்களில் செய்யவேண்டிய ஸம்ஸ்காரங்கள் செய்யப்பெற்று ஆண்டாள் என்ற நங்கையை மணம் செய்துகொண்டு இல்லறநெறி தவறாது ஒழுகி வந்தார். ஸகல வித்தைகளையும் கற்று, கற்றதற்கேற்ற அடக்கத்துடன் வாழ்ந்துவந்த இவர் ஸ்ரீமந்நாத முனிகள் சோழராஜன் அவையில் தேவகான மகிமையை நிலைநாட்டி மீண்டு வீரநாராயணத்தே வந்தெழுந்தருளியிருக்கும் காலத்தில் அம்மகான் திருவடிகளைக்கிட்டி அவருக்குச் சீடரானார். ஸ்ரீமந்நாதமுனிகளிடத்திலே திவ்யப்ரபந்தங்களைக் கற்று, திவ்யார்த்தம், ஸ்ரீபுருஷநிர்ணயம், ந்யாஸதத்துவம் முதலியவை எல்லாம் கேட்டுணர்ந்தார். பரமாசார்யரான ஸ்ரீமந்நாத முனிகளின் சிஷ்ய கோடியிலே ஆசார்யனுக்குப் பரமப்பிரியராய் இருந்து வந்தவர் இவர். இவரும் இவர் போன்ற பல சீடர்களும்தான் நாதமுனிகளின் ஆக்ஞைப்படி திவ்யப்ரபந்தங்களை உலகோரறியப் பரப்பினர். ஆன்ம உஜ்ஜீவன மருந்தாகிய திவ்யப்ரபந்தங்களை உலகோர்க்கெல்லாம் ஓதி அவ்வான்மகோடிகள் உய்ய வழி தேடிய அரிய தெய்வீகப்பணியில் தலைசிறந்தவராய் விளங்கி உலகை உய்யக்கொண்டதனாலேயே இம்மகான் இப்பெயர் பெற்றிருக்க வேண்டும் என்று ஊகித்தல் தவறாகாது. இவருக்கு இரண்டு பெண்மக்கள் பிறந்தார்கள்.

இங்ஙனம் வாழ்ந்து வருகையில் ஸ்ரீமந்நாத முனிகள்தான் கற்றிருந்த யோக சாஸ்த்ரத்தைத் தன் சீடர்களில் சிலருக்கேனும் கற்பிக்கக்கருதி குருகை காவலப்பன் என்பார்க்கு முதலில் கற்பித்தார். பின்னர் உய்யக்கொண்டாரை அழைத்து அவரையும் யோகப்பயிற்சியில் ஈடுபடும்படி சொல்ல உய்யக்கொண்டார் "ஐயனே பிணம் கிடக்க மணம் புணரலாமோ" என்று பதிலிறுத்தார். இவ்வரலாற்றை முன்னமே பார்த்தோம். உய்யக்கொண்டார் பதில் நாதமுனிகளைக் களிப்பித்திருக்கவேண்டும். யோகம் தன்னொருவனை உய்விக்கக்கூடியது. உலகெல்லாம் இறையுண்மையுணராது நடைப்பிணம்போல் கிடக்க அடியேன் என் ஒருத்தனுடைய உஜ்ஜீவனத்துக்கு வழிபார்க்கை தருமமாகுமா என்ற உய்யக்கொண்டாரின் பதில் அவருடைய பரந்த வைஷ்ணவ உள்ளத்தை நாதமுனிகளுக்கு வெளிப்படுத்தியது. எனவே நாதமுனிகளும் "நன்கு சொன்னீர். குருகைப்பிரான் தன் அகக்கண்ணிலே கண்ட,

"கண்டோம் கண்டோம் கண்டோம்
கண்ணுக்கினியன கண்டோம்
தொண்டீர் எல்லீரும் வாரீர் தொழுது
தொழுது நின்று ஆர்த்தும்!
வண்டார் தண்ணந் துழாயான் மாதவன்
பூதங்கள் மண்மேல்
பண்தான் பாடிநின்று ஆடிப்
பரந்து திரிகின்றனவே"

என்ற காட்சி புறக்கண்ணுக்கும் புலப்படுமாறு நீர் திவ்யப்ரபந்தங்களையும் வைணவ சாஸ்த்ரங்களையும் உலகமுய்ய எங்கும் பரப்பும்" என்று வாழ்த்தியருளினார். ஆசார்யன் அருள்பெற்ற உய்யக்கொண்டார் அந்தகைங்கர்யத்திலேயே தம் வாழ்நாளை அர்ப்பணித்து வாழ்ந்து வந்தார். நாதமுனிகளும் வைணவ சமயப் பிரசாரத்தை அம்மநம் முன்னுலிருந்த நிலைக்கு வரும்படி செய்யவல்லவர் உய்யக்கொண்டார் தாம் என்று தம் மனத்தே திருவுள்ளமாகியிருக்கவேண்டும். அதன் காரணமாகத்தான் தம் கனவிலே நம்மாழ்வார் காட்டிக்கொடுத்துப் பின் விக்ரகமாகவும் ப்ரஸாதித்த பவிஷ்யத் ராமாநுஜ விக்கிரகத்தை உய்யக்கொண்டாரிடம்கொடுத்துஇதனைத்தம் பேரனாகவும், ஈச்வரமுனிகள் குமாரராகவும் அவதரிக்கப்போகும் திருக்குமாரருக்குக் காட்

டிக்கொடுக்குமாறு கட்டளையிட்டருளினார். நாதமுனிகள் வில்லிகளையும், பெண்ணையும் குரங்கையும் நாடிப்போய்க் கடைசியில் இந் நடலையுடலை உதறித் திருநாடலங்கரித்தபின் ஸ்ரீமந்நாத முனிகள் ஸ்தானத்தில் உய்யக் கொண்டாரே பரமாசாரியராய் எழுந்தருளினார். தமக்குப் பின் அந்த ஸ்தானத் துக்குரியவர் அவரே என்று வரித்தேயன்றோ நாதமுனிகள் பவிஷ்யத் ராமாநுஜ விக்கிர கத்தை அவரிடம் ஒப்புவித்திருந்தார்?

இங்ஙனம் உய்யக்கொண்டார் தர்சன சாஸ்த்ரங்களையும் திவ்யப்ரபந்தங்களையும் ருசியுடையார்க்கெல்லாம் போதித்து வாழ்ந்து வருகையில் மணக்கால் நம்பிகள், திருவல் லிக்கேணிப் பாண்பெருமாளரையர், செட்டைபூசிச் சென்டலங்காரதாஸர், புண் டரீகாக்ஷதாஸர், கோமடம் திருவிண்ணகரப் பன், உலகு பெருமாள் நங்கை இவ்வறுவரும் அவர் திருவடிகளை அண்டி அர்த்த விசேஷங் கள் கேட்டு அவர் சீடர்களாக ஸேவை செய்து வந்தார்கள். இவ்வறுவருள்ளும் ஸ்ரீ மணக்கால் நம்பி என்பவர் உய்யக்கொண்டா ரிடம் மிகவும் ஈடுபாடுடையவராய், ஸ்ரீராம பிரானுக்கு வேண்டிய எல்லாப் பணிவிடை களையும் செய்துகொண்டுவந்த இளையபெரு மாள் (இலக்ஷ்மணன்)போலே, உய்யக்கொண் டாருக்கு வேண்டும் கைங்கர்யங்களைச்செய்து வாழ்ந்து வந்தார். இங்ஙனமிருக்கையில் ஸ்ரீ உய்யக்கொண்டாருடைய தேவியார் ஆண் டாள் திருநாட்டுக் கெழுந்தருளினாள். அந்த அம்மையார் காலமானதும் உய்யக்கொண் டார் திருமாளிகைத் திருமடைப்பள்ளி கைங் கர்யத்தையும் மணக்கால் நம்பியே ஏற்று நடத்தி வந்தார்.

ஒருநாள் உய்யக்கொண்டாரின் பெண்க ளிருவரையும் மணக்கால் நம்பி தீர்த்தமாடச் செய்து அழைத்து வந்துகொண்டிருந்தார். வரும் வழியிலே ஒரு குறுகிய வாய்க்கால் சேருக இருந்தது. பெண்களிருவரும் தாண்டி வரவும் இயலாது. அவர்கள் கால்களில் சேறு படுவதையும் மணக்கால் நம்பி விரும்பவில்லை. பெண்கள் தயங்கி நின்றனர். உடனே மணக்கால் நம்பி வாய்க்காலின் குறுக்கே குப் புறப்படுத்தார். பெண்களிருவரையும் தம் முதுகின்மேல் அடியிட்டு அக்கரை சேர நிர்ப் பந்தமாகப் பிரார்த்தித்து அவர்களை மறு கரை சேர்த்தார். இந்தச் செய்தியைக் கேள்வி யுற்ற உய்யக்கொண்டார் உள்ளம் நீராய் உருகியது. மணக்கால் நம்பியின் ஆசார்ய பக்தி உய்யக்கொண்டாரைப் பரவசப்படுத் தியது. அவர் மணக்கால் நம்பியை அழைத்து "நீர் இங்ஙனம் செய்யலாமோ. நாம் உமக்கு என் செய்யக்கடவோம்" என்று கேட்டார். மணக்கால் நம்பி உடனே சாஷ்டாங்கமாக அவர் திருவடிகளில் விழுந்து உய்யக்கொண் டார் திருவடிகளிரண்டையும் தம் தலைக்கணி யாகச் சூட்டிக்கொண்டு "உற்றேன் உகந்து பணிசெய்து உன்பாதம் பெற்றேன், ஈதே இன்னம் வேண்டுவது எந்தாய்" என்ற நம் மாழ்வார் பாசுரத்தை நாத்தழுதழுக்க அநு சந்தித்து இந்தத் திருவடிகள் சம்பந்தம் என் றும் மாறாது அடியேனுக்கு நிலைக்கத் தேவரீர் திருவுள்ளம் பற்றவேணும். இதுவே அடி யேன் வேண்டுவது என்று பிரார்த்தித்தார். உய்யக்கொண்டாரும் மிகவும் மகிழ்ந்தவராய் அவரை வாரியெடுத்து அருகமர்த்தி அவருக்கு போயகாலங்கள் போகுகாலங்களின் தன்மை இருக்கும்படியையும், ஆத்மஸ்வரூப நிலையை யும், வேதாந்த உட்பொருள்களையும் விளங்க உரைத்து த்வயத்தையும் உபதேசித்தரு ளினார்.

சில காலம் கழிந்தவாறே உய்யக்கொண் டார் திருமேனி தளர்ந்து திருநாட்டுக்கு எழுந் தருளும் தசையாக அப்போது மணக்கால் நம்பியும் மற்றைய சீடர்களும் உய்யக்கொண் டாரின் அருகிருந்து இனி தர்சனத்தை வளர்ப்பது யார்? என்று மிகவும் கலலையோடு உய்யக்கொண்டாரை வினவினர். அவரும் மணக்கால் நம்பியை அருகழைத்து மற்றைய சீடர்களையும் காட்டி மணக்கால் நம்பியை நோக்கி "இனி நீரே நம் ஸ்தானத்திலிருந்து நம் தர்சனத்தை உலகெலாம் பரப்ப வழி செய்யும்" என்று நியமித்தார். மணக்கால் நம்பியும் ஆசாரியன் கட்டளையை வணங்கி ஏற்றுக்கொண்டார். பிறகு உய்யக்கொண் டார் நாதமுனிகள் தம்மிடம் அளித்திருந்த பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தைக் கையில் எடுத்து மணக்கால் நம்பியை அருகழைத்து அவர் செவிகளிலே "பரமாசார்யரான ஸ்ரீமந் நாத முனிகள் தம்முடைய அந்திமதசையிலே இந்த விக்ரஹத்தை நமக்குக் காட்டிக் கொடுத்து "ஈச்வரமுனிகளுக்கு ஒரு புதல்வர் உண்டாகப் போகிறார் என்றும் அவருக்கு

"யமுனைத்துறைவர்" என்று திருநாமம் இட்டு, ஆழ்வார்களின் அருளிச் செயல்களையும், தர்சனசாத்திரங்களையும் அறிவித்து இந்த விக்ரஹத்தை அவருக்குத் தஞ்சமாக காட்டிக்கொடுக்கவேண்டும் என்று நமக்கு நியமித்திருந்தார். அந்நியமனப்படி செய்து தலைக்கட்ட வேணும் என்று நாம் எவ்வளவோ ஆசையோடு இருந்தும் நம் காலத்திலே அப்புதல்வர் அவதரிக்கக் கண்டிலோம். ஆகையால் இனி இருக்கப்போகிறவர் நீர் தாம். ஆகவே அப்புதல்வர் அவதரித்து தக்க வயதானதும், அவருக்கு திவ்யப்பிரபந்தங்களையும், சமய சாத்திரங்களையும் பழுக்க ஓதி இவ்விக்ரஹத்தை அவர் திருப்பாட்டனுர் விரும்பின விஷயம் என்று அவருக்குத் தஞ்சமாகக் காட்டிக்கொடுத்து நம் தர்சனத்தை வளர்க்கும்படி செய்வீர்" என்று நியமித்து ஸ்ரீமந்நாத முனிகளுடைய திருவடிகளை தம் மனத்து இருத்தியவராய், அவற்றையே தஞ்சமாகக்கொண்டு திருநாட்டுக்கு எழுந்தருளினுர்.

உய்யக்கொண்டார் இந்நில உலகை விட்டு அடியார்நிலாவுகின்ற வைகுந்தம்எழுந்தருளினுர் என்பதை உணர்ந்த மணக்கால் நம்பி உள்ளிட்ட சீடர்கள் மிகவும் மனம் கசிந்து புலம்பி, பின் ஒருவாறு தேறி ஸ்ரீஉய்யக்கொண்டாரின் சரமவிக்ரஹத்தை பிரம்மமேத முறைப்படி திருப்பள்ளிபடுத்தி மற்றும் செய்யவேண்டியவற்றை குறைவறச் செய்து முடித்தார்கள். பின்னர் மணக்கால் நம்பி ஆசார்யர் நியமனப்படி தர்சனத்தை பரப்பி, வளர்த்து வாழ்ந்து வந்தார்.

ஸ்ரீ உய்யக்கொண்டார் 105 வருடங்கள் வாழ்ந்தனர் என்று குருபரம்பரை கூறும். ஸ்ரீஉய்யக்கொண்டார் திருவடிகளே சரணம்.

(தொடரும்)

இராமேசுவரம் கோயில் இரண்டாம் பிரகாரத்திருப்பணி துவக்க விழா

—:○:—

இந்து சமய அறநிலையக்குழுத் தலைவர் டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர் அவர்களால் 26—1—62-ல் இக்கோயில் 2-ம் பிரகாரத்திருப்பணி துவக்கிவைக்கப்பட்டது. சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி. ஏ., பி. எல்., அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார்கள். தேவஸ்தான தருமகர்த்தர் திரு.டி. சீனிவாசன் அவர்கள் டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர் அவர்களை வரவேற்று விழாவை நடத்திவைக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். திருப்பணிக்கு முதலாவது கல்தூணை டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் நாட்டிவைத்து இக்கோயிலின் புராண வரலாறுகளையும் பல்வேறு மன்னர்களாலும் நகரத்தார்களாலும் திருப்பணிகள் செய்யப்பட்டது பற்றியும் இப்போது தொடங்கப்படும் திருப்பணி நல்ல முறையில் விரைவில் முடிவு பெற வேண்டுமென்றும் கூறினுர்கள். விழாவுக்குத் தலைமைதாங்கிய அறநிலைய ஆணையர் ஆலயத்திருப்பணிகளில் அரசாங்கம் ஆதரவுகாட்டுவதைப் பாராட்டியும் கடல்கடந்து கற்களைக் கொண்டுவந்து இத்தீவில் கட்டப்பட்டுள்ள இக்கோயிலின் பெருமையைப்பற்றியும், இரண்டாம் பிரகாரம் கட்டி முடிவடைந்தால் இக்கோயில் மிகவும் அழகாக இருக்கும் என்றும் அதன் அவசியத்தைப்பற்றியும் இத்திருப்பணி விரைவில் முடிவுபெற எல்லோரும் உதவும்படியும் கேட்டுக்கொண்டார்கள். நிர்வாக அதிகாரி திரு. வி. சுந்தரராஜன், பி. ஏ., பி. எல்., அவர்கள் விழாவுக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்கள்.

இராமேசுவரம் கோயில் இரண்டாம் பிரகாரத் திருப்பணிக்கு
டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் அடிக்கல் நாட்டுதல்

இராமேசுவரம் கோயில் இரண்டாம் பிரகாரத் திருப்பணித் துவக்க விழாவில்
ஆணையர் உரை நிகழ்த்தல்

திருவிழா விளக்கம்

நித்தியம், நித்தியாங்கம், நைமித்திகம், நைமித்திகாங்கம், காமிகம், காமிகாங்கம் என ஒன்பது வகைகளாற் செயப்படுவது தேவாலய பூசையாம்.

திருவிழாத் தரிசனஞ் செய்வோர், முன்னர், வலம் வரல், வணங்கல்களைச் செய்தல் வேண்டும். அவை, பரசிவத்தினது வியாபகத்தில் சீவனுடைய அடக்கத்தன்மையை குறிக்கின்றன.

ஏனெனின்? வணக்கம், வணங்கப்படு பொருளின் உயர்வுணர்ச்சி மூலமாய், வணங்குவோனது தாழ்வுணர்ச்சியாலெழும் கைகால்களின் செய்கையாம். இதனுல், கடலில் நதி கலப்பதுபோன்று தற்போதமுள்ள பிரம விட்டுணுக்களின் செய்கையைத் தள்ளிவிட்டு, சீவன், பிரமப்பொருளாகிய பரசிவத்தில் இரண்டறக் கலத்தல் பெறப்பட்டமை காண்க.

இப்பொருளையே,

அயன்மா லிவர்கீழ் ஆகையின் பொருட்டுச்
சயமான புறவெதிர் தண்டம் பண்ணி

என்னுந் திருவாக்கும் விளக்குகின்றது.

சிவதரிசனம், இது சரியை, கிரியைகளை யுடையவர்கள் பரமசிவத்தை பகிர்முக வடிவிற்கண்டு வணங்குதலும், யோகிகள், உள்ளக் கமலத்திற் கண்டுவத்தலுமாம்.

ஞானிகள் எல்லாமாய்க் கண்டின்புறுவர். இதையாராயின், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, என்பவைகளால் பரசிவவுண்மையைத் தெளிந்து மெய்யுணர்வு பெற்று, யாண்டும் பரமானந்தத்தைக் காண்டலாம். இதையே,

"தெரிவரிய பரமானந்தத்திற் சேர்தல்
சிவனுண்மைத் தரிசனமாய்ச் செப்புநூலே"

என்னுந் திருவாக்காற் கண்டு தெளிக.

அபிடேகஞ் செய்தல், இது மாக்காப்பினுற் செய்தோர் தானியாதிபதியும், திருமஞ்சனத்தாற் செய்தோர் மிகுந்த சம்பத்தை யுடையரும், பாலினுற் செய்தோர் சாந்தமுடையரும், தயிராற் செய்தோர் வன்மை மிகுந்த தேகமுடையரும், நெய்யினுற் செய்தோர் பத்மினியின் போகமுடையரும், தேனுற் செய்தோர் சங்கீத வன்மையுடையரும், சக்கரையாற் செய்தோர் சாத்திர வல்லுநரும், இளநீராற் செய்தோர் சற்புத்திரனை யுடையரும், பழவகைகளாற் செய்தோர் வசிகரணமுடையரும், பஞ்சாமிருதத்தாற் செய்தோர் நீண்ட ஆயுளையுடையவரும், நறுமணச் சாந்து முதலியவைகளாற் செய்வோர் அரம்பையர் நறுமணக் கலவையைப்பூச, கற்பகதரு நீழலில் வாழ்ந்து உய்பவரும், சுத்த நீராற் செய்தோர் அசுவமேத பலனுடையவரும், ஆவர் என்று உண்மை நூல்கள் கூறுகின்றன.

முக்தியை விரும்புவோர், இவை பேரின்பத்தைக் கொடுக்கமாட்டாதனவென்று நீக்கி, அருட்போத மலத்தை அருணீராற் சுத்தி செய்து வீட்டை யடைவர்.

மற்றும், உலகனைத்தையும் கானனீரெனக் கண்டு தெளியும் தத்துவஞானமே திருமஞ்சன மென்பதுமாம்.

இதை,

'இன்ன கடவுளிலிங்கத்தின் மேனி
குளிப்ப வெழுந்தோங்கு'

என்றற்றெடக்கத்துக் காசிக்காண்டச் செய்யுளிற் காண்க.

மற்றும்,

ஓதும் பேதம் பேய்த்தேரென்
றுணர்தலது வொண்புன லாகும்

என்பதனுலும் உணர்க.

திருப்பள்ளித்தாமம், அந்தர்ப்பூசையில் தன்னை ஒரு மாலையாகச் சாத்தி யுய்தலாம்.

இதை,

'தம்மை யொருபூவாகப்
பூவழியாமற் கொடுத்து'

என்பதனுனும், பிறவற்றுனுமுணர்க.

முரசு முதலிய வாத்தியங்களை முழங்கல் இது, ஆறுதாரங்கட்கும் மேலாய் விளங்கும்

பிரமரந்திரத்தில் சந்திர மண்டலத்தை யிளக்கி, உருகப்பாயும் அமுதவெள்ளம் நாடிகளில் நிறையுங்கால், பத்து நாடிகளில் எழும், சதங்கை யொலி, சிலம்பொலி, கண்டாமணி யொலி, சங்கவொலி, வீணை யொலி, தாளவொலி, புல்லாங்குழலொலி, பேரிகையொலி, மத்தளவொலி, மேகவொலிகள் போன்ற முழக்கங்களைக் கேட்டுய்தலைக் குறிக்கின்றது.
இதை,

'என்றுமொரு தகைமையா
யிருக்கு மின்னருளே
நின்று முழங்கு
நெடு முரசோன்'

எனவும்,

சுத்தமா நாதத்தொனிகளும் பலவாத்
தோன்றிடு மணிகுழன் மேழகம்,
மத்தளம் பேரி யாழொலி
சிலம்பு வளைகிணி
தாள மென்றுமையாட்கு அத்தனு
மொழிந்தான்

எனவும், பிறவும், கூறுமாற்றுனறிக.

இதம்பாடல், பரசிவன் நாதவடிவா மெனலைக் குறிக்கின்றது.

இதை,

ஆதிநம்பனுருநாத வுருவாகு மெனமுன்
ஓதுகின்ற மறை யாவையும்,

என்றற் ளுெடக்கத்துத் திருவாக்குகளாற் றெளிக.

திருவிழாக்களிற் செய்யும் உபசாரமானது, சோடசம், தசம், பஞ்சம் என மூவகைப் படும்.

அவற்றுள், ஆவாகனஞ் செய்தல், ஆன்மா, பரசிவனது பேரொளியைத், திருவருளால் உள்ளவாறுணர்ந்து அதிலடங்கலாம்.

இதை,

'அறிவிலமுந்துதல் ஆவாகனமே'

என்றற் ளுெடக்கத்துத் திருவாக்குகளாற் றெளிக.

தாபனம், இது மேற்கூறிய நிலையிலேயே அழுந்திக் கிடத்தலாம்.

இதை,

'அலையா தழுந்தி நிலைபெறல் தாபனம்'

ஏன்பதனுற் காண்க.

சந்நிதானம், இது பரசிவ நிறைவும் ஆன்மாவி னறிவும் ஒற்றித்தலாம்.
இதை,

இவன்றன தறிவு சிவன் பூரணத்திலும்
சிவன் பூரணத்துவ மிவன்றன தறிவிலும்
ஒன்றை யொன்றகலா துறவு செய்திருப்பது
ஒன்றிய சந்நிதான மென்றுரைப்பர்

என்பதனுற் றெளிக.

சந்நிரோதனம், ஆன்மவறிவு, சிவத்தில் எக்காலத்தும் கலந்து போதலாம்.
இதை,

இவனிடத்துறு மறிவென்று மொழியாச்
சமையது தானே சந்நிரோதனம்

என்பதனுற் காண்க.

பாத்தியம், பரசிவனது இச்சை ஞானக் கிரியைகள் பொருந்தின ஒளிநீழலிற் சேர்தலாம்.

ஆசமனீயம், திருவருட்டன்மை மிக்க திருமுகத்திற் பொருந்துதலாம்.

அருக்கியம், அருளைக்கழலும் திருமுடியிற் பொருத்துவதாம்.

புட்பதானமாவது, சம்பாவனை, சந்தோடம், கொல்லாமை, வாய்மை, பொறியடக்கல், அருள், அறிவு, தவம், அன்பு என்னும் புஷ்பங்களால் நிட்களமாகிய பரசிவனுக்கு அலங்காரஞ் செய்தலாம். அதாவது இவற்ருல் பரம் பொருளை யருச்சித்தலாம்.
இதை,

அறிவு சம்பாவனை சந்தோடமெனு
மலர்களா லந்தத் தேவாம்
பிறிவரிய வாத்தும தத்துவத்தை
யருச்சிப்பதே பெரிய பூசை

என்றற் ளுெடக்கத்துத் திருவாக்குகளாலுணர்க.

மற்றும்,

பத்தி மலர்தூவ முத்தியாகுமே

என்பதனுனு முணர்க.

தூப தீபமிடல், மலத்தைப் போக்கும் கிரியாசத்தியே தூபமாம். ஞானவிளக்கே தீபமாம்.

இதை,

ஞானவிளக்காம் நண்ணுதற் பொருட்டு
தூபதீபந் துதைந்தினி தளித்து

என்பதனுற் காண்க,

நைவேத்தியம், பரமசிவத்திற்கு பராபர போதக் கழற்சியே திருப்திமயமாதலின், அகங்காரம், சங்கற்பம், குரோதம், மோகம், கொலை முதலானவைகளைக் கெடுத்தல், அருப்பித்தல் முகவாசம் என்பவற்றைக் குறிக்கின்றது.

இதை,

....
கண்ணீராட்டிச் சொன்னமல ரணிந்து
தற்போத இன்னமுதை யூட்டித்
தற்பர ஞானமாம் ஓமவெங்
கனலை மூட்டிச் சம்புவின்
பூசைமேன் முயற்சிய ராஞர்

என்னுந் திருவாக்காலுணர்க.

மற்றும், இதை

"கள்ளவினைப் பசுபோதக்
கவளமிடக் களித்துண்டு"

எனவும்,

"பின்மன மமைவு பிறத்தற் பொருட்டு
நைவேத்திய முகவாசமு நல்கி"

எனவும், பிறவும் கூறுமாற்ரு னுணர்க.

செபஞ்செய்தல், சிவ வுபாதிகளையும், சக்தி யுபாதிகளையும் பின்னமறத் தரிசிக்க லாம்.

இதை,

"மூகனுறச் செபித்தபின் முன்போல் நிட்களந்
தாளுகவுஞ் செப தர்ப்பணம் பண்ணி"

என்பதனுற் காண்க.

கர்ப்பூரார்த்தி, கர்ப்பூரம்போல் ஆன்மா வானது சாத்துவிகமாகி, பின்னர், அது தீயில் ஒன்றுபடல்போல் சிவத்துடன் ஒன்றுபடல் வேண்டுமென்பதைக் குறிக்கின்றது.

இதை,

அக்கினி கற்பூரத்தை
யறவிழுங்கிக் கொண்டாற்போல்
மக்கினம் பட்டுள்ளே
மருவி யிருந்தாண்டி

எனவும்,

"தீதணை யாக் கற்பூர
தீபமென நானகண்ட
சோதியுட னென்றித்
துரிசறுப்ப தெக்காலம்"

எனவும், பிறவும் கூறுமாற்ரு னுணர்க.

இவ்வாற்ருல், ஆவாகனம் முதல் புட்ப தானம்வரை, தசோபசாரங்களின் தத்துவங் களைக் கண்டு தெளிக.

பஞ்சவுபசாரங்களுள், பூ முதலாயின வைகளும், அன்னம், ஆடை முதலானவை களும், பலம் முதலானவைகளும் மண் சம்பந் தமானவைகளாதலின் பார்த்திவோபசாரமா கும்.

நீர், பால், தயிர் முதலானவை நீர் சம் பந்தமாதலின் ஆப்யோபசாரமாம். (அப்பு வின் உபசாரமாம்.)

பொன், வெள்ளி, ஆபரணங்கள், தீபம், கண்ணுடி முதலாயின தீயின் சம்பந்தமாத லின் தைஜச வுபசாரமாம்.

தூபம், சாமரம், மயில் விசிறி முதலா யின, காற்றின் சம்பந்தமாதலின், வாயவீய வுபசாரமாம்.

மணியோசை, மந்திரம் முதலாயின, வானின் சம்பந்தமாதலின் வைஹாயச வுபசா ரமாம் எனப்படுகின்றன.

யாகம், இது, தேகம் வேதியாகவும், மூக்கு அந்தர்வேதியாகவும், தலை துரோண கலசமாகவும், பாதம் ரதமாகவும், வலக்கை சுருவாகவும், இடக்கை நெய்ப்பாத்திரமாக வும், சபையோர்கள் புலன்களாகவும், பூதங் கள் பிரயாசைகளாகவும், பல், உதடு, சூத்தா வாக மாகவும், நாக்கு யுவாகமாகவும், மிருதி, தயையாகவும், ஓங்காரம் யூபமாகவும், ஆசை கயிருகவும், மனது ரசமாகவும், காமம் பசுவா கவும், மயிர் தருப்பைகளாகவும், இந்திரியங் கள் யாகபாத்திரங்களாகவும், கன்மேந்திரி யங்கள் அவிசுகளாகவும், கொல்லாமையே யாகமாகவும், எவற்றையும் விடுதலே தட்ச ணையாகவும், செய்யப்படும் ஞானம் பாகத் தைக் குறிக்கின்றது.

கும்பம், உடம்பாம். புடவை தோலாம். செந்நிற மண் பூச்சு இரத்தமாம். மண் மாமி சமாம். அதில் நிறைந்துள்ள நீர் மேதையாம். கூர்ச்சம் எலும்பாம். நூற்கள் நரம்புகளாம். அதனுள்ளிட்ட நவரத்தினம் புட்பமாம். நியாசஞ் செய்யும் மந்திரம் உயிராம். கீழ்ப் பரப்பிய, நெல், அரிசி, எள்ளு, பயறு, உளுந்து, துவரை, கோதுமைகள் ஆசனமாம். இவற்றை நூலாற் றெளிக.

கால நியமங்கள், பிராண வாயுவின் கதியை முன்னிட்டதாய், மனோலயங்கட்குக் கருவியாமென்பதைக் குறிக்கின்றன.

கொடி யேற்றுதல், ஆணவத்தின் அர சாட்சியும், அதன் சைன்யமான காமம்

வெகுளி, மயக்க முதலான பகைவர் ஒழிவதை யும், சிவஞான அரசாட்சியும், அதன் சைன்ய மான, அருள், தயை சாந்தி முதலான சைன் யங்கள் ஓங்குவதையும் குறிக்கின்றது.

இதை,

'தாக்கர் வுணர்வரிய தன்மையனை—நோக்கிப்
பிரித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கு மருணல்கக் கொடி.'

எனவும்,

"நீ புரவா வையமெலா நீ யறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி"

என்பதனு முணர்க.

முதல் நாள் விழாவானது, கட்புலனுக் குத் தோற்றப்படும் அன்னமயத்தாற் பரிண மித்த கருவிகளெல்லாம் சடமாதலின், சித்தா கிய ஆன்மா அவற்றினின்றும் வேறென்று காட்டுவதற்காம்.

இரண்டாம் நாள் விழாவானது, சூக்கும வுடம்பினின்றும் வேறாய் ஆன்மா உண் டென்று தெரிவித்தற் பொருட்டாம்.

மூன்றாம் நாள் விழாவானது, மூவினை, மூன்று புத்தி, முக்குணம், மும்மலம், முக்குற் றம், முப்பிறப்பு முதலானவற்றை நீக்குந்தன் மையை அறிவிப்பதாம்.

நான்காம்நாள் விழாவானது, அந்தக் கரண நான்கையும், நால்வகைத் தோற்றத் தையும், நீக்குதற் பொருட்டாம்.

ஐந்தாம் நாள் விழாவானது, ஐம்பொறி, ஐந்தவத்தை, ஐம்மலங்களையும் நீக்குந்தன் மையைக் குறிப்பதாம்.

ஆறாம் நாள் விழாவானது, உட்பகை யாந்தன்மையை, அத்துவா ஆறு, கன்மமலங் கள் ஆறு, பதமுத்தி ஆறு என்னும் ஆறு வகைகளை நீக்குங் குறிப்பாம்.

ஏழாம் நாள் விழாவானது, எழுவகைப் பிறப்புகள், காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்னும் வித்தியா தத்துவங்கள் ஏழு, அஞ்ஞானம், பொய் அயர்வு, மோகம், சூனியம், மாச்சரியம், பயம், என்னும் மாயையின் மலம் ஏழையும் நீக்குங் குறிப்பாம்.

எட்டாம்நாள் விழாவானது பரசிவனது எண்குணங்களை விளக்குதற்காம்.

ஒன்பதாம் நாள் விழாவானது, நிஷ் களம் சகளம், சகள நிஷ்களம், படைத்தல், காத்தல், அழித்தல், சுவர்க்கம், மத்தியம், பாதாளம், என்னுமிவைகள் உண்மையில் இல்லையென்றுணர்த்தற் பொருட்டாம்.

பத்தாம் நாள் விழாவானது, அந்த மிலாத சிவானந்தக் கடலில் மூழ்கி யிருக்குந் தன்மையைக் குறிக்கின்றது.

முதல் நாள் விருக்ஷத்தடிச்சேவை, இது சிருட்டிக்கோலமாம்.

இரண்டாம் நாள், சூரிய சந்திர பிரபா கர திருக்காட்சி, இது, திதிக்கோலமாம்.

மூன்றாம் நாள், நந்தி பூதவாகனம் இவற் றுள், அதிகார நந்தி, திருமால்நந்தி, தரும நந்தி, என்பவற்றுள் அதிகார நந்தியாரோ கணமும், பூதவாகன ஆரோகணத் திருக்காட் சியுமாம். இது சங்கார கோலத்தைக் காட்டு கின்றது.

நாலாம் நாள், ஐம்முக நாகவாகனம், இது திரோபவக்கோலமாம்.

ஐந்தாம் நாள், இலிங்காகார இடப வாகனுரோகணம், இது அநுக்கிரகக் கோல மாம்.

ஆறாம் நாள் யானைவாகனம், இது லயக் கிரமஞ் செய்தருளுங் கோலமாம்.

ஏழாம் நாள், இரதக் காட்சி, இது, திரி புர தகனக் கோலமாம்.

எட்டாம் நாள் குதிரை வாகனம். இது, எல்லாத் தத்துவங்களின் மேலும் பரசிவம் ஏறிநின்றருளுகின்றவர்; அதாவது எல்லாவற் றின் மேலாய் விளங்குகின்றவர் என்பதைக் காட்டுகின்றது.

ஒன்பதாம் நாள் பிக்ஷாடன மூர்த்தக் காட்சி. இது, முடிவில் எல்லாவற்றையும் துறத்தலே முத்தியின்பைத் தருமென் றுணர்த்தி யருளலாம்.

பத்தாம் நாள் நடனக்காட்சி. இது, அடியார்களிடத்துள்ள பந்தமனைத்தையு மகற்றியருளலாம். ஆதலின் இது பந்தம்பறி எனவும் வழங்கப்படுகின்றது.

பதினோராம் நாள் தியாகராஜ மூர்த்தி தரிசனம். இது, சிவனுஞ் சீவனும் ஒன்ரு தலைக் குறிக்கின்றது. மற்றும் இவ்வாறே யூகித்துணர்ந்து கொள்க.

(திருவொற்றியூர்த் தலபுராண சாரம் என்ற நூலில் காசி-வாசி சிவானந்தயதீந்தர சுவாமிகள் எழுதிய முன்னுரையினின்றும் வெளியிடப் பெற்றது.)

சிவஞானபோதம்

திரு. K. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.

முன் தொடர்ச்சி :—

அசுத்தமாயா காரியதத்துவங்கள்

அசுத்தமாயையின் காரியமாகிய தத்துவங்கள் வித்தியாதத்துவம் ஆன்மதத்துவம் என இருவகைப்பட்டு, விரியால் முப்பத்தொன்றும்.

அவற்றுள் வித்தியாதத்துவம் ஏழு: அவை மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் எனப்படும். களிமண்ணிலிருந்து குடத்தைவனையப் புகும்போது அதன் ஒரு பாகத்தைத் தண்ணீர் கலந்து குழப்பிக் கொள்ளுவர்; அதுபோல, அளப்பரும் பரப்பினதாகிய மாயாசத்தியில் ஒருபாகம் உயிர்களின் வினைக்குப் பற்றுக்கோடாக முதல்வனால் கலக்கப்படும். அக்கலங்கிய பாகமே மாயை (காரியமாயை) என்னுந் தத்துவமாம். இஃது உயிர்க்கு மயக்கத்தைக்கொடுத்து ஒருவகை இன்பத்தையும் தரும்; ஆழ்ந்த உறக்கத்தில் ஒருவனுக்கு உள்ள மயக்கமும் இன்பமும் இதனால் ஆவனவே ஆகும். தைத்திரீய உபநிடதத்தில் கூறப்படும் ஐந்து கோசங்களுள் ஆனந்தமய கோசம் என்பது மாயை எனப்படும் இத்தத்துவமே ஆகும்.

இம் மாயையினின்று காலம், நியதி, கலை என்னும் மூன்று தத்துவங்கள் முறையே தோன்றும். இவற்றுள் கலை என்பது உயிர்களை மூர்ச்சை நிலையினின்றும் நீக்கி முயற்சியைப் பயப்பது. உயிரின் உணர்வை உலக போகத்தில் செலுத்துவதும் இக்கலையே ஆகும். கலை என்னும் சொல்லின் பகுதி கலி என்பது. கலித்தல் என்பது நீக்குதல், செலுத்துதல் என்னும் இருபொருளையும் தரும். காலம் என்பது வினை நிகழ்ச்சிகளை, இனி நிகழும் எனவும், நிகழ்கின்றது எனவும், முன் நிகழ்ந்தது எனவும் முக்காலத்தொடு கூட்டி உணரவைத்து, அவற்றான் ஆகும் பயனை இனிவரும் எனவும், இப்போது உள்ளது எனவும், முடிந்துவிட்டது எனவும் உணர்தற்குத் துணையாக நிற்பது. நியதி என்பது அரச நீதிபோல, ஒரு வினையின் பயனை அதனைச் செய்த உயிரே அடையும்படி நியமிக்கும் கருவி.

கலையினின்று வித்தையும், வித்தையினின்றும் அராகமும் தோன்றும். உயிர்களின் அறிவைப் பொதுவாக விளங்கவைப்பது வித்தை என்னும் தத்துவம்; உலக நுகர்ச்சியில் விழைவை உண்டுபண்ணும் தத்துவம் அராகம். அராகம்—விருப்பம்.

மூலமலத்தால் மறைப்புண்டு மூர்ச்சை நிலையில் உள்ள உயிர் காரிய மாயையில் தோய்தலால் பொதுவாக ஓர் உணர்வு வரப்பெற்று மயக்கத்தோடு கூடிய ஒருவகை இன்பத்தை உடையதாகும்: இது மூர்ச்சையாகி மயங்கி விழுந்த ஒருவன், தன்முகத்தில் தண்ணீரைத் தெளித்துக்காற்றை வீசும்பொழுது, உணர்வு வரப்பெற்றுக் கண்ணை விழிப்பது போன்றதொரு நிலை.

பின், கலை காலம் நியதி வித்தை அராகம் என்னும் ஐந்து தத்துவங்களோடும் கூடப் பெறுதலால், உயிர் முயற்சி, அறிவு, விழைவு, என்பவற்றை உடையதாகி, காலம், இடம், என்னும் அடிப்படையுணர்வும் வரப்பெறும். இந்த ஐந்து தத்துவங்களும், ஒருவன் உடம்பைவிட்டு நீங்காச் சட்டைபோல, உடனிற்பவை ஆகலின், இவை பஞ்ச கஞ்சுகம் (ஐந்தாறுய சட்டை) எனப்படும். இவற்றின் தொகுதியினையே தைத்திரீயஉபநிடதம் விஞ்ஞானமயகோசம் என்கின்றது.

மேலே கூறிய கலையினின்றும் பிரகிருதி என்னும்பொருள் தோன்றும். உயிரை ஓர் ஆண்மகன் என்று கொண்டால் பிரகிருதியை அவ்வாடவனைத் தன் குணங்களாலும் ஆடை அணிகளாலும் மயக்கித் தன்வயப்படுத்தும் பெண்டாட்டி எனலாம். உயிர் மேலே கூறிய இருவகைக் கோசங்களால் தன் உணர்வு பொதுவாகவும், முயற்சி, அறிவு, விழைவு எனப் பிரிந்தும் விளங்கப்பெற்று, பிரகிருதி காரியங்களில் மயங்கும் நிலையில் புருடன் எனப்படும். புருடன் என்பது உயிர்க்கு

வேறாக உள்ளதொரு தத்துவம் அன்று; ஆயினும், உயிரைத் தூய்மை செய்யும் திக்கைச் செயலில் புருடனாய் நிற்கும் நிலை தூய்மை பெறவேண்டும் என்பது உணர்த்துதற்கு அதனையும் ஓர் தத்துவம் எனப் பிறவற்றோடும் எண்ணும் நூல்கள். இதுகாறும் வித்தியா தத்துவம் எனப்படும் ஏழன் தோற்ற முறையும் செயலும் உணர்த்தப்பட்டன. இவற்றின் செயல்களை மேற்குறித்தவாறு, ஒருவன் தன் உணர்வில் ஏற்படும் வேறுபாடுகள் பற்றி, உள் உணர்வால் உணர்ந்து அறிதல் வேண்டும்.

இனி, ஆன்மதத்துவம் என்பவை அந்தக் கரணம் நான்கும், அறிவுப்பொறி ஐந்தும், தொழிற்பொறி ஐந்தும், தன் மாத்திரை என்னும் சூக்குமபூதம் ஐந்தும், வான்,வளி,அனல், புனல், நிலன் என்னும் தூலபூதம் ஐந்துமாகிய இருபத்துநான்கும் ஆகும்.

அவற்றுள் அந்தக்கரணமாவன சித்தம் புத்தி, ஆங்காரம், மனம் என்னும் நான்கும் ஆம். புருடன் என நின்ற உயிர் மூலப்பகுதியைப்பற்றி நிற்கையில், அம்மூலப்பகுதி முக்குணங்களாகப் பிரிந்து விளங்கி, அப்புருடனை அவ்வக்குணம் உடையவனாகச் செய்யும். இந்நிலையில் அது குணதத்துவம் எனப்படும்; மூலப்பகுதியை அரும்பு எனக்கருதினால், குணதத்துவத்தை அவ்வரும்பின் சுருணீங்கி மலர்ந்த மலர் எனக்கருதலாம். முக்குணங்களாவன சத்துவம்,இராசதம், தாமதம் என்பவை. சத்துவம் அமைதி, இன்பம், ஒழுங்கு, பொருள்களின் இருப்பு நிலை என்பவற்றுக்குக் காரணமாக உள்ள அதிர்வு. அல்லது அலைவு (Vibaration); இராசதம் வேகம், தாக்கு, துன்பம், பொருள்களின் தோற்றம் என்பவற்றுக்குக் காரணமாகவுள்ள அதிர்வு (அலைவு); தாமதம் குழப்பம், மயக்கம், பொருள்களின் சிதைவு என்பவற்றுக்குக் காரணமாக உள்ள அதிர்வு (அலைவு). இம் முக்குண மயமே காணப்படும் உலகனைத்தும். இக்குணங்கள் விளங்கித் தோன்றாமல் அடங்கி நிற்கும் நிலையே மூலப்பகுதி ஆதலின், அஃது அவ்வியத்தம் எனவும் கூறப்படும். இம்மூலப்பகுதி புருடனுக்கு உலகப் பொருள்களின் உணர்வு பற்றிய நினைவை (சிந்தனை) உண்டுபண்ணி நிருவிகற்ப உணர்வைத் தோற்றுவிக்கும். இங்ஙனம் நினைவைத் தரும் நிலையில் அது சித்தம் எனப்படும், எனவே, மூலப்பகுதி, அவ்வியத்தம், சித்தம். குணதத்துவம் என்பவை ஒரு பொருளுக்கே, அதன் நிலை வேறுபாடுபற்றிக் கூறப்படும் பெயர்கள் எனக்கொள்ளுதல் பொருந்தும். குணதத்துவத்தையே தைத்திரீயம் மனோமய கோசம் என்கின்றது. குணத்தினின்று புத்தியும், புத்தியினின்றும் ஆங்காரமும் தோன்றும். புத்தி எதிரே காணப்படும் பொருளை, அதன் முன்னைய அனுபவங் க ளோ டு கூட்டி உணர்ந்து, 'இஃது இன்னது' என நிச்சயிக்கும். ஆங்காரம் அதனை அவ்வாறு நிச்சயிக்கத் துணியும்.

ஆங்காரம் முக்குணங்களின் ஏற்றத் தாழ்வு பற்றித் தைசத ஆங்காரம் (ஒளி), வைகாரிக ஆங்காரம் (செயன்மை), பூதாதி (பூதமுதல்) என மூவகைப்படும். இவற்றில் தைசத ஆங்காரத்தினின்றும் மனமும், செவி, மெய்,கண், நாக்கு, மூக்கு என்னும் அறிவுப் பொறிகள் ஐந்தும் தோன்றும். வைகாரிக ஆங்காரத்தினின்றும் வாக்கு, கால், கை, எருவாய், (வாக்கு, பாதம், பாணி, பாயு, கருவாய் உபத்தம்) என்னும் தொழிற்பொறி ஐந்தும் தோன்றும். பூதாதியினின்றும் சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் (சுவை ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்) என்னும் தன்மாத்திரைகள் தோன்றும்; தன்மாத்திரைகளினின்றும் ஐம் பூதங்கள் தோன்றும்.

மேலே கூறப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களின் தோற்ற முறையைப் பின்வரும் தொகுப்புப்படத்தால் இனிது உணரலாம்:—

தத்துவங்களால் நமக்கு அன்றாடம் உண்டாகும் மூவகைக் காட்சிகள்:—

நாம் உலகப்பொருள்களை நம் உடம்பில் உள்ள மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறி வாயிலாகத்தான் உணர்கிறோம். உலகப்பொருள்கள் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என நம்மால் உணரப்படும் அலைவுகள் (Vibrations) வடிவில் தாக்குகின்றன. நம்மைத்தாக்கும் அலைவுகளை நாம் எதிரிட்டு உணர்கின்றோம். பொறிகள் வாயிலாகவரும் முதல் உணர்வு "இஃதுஒருபொருள் தோன்றுகின்றது" என்றாற்போல, ஒரு பொருளின் இருப்பை மட்டும் புலப்படுத்துவதாய் இருக்கும். இது புருடன் என நிற்கும் உயிர்



ஐம்பொறிகளுள் யாதேனும் ஒன்றைப்பற்றி அறியும் அறிவு. இவ்வறிவு நிருவிகற்பக்காட்சி (பிரித்து உணரப்படாத காட்சி) எனப்படும். இக்காட்சிக்குக் கருவியாக உள்ளது வித்தை எனப்பட்ட தத்துவம்; இது பொறிகளை வாயிலாகக்கொண்டு வருதலின் வாயிற்காட்சி (Sense-perception) எனவும் கூறப்படும்.

இனி, பொறி வாயிலாகக் கிடைக்கும் பதிவுகளை இயைத்து இணைப்புச்செய்து உணரும் சிறப்பு உணர்வு மனம்புத்தி ஆங்காரம் சித்தம் எனப்பட்ட உட்கருவிகளால் உண்டாகின்றது. இச்சிறப்பு உணர்வு மேலே கூறிய நிருவிகற்பப் பொதுக்காட்சியின் பின், அக்காட்சியை அடிப்படையாகக் கொண்டே நிகழ்வது; "இஃது இன்னது" என, மொழிவடிவில், வெளிப்படுத்தத்தக்கதாய் உள்ளது. எதிரே புலப்பட்ட பொருளை அதன் பெற்றி (பெயர்), இனம், குணம், செயல், அடை 'என்னும் ஐந்தனுள் ஒன்றாலும் பலவாலும் சிறப்பித்து உணரும் உணர்வு ஆக (1) இவன்கண்ணன் (2) இவன் மகன் (3) இவன் கரியன், (4) இவன் பாடகன், (5) இவன் விரலில் மோதிரம் அணிந்தவன் என்றாற்போல ஐவகையுட்பட்டு நிகழ்வது. இக்காட்சி சவிகற்பக்காட்சி எனப்படும்; இது மனத்தின் தொழில் காரணமாகத் தோன்றுதலால் மானதக்காட்சி (Mental perception) எனவும் குறிக்கப்படும்.

புறப்பொருளினின்றும் எழுந்த அலைவு பொறிகளுள் ஒன்றைத்தாக்க, அதனால் ஏற்பட்ட பதிவை முதற்கண் நம் அறிவு "இஃது ஒன்று தோன்றா நின்றது" எனப் பொதுவாக உணர்ந்த உணர்வே வாயிற்காட்சி அல்லது நிருவிகற்பக்காட்சி எனப்பட்டது. அக்காட்சியே பின் "இஃது இன்னது" என்னும் வடிவில் மலர்ந்து விளங்குதற்கு மூலமாக உள்ளது. இவ்விருவகைக் காட்சிகளுக்கும் இடையே நிகழும் அக உணர்வுகளைப் பின்வருமாறு பகுத்து உணர்த்துகின்றனர் நம் முன்னோர்:—பொறிகளுள் ஒன்றனைப்பற்றி ஒரு பொருளை 'இஃது ஒன்று தோன்றா நின்றது' என உணர்ந்த நம் அறிவு, பின் அம் முதற் பதிவைப்பற்றி, முன் முன் நிகழ்ந்துள்ள பதிவுகளின் நினைவு தோன்றுதலால், அவற்றோடு கூட்டி ஒப்பிட்டு உணர்ந்து, இஃது இன்னதாகலாம், இன்னதாகலாம் என்னும் முன்

துணிவும் (சங்கற்பம்), அத்துணிவு பலதலைப் படுதலால், இதுவோ அதுவோ என இரட்டுறக் கருதும் ஐயமும் (விகற்பமும்) உடையதாக நிற்கும். நம் அறிவிற்கு இம் முன் துணிவையும் ஐயத்தையும் (சங்கற்ப விகற்பங்களை) தருவதாய் உடனிற்கும் கருவியே மனம் எனப்பட்டது; மனத்தின் தொழில் நிகழ்ந்தவுடன், இதனை இன்னதெனத் துணிவேன் என்னும் முயற்சி வடிவ எழுச்சி உண்டாகும்; இவ் எழுச்சியைத் தருவது ஆங்காரம் எனப்பட்டது. பின், புத்தி அப்பொருளை இன்னது என முடிவாக நிச்சயிக்கும். இந்த நிச்சய ரூபமே சவிகற்பக காட்சி என்றும், மானதக் காட்சி என்றும் கூறப்பட்டது. இங்கே மனம் உயிரின் விழைவு ரூபமாய் நின்று பொறி வாயிலாகப் புறப்பொருள்களைப்பற்றி நின்று சங்கற்ப விகற்பம் செய்வது எனவும், ஆங்காரம் முயற்சி ரூபமாய் எழுவது எனவும், புத்தி அறிவு ரூபமாய் நின்று நிச்சயிப்பது எனவும் உணர்தல் வேண்டும். மனத்தின்கண் நிகழும் சங்கற்பத்திற்குக் காரணமாகிய முன் நினைவு சித்தத்தினின்று வெளிப்படுவது எனக் கொள்ளுதல் வேண்டும்.

புத்தியால் விளங்கும் நிச்சய உணர்வு முன்னைய வினைக்கீடாகத் தோன்றும். அதனால், எதிர்ப்பட்ட பொருள் முன்னைய பழக்கம் பற்றி உறவாகவோ, பகையாகவோ, நொதுமலாகவே காட்சிப்பட்டு நம்மாட்டு விருப்பு வெறுப்பைத் தோற்றுவிக்கும். இக்காரணம் பற்றிப் பொருள்களைச் சிறப்பித்துணரும் புத்தியின் கண் அமைதி, தாக்கு, குழப்பம் (சத்துவம், இராசதம், தாமதம்) என்னும் மூன்றனுள் ஒரு குணம் மேம்பட்டுத் தோன்றும். அத்தோற்றம்பற்றி நம் அறிவு அப்பொருளை இஃது இன்பம், இது துன்பம், இது மயக்கம் என உணரும். அங்ஙனம் உணர்ந்த அறிவு அக்குணங்களில் அழுந்தி, அவற்றைத் தனக்கு வேறு உள்ளதாக அறியாது அவையே தானாய் நிற்கும். அந்நிலையில், யான் இன்புறுகின்றேன், துன்புறுகின்றேன், மயங்குகின்றேன் என மூன்றனுள் ஓர் உணர்வு உண்டாகும். இவ்வுணர்வு தன் வேதனை உணர்வு (Experience) அல்லது தன் வேதனைக் காட்சி எனப்படும். இங்கே இன்பத் துன்ப மயக்கங்களுக்குக் காரணமாகப் புத்தியில் தோன்றும் குணங்களே மூலப்பகுதியின் குணங்கள்.

ஆன்ம தத்துவம் எனப்பட்ட தத்துவங்கள் எல்லாங்கூடி இவ்வாறு முன்னர் வாயிற் காட்சியினையும், பின்னர் மானதக்காட்சியினையும், அதன் பின்னர்ப் புத்தி கொள்கலமாக அதன்கண் பரிணமித்துத் தோன்றும் முக்குணங்களுள் ஒன்றனை இன்பம், துன்பம், மயக்கம் எனக்கண்டு நுகர்வதாகிய தன்வேதனைக்காட்சியினையும் தோற்றுவித்து உலக போகரூபமாய் அமைதலின், இவை போக்கிய காண்டம் எனப்படும். போக்கியகாண்டம்— நுகரப்படும் தொகுதி.

வித்தியா தத்துவங்கள் இவற்றினும் உயிர்க்கு அணுக்கமாய் நின்று உயிரை நுகர்தற்கு உரிய தகுதி அடையச் செய்தலின் போசயித்ருகாண்டம் (நுகர்வோன் தொகுதி) எனப்படும். சிவதத்துவம் இவற்றையெல்லாம் வாக்குரூபமாய் நின்று செலுத்துதலால் பிரேரககாண்டம் எனப்படும். இவற்றின் விரிவும் விளக்கமும் திராவிடமாபாடியம் எனப்படும் சிவஞான மாபாடியத்துட் காணத் தக்கவை.

இரண்டாஞ் சூத்திரம் இரண்டாம் அதிகரணம் முற்றிற்று.

(தொடரும்)

மன்னார்குடி: இராஜகோபாலசுவாமி கோயிலில் அஷ்டகிரக சேர்க்கையை முன்னிட்டு ஹோமம் 4—2—62-ல் நடைபெற்றது.

தெ. விருத்தாங்கநல்லூர்: சுவர்ணபுரீசர் கோயிலில் தெ. விருத்தாங்க நல்லூவார் வழிபாட்டுக்கழக ஆறுவது ஆண்டுநிறைவு விழாவும் பாவைமாநாடும் இலட்சார்ச்சனை நிறைவும் 9-2-62-ல் நடைபெற்றது.

காரமடை: அரங்கநாதசுவாமி கோயிலில் திருத்தேர் விழா 19-2-62-ல் நடைபெற்றது.

மதுரை: கூடலழகர் கோயிலில் கோயில் வரலாறு புத்தக வெளியீட்டுவிழாவும், பாவைப்பாடல்போட்டி, பரிசு அளிப்பு விழாவும் மதுரை அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர் திரு. ஏ. சக்கரை, பி.ஏ., பி.எல்., அவர்கள் தலைமையில் 6-2-62-ல் நடைபெற்றது.

தெய்வச் சேக்கிழார்

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் [பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி.

தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல வல்ல பிரானெங்கள்
பாக்கி யப்பய னாப்பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சென்னி இருத்துவாம்.

இக்கட்டுரையின் கண் எழுத எடுத்துக்கொண்ட பொருள் தெய்வச்சேக்கிழார் என்பது. தெய்வ என்ற அடைமொழி கொடுத்துச் சிறப்பாக இரண்டு புலவர்களையே அழைக்கும் வழக்கம் இருக்கக் காண்கிறோம். ஒருவர் தெய்வப்புலமைத் திருவள்ளுவர்; மற்றொருவர் தெய்வச் சேக்கிழார்.

சோறுமணக்கு மடங்களெலாந் தூய்மை மணக்கும்
சிந்தையெலாஞ் சுவணமணக்கு மாடையெலாம்
சேறுமணக்கும் கழனியெலாம் செல்வ மணக்கும்
மாடமெலாம் தென்றல் மணக்கு மேடை [யெலாம்

தெய்வ மணக்கும் செய்யுளெலாம்
நீறு மணக்கு நெற்றியெலாம்
நெய்யே மணக்கும்
கறிகளெலாம் நெருப்பு
மணக்கும் குண்டமெலாம்
நேய மணக்கும் வீதியெலாம்
சாறு மணக்கும் குன்றத்தூர்த் தலைவா
தாலோதா லேலோ
சகலாகம பண்டித
தெய்வச் சைவா
தாலோ தாலேலோ

என்று சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்ற அரியநூலைப் பாடிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் கூறியிருக்கின்றார்கள். 'தெய்வ மணக்கும் செய்யுளெலாம்' என்றும், 'தெய்வச்சைவர்' என்றும் கூறியிருப்பது சேக்கிழார் பெருமானின் தெய்வப்புலமைத் தன்மையைப் பாராட்டியதேயாகும்.

சேக்கிழாரடிகளின் வரலாறு யாவரும் அறிந்த தொன்றாதலின் அதை விரிவாகக் கூறுவதற்கு விழைகின்றேனில்லை. ஆனால் அவருடைய வரலாற்றுக்குச் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிக் குறிப்புக்களைப் பற்றிச் சில சொல்லலாம் என்று எண்ணுகிறேன்.

பெயர்

தொண்டை நாட்டிலுள்ள 24 கோட்டங்களில் ஒன்றான புலியூர்க் கோட்டத்தில் குன்றத்தூர் நாட்டுக்குன்றத்தூரில் அவதரித்தவர் நம்முடைய சேக்கிழார். தெய்வங்கள், அடியார்கள், அரசர்கள் இவர்களுடைய பெயர்களைக் குழந்தைகளுக்கு இடுவது தொன்றுதொட்டு வரும் வழக்கம். அருள்மொழித்தேவர் என்பது சேக்கிழாரின் பிள்ளைத்திருநாமம் என்பது திருத்தொண்டர் புராணவரலாற்றாசிரியரின் கூற்று. கரிகாற் பெருவளத்தான் என்ற சோழமன்னன் தொண்டைநாட்டைக் கைப்பற்றி காடு கெடுத்து நாடாக்கி நற்குடி நாற்பத்தெண்ணாயிரவரைக் குடியேற்றினான். கரிகாலனின் உருவச்சிலை காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலில் இன்றும் இருப்பதைக் காணலாம். 24 கோட்டங்களில் வசித்த அவ்வேளாளர்கள் அந்தந்த நிலப்பகுதிகளுக்கு உரிமையாளர்கள் ஆனார்கள். அதனால் கிழார் எனப்பட்டனர். குன்றத்தூரில் குடியேறியவர்கள் கூடல்கிழான், புரிசைகிழான், வெண்குளப்பாக்கிழான், சேக்கிழான் முதலியவர்கள் முதன்மைக்குடிகள். நம்முடைய அருள்மொழித்தேவர் அவர் பிறந்த குடியைவிளங்க வைத்தமையால் அக்குடியின் பொதுப் பெயரே அவருக்கு சேக்கிழார் என்ற சிறப்புப் பெயராக வழங்கலாயிற்று. அருள்மொழித் தேவருக்கு முன்னும் பின்னுமாகப் பல சேக்கிழார்கள் இருந்ததாகக் கல்வெட்டுக்களால் நாம் அறிகிறோம்.

'மணவிற் கோட்டத்து மேலப்பழுவூர்
சேக்கிழான் சங்கரநாராயணன்'

'மேலூர்க் கோட்டத்துக் காவனூர்
சேக்கிழான் சத்திம லையன்'

'ஆமூர்க் கோட்டத்துப் புரவுவரி
திணைக்களம் சேக்கிழான்'

'புலியூர்க் கோட்டத்துக் குன்றத்தூர்
சேக்கிழான் அம்மையப்பன் பராந்தகதேவன்.'

பாடல்பெற்ற பதியான திருமழபாடிக் கோயில் கல்வெட்டு ஒன்று "ஜயங்கொண்ட சோழமண்டலத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழான் மாதேவடிகள் இராமதேவனான உத்தமசோழப் பல்லவ ராயன்" என்று குறிக்கிறது. இதில் வரும் இராமதேவன் என்ற பெயரே சேக்கிழாரின் இயற்பெயராக இருக்கவேண்டும் என்று டாக்டர் இராசமாணிக்கனார் போன்ற ஆராய்ச்சிப் பேரறிஞர்கள் கருதுகின்றனர். இராமதேவன் என்ற வைணவப்பெயர் இருந்திருக்க முடியுமோ என்று ஐயப்படுவோர்க்கு நரசிங்கமுனையரையர், புருடோத்தமநம்பி என்ற சிவனடியார்களும் வைணவப் பெயர்களுடையவர்களாயிருந்தனர் என்று ஆதாரங் காட்டுகின்றனர். மேலும் அரசன் சேக்கிழாரை அமைச்சராக்கியபோது 'உத்தம சோழப்பல்லவராயன்' என்ற பட்டம் கொடுத்ததும் இக்கல்வெட்டிலுள்ள பெயருக்குப் பொருத்தமாக இருக்கிறது. மேலும் பல கல்வெட்டுக்களில் மாதேவடிகள் என்ற சிறப்புப் பட்டம் சிவப்பற்றும், சிவத்தொண்டும் செய்த பெரியார்களுக்கு இடப்பட்டு வழங்கியதைக் கூறக் காண்கிறோம்.

காலம்

சேக்கிழார் வாழ்ந்த காலத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமே. இலக்கண விளக்க பரம்பரை சோமசுந்தர தேசிகர் எழுதிய 'சைவ சிகாமணிகள் இருவர்' என்ற நூலில் சேக்கிழார், முதலாம் இராஜேந்திரன் காலத்தவர் என்று கூறியிருக்கிறார். கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களுடைய 'சேக்கிழார்' என்ற நூலில் அவர் முதற் குலோத்துங்கன் காலத்தவர் என்று சொல்கிறார். கல்வெட்டாராய்ச்சிப் பேரறிஞர் டி. வி. சதாசிவ பண்டாரத்தார் மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தவர் என்று முடிவு கட்டியிருக்கிறார். வரலாற்றுப் பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார், டாக்டர் இராசமாணிக்கனார் முதலியவர்கள் சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தவர் என்று கருதுகின்றனர். இரண்டாம் குலோத்துங்கன் அரசாண்ட காலம் கி. பி. 1133-50, ஆதலின் சேக்கிழார் பெருமான் அந்தக் காலத்திலும் அதற்கு முன்னும் பின்னுமாக வாழ்ந்திருக்க வேண்டுமென்று கொள்வது தவறாகாது. தம்மைப் பெரியபுராணம் பாடத்தூண்டிய சோழ மன்னனைக் சேக்கிழார் 10 இடங்களில் புகழ்ந்து பேசுகிறார். ஒன்பது இடங்களில் அநபாயன் என்றே கூறியிருக்கிறார். ஒரு இடத்தில் மாத்திரம் சென்னி அபயன் குலோத்துங்கன் என்று கூறியிருக்கிறார். திருவாரூர்க் கோயில் கல்வெட்டொன்றில், "தில்லைக்கூத்தன் திருவடித்தாமரையிலுள்ள தேனைப் பருகும் வண்டு" என்று இரண்டாம் குலோத்துங்கன் தன்னைக் கூறிக்கொள்கிறான். அதனால் கூத்தப்பெருமானிடம் இவன் கொண்டிருந்த பேரன்பு விளங்குகின்றது.

சேக்கிழாரடிகள் சோழமன்னனிடம் அமைச்சரானதைப்பற்றிய செய்தியொன்றை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அரசன் நிலம், கடல், மலை, இவற்றைவிடப் பெரியவை எவை என ஒரு வினாவை விடுத்தான். அவைக்களப்புலவர்கள் யாரும் அதற்கு விடையிறுத்தாரில்லை. அதனைச் செவியுற்ற சேக்கிழார் மூன்று திருக்குறள் பாடல்களை ஓலையில் எழுதியனுப்பினார். அவை,

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

என்பன. இதைப்பார்த்த சோழ வேந்தன் அவரை வரவழைத்து தனக்கு முதல் அமைச்சராக்கினான். கம்பநாடர் தாம் எழுதிய திருக்கை வழக்கம் என்ற நூலில் இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு சேக்கிழாரின் பெரும்புலமையைப் பாராட்டுகிறார்.

..........................காவலன்
மண்ணின், கடலின், மலையின் பெரிதென் என
எண்ணி யெழுதிக் கொடுத்த ஏற்றக்கை

என்று அவர் சேக்கிழார் திருக்கரத்தைப் புகழ்ந்திருக்கிறார். இதனால் கம்பருடைய காலமும் சேக்கிழாருக்குப் பிற்பட்டதென்பதும் புலப்படுகின்றது. அமைச்சராய் அமர்த்தப்பெற்ற அருண்மொழித்தேவருக்கு அரசன் உத்தம சோழப்பல்லவராயன் என்ற பட்டத்தையும் வழங்கினான். உத்தமசோழன் என்ற

பெயருடன் பல்லவராயன் என்ற தொண்டை நாட்டுப்பெயரையும் அரசன் சேர்த்துக் கொடுத்தது அரசனது விரிந்த மனப்பான்மை யையும் தொண்டை நாட்டாரான சேக்கிழா ரிடம் அவன் வைத்திருந்த பேரன்பையும் காட்டுகிறது. சோழநாடு, தொண்டைநாடு என்ற இரண்டு நாட்டுச் சம்பந்தப்பட்ட பட்டம் ஒன்றை அவன் வழங்கியது இராஜ தந்திரம் என்று கொண்டாலும் இழுக்கா காது.

புராணம் பாடக் காரணம்

அமைச்சர் பதவியிலிருந்த சேக்கிழார் பெரியபுராணம் பாடக் காரண மென்ன? அருங்கலை விநோதனை மன்னன் அவைக் களப் புலவரிடம் சிவகசிந்தாமணிக் கதை யைக் கேட்டான். அந்த அவகதை வேண் டாம், சிவகதை கேட்கவேண்டும் என்று சேக்கிழார் கூற அரசன் அவரைப் பெரிய புராணம் பாடும்படி வேண்ட, அவ்வாறே சிதம்பரம் சென்று இருந்து பாடி முடித்தனர் என்று சேக்கிழார் புராண வரலாற்றாசிரியர் கூறுகிறார். பரந்த மனப்பான்மையும் சிறந்த பொதுநோக்கும் உடைய பாவலரான சேக் கிழார் சிந்தாமணிக்கு மாறாக இந்த நூலை இயற்றினார் என்று கூறுவது அவருடைய பெருமைக்கு இழுக்கு செய்வதாகும். சீவக சிந்தாமணியை அரசன் கேட்ட காரணத்தா லேயே பெரியபுராணத்தை எழுதினார் என்ப தற்கு அவருடைய நூலில் சான்றில்லை. சமண சமயத்தின் பண்டை அறநெறியை விடுத்து மறநெறிபற்றி ஒழுகிய பிற்காலத் தவரையே அவர் கடிந்தார் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. சம்பந்தர் புராணத் தில்,

முந்தைய உரையிற்கொண்ட பொறைமுதல்
வைப்பும் விட்டுச்
சிந்தையிற் செற்றம் முன்னும்
தீக்குணம் தலை நின்றார்கள்

என்று கூறியிருப்பதை ஓர்ந்து உணரவேண் டும். சிந்தாமணியையும் பெரியபுராணத்தை யும் நடுநிலைநின்று ஆராய்ந்தால் சேக்கிழார் அதைத் தனக்கு ஒரு முன்மாதிரியான நூலா கக்கொண்டார் என்பது விளங்காமற் போகாது. விருத்தப்பாவால் ஆன சிந்தாமணி யைப் போன்றதே திருத்தொண்டர் புராண மும். சிந்தாமணியின் ஆசிரியரான திருத்தக்க தேவர் சிவபிரானைப்பற்றிக் கூறும் இடங்கள் மிகச் சிறந்தவை.

'ஓடுமுகில் கீறியொளிர்
திங்கள் சிகைவைத்தே
மாடமதுவார் சடைய
வள்ளலையுமொக்கும்'

'திங்கள் சேர் முடியினானும்
செவ்வியும் போன்று'

'கலங்கு தெண்டிரை
மேய்ந்து மழை
பொலங்கொள் கொன்றையினான்
சடைபோல் மின்னி'

'காரியுண்டிக் கடவுளிற் கனன்று'

என்ற சிந்தாமணியாசிரியரின் வாக்குகளை நோக்கிய சேக்கிழார் அதன்மீது காழ்ப்பு கொண்டு பாடினார் என்று கூறுவது அறிவுக் குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. "சேக் கிழாரின் தமிழ் அன்பு, திருமுறைநேயம், அடியவர் பக்தி இன்னபிறவே அவரைப் பெரியபுராணம் பாடச்செய்தன என்று கொள்வது சிறப்பு" எனத் திரு. வி. கலியாண சுந்தரனார் கூறுகிறார். அடியார் வரலாறு களைச் சொல்லக்கேட்ட அரசன் சேக்கிழா ரையே அவற்றை நூலாகச் செய்தருளும்படி வேண்டுகிறான். குன்றை முனிவர், சிதம்பரம் சென்று புராணத்தைப் பாடுவதற்கு வேண் டிய வசதிகள் எல்லாவற்றையும் செய்து கொடுத்தான். அவ்வப்போது ஆள்விடுத்து நூல் இயற்றல் எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டான். புராணம் எழுதி முடிந்ததும் அரசன் தில்லைக்குச் சென்று சேக்கிழார் பெருமானை அதற்கு உரை விரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டான். ஒரு சித்திரைமாதத் திருவா திரையில் தொடங்கி மறு சித்திரைத் திருவா திரையில் நூல் அரங்கேற்றல் முடிந்தது. சேக்கிழாரையும் அவர் திருத்தொண்டர் புராணத்தையும் யானைமீதேற்றி, தான் பின் அமர்ந்து இருகைகளாலும் கவரி வீசி, ஊர் வலம் செய்வித்தான். இந்த நிகழ்ச்சியைக் காணும்போது உலகப் பெரும்புலவர் மற் றொருவர் வரலாறும் நினைவுக்கு வருகிறது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் உரோமா புரி நாட்டில் வாழ்ந்தவர் வர்ஜில் (வரசிலர்) என்ற மகாகவி. ஈனியஸ் என்ற வீரனின் செயல்களைப்பற்றி ஒரு காவியம் இயற்றினார். உரோமாபுரியை ஆண்ட அகஸ்டஸ் என் பான் அக்காவியத்தைப் பாடும்படி செய்,

தவன். தலைநகரிலிருந்து கொண்டு, நேபிள்ஸ் என்ற ஊரிலிருந்துகொண்டு காவியம் எழுதும் புலவருடன் கடிதப் போக்குவரவு செய்தான். அவனே நேபிள்ஸ் சென்று அவர் இயற்றிய பாடல்கள் சிலவற்றைக் கேட்டு மகிழ்ந்தான். அவரையே அந்த நூலை அரங்கேற்றும்படி கேட்டுக்கொண்டான். அப்படியே வரசிலரும் செய்தார். மன்னனின் சகோதரியும் அதில் பெரும் பங்குகொண்டாள். புலவருக்கு 2100 பொற்காசுகளையும் வழங்கினாள். நூல் அரங்கேற்றம் நிகழும் போது ஒரு துயரமான செய்தி வந்தது. அதை ஆற்றமுடியாதவளாய் ஆக்டேவியா என்ற அந்த மாது மயங்கி வீழ்ந்து விட்டாளாம். எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு நிகழ்ச்சி கூறப்பட்டதை இங்கு சொல்லாமல் விடுவதற்கில்லை. உரோமாபுரியிலுள்ள நாடக அரங்கிற்கு ஒருநாள் வரசிலர் நாடகம் பார்க்கச் சென்றிருந்தார். மேடைமீது தோன்றிய நடிகர் வரசிலர் பாடல்கள் சிலவற்றைப் பாடினர். நாடகம் பார்க்க வரசிலர் வந்திருப்பதையறிந்த மக்கள், நடிகர் அவருடைய பாடல்களைப் பாடும்போது எழுந்து நின்று அவருக்கு வணக்கம் செலுத்தினர்களாம். அரசன் வேண்டிக்கொள்ளக் காவியம் எழுதியது, அரங்கேற்றச்செய்து கேட்டது இவை சேக்கிழார், வரசிலர் இவர்களுடைய வரலாற்றில் பேராற்றுமையுடன் விளங்குவதைக்காண மனம் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது.

நூற்பெயர்

இனி, நூலுக்கு சேக்கிழார் இட்ட பெயரைப்பற்றி ஒரு சிறிது சிந்திப்போம். கடவுள் வாழ்த்தில் மாக்கதை என்று கூறுகிறார். நூலின் பெயர் கூறும்போது திருத்தொண்டர் புராணம் என்று சொல்லியிருக்கிறார். முதல், வழி, சார்பு என்ற மூவகை நூல்களில் இது முதல் நூல் என்ற பிரிவைச்சார்ந்தது. அகத்தியபக்த விலாசம், உபமன்னியபக்த விலாசம் இவை இந்நூலின் வடமொழி பெயர்ப்பே. தொகை, வகை, விரி என்றவற்றில் பெரிய புராணம் விரிநூல் என்ற வகையின் பாற்படும். அதற்குத் தொகையாகவும் வகையாகவும் நின்றவை சுந்தரரின் திருத்தொண்டத் தொகையும், நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதியும் ஆகும். திருத்தொண்டத்தொகை ஒரு வித்து. அதினின்றும் தோன்றிய முளையே திருவந்தாதி. அதனின்றும் எழுந்து பரந்து விரிந்து நிற்கும் மரம் திருத்தொண்டர் புராணம். அது பூத்துக்காய்த்துக் கனிந்த பழங்களை என்றும் நின்று நமக்கெல்லாம் வழங்கி வருகிறது. திருத்தொண்டத் தொகையையும், திருத்தொண்டர் திருவந்தாதியையும் அடிப்படையாகக் கொண்டெழுந்த நூலைத் "திருத்தொண்டர் புராணம்" என்றுதானே பெயரிட்டழைக்க முடியும். செயற்கரிய செயல்களைச் செய்த பெரியோர்களின் கதைகளைச் சொன்னபடியால் மக்கள் அதைப் பெரிய புராணம் என்ற பெயரிட்டு வழங்கலாயினர். இறைவன் திருவருளுடன் ஒன்றிய ஒருமையுணர்வுடைய பெரியார்களின் வரலாறுகளைக் கூறும் நூலைப் பெரியபுராணம் என்ற பெயரால் அழைப்பது மிகப் பொருத்தமானதேயன்றோ!

பெரியபுராணத்தில் இரண்டு காண்டங்கள், 13 சருக்கங்கள் இருக்கின்றன. முதல் திருமலைச் சருக்கம், கடைசி வெள்ளானைச் சருக்கம் இவை நீங்கலாக மற்ற பதினொரு சருக்கங்களும் திருத்தொண்டத்தொகை பதினொரு பாடல்களின் முதற் சொற்களாலேயே அமைத்திருக்கிறார். 4253 பாடல்கள் உள்ளன என்று சேக்கிழார்புராண ஆசிரியர் கூறியிருக்கிறார். தொண்டைமண்டல சதகத்தில் 4283 பாடல்கள் பெரியபுராணத்தில் உள்ளன என்று கூறப்பட்டிருக்கிறது. 'எழுதினவன் ஏட்டைக்கெடுத்தான், படித்தான் பாட்டைக்கெடுத்தான்' என்ற பழமொழிக்கிணங்க ஐம்பது என்பதை எண்பது என்றும் எழுதியிருக்கலாம். பெரியபுராணத்தில் சில பாடல்களை வெள்ளியம்பலத்தம்பிரான் என்பவர் சேர்த்தார் என்ற காதுவழிச் செய்தியும் நமக்கு எட்டியிருக்கிறது. இந்த இடைச்செருகல் பாடல்களை வெள்ளிப்பாடல்கள் என்று கூறுவது மரபு.

சிறப்பியல்கள்

பெரியபுராணத்தின் சிறப்பியல்புகளைப் பற்றி எழுதுவதே கட்டுரையின் முக்கியப் பகுதி. அடியார் பெருமையைப்பற்றி எப்படிப் பாடுவதென்று எண்ணி தில்லைப்பெருமான் திருமுன் நின்று அவன் திருவருளை இறைஞ்சி நின்றார் சேக்கிழார். 'உலகெலாம்

என்று வாஞெலியொன்று எழுந்தது. அதையே முதலாகப் பாடத்தொடங்கினர் புராணத்தை. "மெய்ம்மொழி வான் நிழல் கூறிய பொருளின் ஆகும்" என்று அவரே கூறியிருக்கிருர். இறைவன் திருவாக்காக எழுந்த அந்த சொல்லைப் பொன்னேபோல் போற்றி அவருடைய நூலில் பதினன்கு இடங்களில் கூறியிருக்கிருர். சிறப்பாக முதலிலும், நடுவிலும், கடைசியிலும் பெய்து அமைத்திருக்கிருர். ஏறக்குறைய சரிபாதியில் 2119 பாட்டில் "அஞ்செழுத்தோதி ஏறிஞர் உய்ய உலகெலாம்" என்று கூறியிருக்கிருர். இதைப் பல்லக்குப்பாட்டு என்று கூறுவர் ஆன்ருேர். பதினன்கு இடங்களில் உலகெலாம் என்று கூறியிருப்பது பதினன்கு உலகங்களையும், பதினன்கு சாத்திரங்களையும் குறிக்க எழுந்தது போலும்.

உலகப் பொதுநூல்

பெரியபுராணம் உலகப் பொதுநூல் என்பதற்குப் பலசான்றுகள் காட்டலாம். பெரியபுராணத் தொண்டர்கள் வெவ்வேறு காலத்தவர், இடத்தவர், குலத்தவர். அவர்களின் பல்வேறு வகைப்பட்ட வாழ்க்கைத் தொகுப்பே அந்த நூல். அதில் காணப்பெருத வாழ்க்கை நிலையே உலகப்பகுதியில் இல்லை யெனலாம். மிக உயர்ந்தோர், மிகத் தாழ்ந்தோர் இவர்கள் வாழ்க்கைக்கு ஏற்ற ஒவ்வோர் உதாரணம் அந்த நூலில் காணலாம். ஏசுநாதர், புத்தபகவான், மகாவீரர், மகம்மதுநபி போன்ற உயர்ந்த இலட்சியமுடைய பல தொண்டர்கள் பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ளனர். தீமை செய்தவனுக்கும் கருணைகாட்டவேண்டும் என்று வற்புறுத்தினவர் ஏசுநாதர். அவரைச் சிலுவையில் அறைந்தபோது அத்தியோன் அவர்முன் கொண்டுவரப்பட்டான். "பாவம்! ஒன்றும் அறியாதவன். அவனை மன்னியுங்கள்" என்று கூறினர். மெய்ப்பொருள் நாயனரும், ஏனுதிநாத நாயனரும் தங்களுக்குத் தீங்கிழைத்த பகைவர்களுக்கு இரங்கியருளினுர்கள். வாள் ஏந்தியும் தீமையைத்தடுக்கலாம் என்று கருதினர் மகம்மது நபிகள். எறிபத்தர் என்ற தொண்டர் மழுப்படையேந்தி அடியவர்க்கு இடுக்கண் வராது காத்தலையே தமது தலையாய கடனை மேற்கொண்டிருந்தார். மகாவீரரும், புத்தபகவானும் அஹிம்சை, ஜீவகாருண்யம் இவற்றையே சிறப்பாகப் போதித்தனர். சேரமான் பெருமாள் நாயனர் அரசாட்சியை ஏற்றுக்கொள்ள நேர்ந்தபோது, "அன்பு நிலைக்கு மாறுபடாமல் எல்லா உயிர்களையும் பாதுகாக்க முடியுமானல் அரசாள்வேன்; இல்லையேல் அரசாட்சி வேண்டாம்" என ஆண்டவனை வேண்டி நின்ருர். இறைவன் எல்லா உயிர்களும் பேசும் மொழியைப் புரிந்துகொள்ளும் அறிவுத்திறனைக் கொடுத்தார். அதனலேயே "கழறிற்று அறிவார்" என்ற பெயரும் அவருக்கு அமைந்தது. "மூவேந்தர் மொழிவழங்கும் நாட்டுக்கப்பால் முதல்வனர் அடிச்சார்ந்த முறைமையோடும்" என்று உலகம் எங்கும் தோன்றிய தெய்வத் திருவருட் தொண்டர்களையும் பெரியபுராணம் போற்றுகிறதென்ருல் அதை உலகப் பொதுநூல் என்று கூருமல் வேறு என்னென்று சொல்வது.

காவியம்

பெரியபுராணம் ஒரு பெருங்காவியம். சைவ முதற்காவியம். திராவிடப் பிரகாசிகை ஆசிரியர் அதைத் 'திருவருட்காவியம்' என்று கூறுகிருர். காவிய இலக்கணத்திற்கு வேண்டிய உறுப்புக்கள் எல்லாம் அதில் அமைந்திருக்கின்றன. உலகம், உயிர், கடவுள் என்ற மூன்றும், அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் அங்கே இடம் பெற்றிருக்கின்றன. மலை, நாடு, நகர் முதலியவற்றின் வருணனைகளெல்லாம் அதில் காணலாம். பெரியபுராணமான காவியத்திற்குத் தலைவர் சுந்தரர். "மூலமான திருத்தொண்டத் தொகைக்கு முதல்வராயிருந்த ஞாலமுய்ய எழுந்தருளும் நம்பிதம்பிரான் தோழர்" என்று சேக்கிழார் கூறியிருக்கிருர். 'சைவ முதல் திருத்தொண்டர் தம்பிரான் தோழர்' என்றும் சொல்லுகிருர். கதை கயிலாயத்திலேயே முடிகிறது. ஒவ்வொரு நாயனர் புராணத்தின் இறுதிப் பாடலிலும் சொல்லப்பட்ட நாயனர், இனி சொல்லப்புகும் நாயனர் இவர்களின் குறிப்பைச் சொல்லிச் செல்வது சேக்கிழார் நூலைக்கோவை செய்து செல்லும் போக்கு நமக்குப் புலனுகிறது. மேலும் காவியத் தலைவரான சுந்தரருக்கு ஒவ்வொரு சருக்கத்தின் முடிவிலும் அவருக்கு வணக்கப்பாடல் ஒன்றைச்சொல்லியிருக்கிருர். அத்தகைய பாடல்களிலும் சுந்தரர் வாழ்க்கையின் அற்புத நிகழ்ச்சிகளையும் கூறியிருப்பது அவரைத்தலைவராக

வைத்தே காவியமாக அருளிய நோக்கம் நமக்குப்புலனுகிறது.

பேரிதிகாசம்

சுந்தரர் வரலாற்றைச் சொல்லவந்தவர் பல அடியார்கள் வரலாற்றையும் அதனுட்படுத்திக் கூறியிருப்பதால் அதை ஒரு பேரிதிகாசம் என்று சில பேரறிஞர்கள் கருதுகின்றனர்.

தொகுப்புக் கூறுதல்

திருக்கூட்டச்சிறப்பில் நாயன்மார்களின் தகுதிகளைத் தொகுத்துக் கூறியிருக்கிறார். கைத்திருத்தொண்டு செய்கடப்பாட்டினர்; பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்; பூதம் ஐந்து நிலையிற் கலங்கினும் மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலர்; கோதிலாத குணப் பெருங்குன்றனர்; கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்; ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்; கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டாவிறலினர்; ஈர அன்பினர்; யாரும் ஈசன் பணியலதொன்றிலர்; வீரர் என்றெல்லாம் கூறியிருக்கிறார். இந்த தகுதிகளில் ஒன்றோ பலவோ கொண்டிருந்தவர் நம் நாயன்மார்கள் என்பதை நாமெல்லோரும் உணர்வோம்.

பக்திநூல்

திருத்தொண்டர் புராணம் ஒரு பக்தி நூல். பக்தி அதன் உயிர், மற்றவையெல்லாம் அதன் உடல் உறுப்புக்கள். சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாடிய பிள்ளையவர்கள்,

'பக்திச் சுவைநனி சொட்டச்
சொட்டப் பாடிய கவிவலவ'
'கல்லுங்கரையக் கவிபாடுங்
கனிவாய் முத்தம் தருகவே'
'நெஞ்சம் கனியக்கனியக்
கண்ணீர் வாரக்கவி பாடிய இறைவ'

என்று பாராட்டுகிறார். காதற் காட்சியைப் படைக்கும் போது பக்திச்சுவையையும் குழைத்து அளிக்கிறார். திருவாரூர்ப் பூங்கோயிலில் சுந்தரர் பரவையாரைப் பார்க்கிறார்.

கற்பகத்தின் பூங்கொம்போ
காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோர் புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த
விரைக் கொடியோ
அற்புதமோ சிவன் அருளோ
அறியேன் என்றதிசயத்தார்.

அவரைக் கண்டு சென்ற பரவையாரோ,

முன்னே வந்தெதிர் தோன்றும்
முருகனே பெருகொளியால்
தன்னேரில் மாரனே
தார்மார்பின் விஞ்சையனே
மின்னேர் செஞ்சடை யண்ணல்
மெய்யருள் பெற்றுடையவனே
என்னே என்மனந்திரித்த இவன்யாரோ
என நினைத்தார்.

இதனால் ஒருவரையொருவர் அருள் உருவமாகக் காண்பதை அழகுபட தமக்கே உரிய முறையில் சேக்கிழார் நமக்கு அமைத்துக் காட்டுகிறார்.

சுருங்கச் சொல்லல்

சேக்கிழார், "சொல்லும் பொருளும் நனி சிறப்பச் சுருங்கச் சொல்லன் முதலாய தோட்டியமைய வமங்கல மாஞ்சொற்கள் புணராது அறக்களைந்து" பாடுவார் என்பார் பிள்ளைத்தமிழ் நூல் உடையார். இதில் இரண்டு இயல்புகளை விதந்தோதுகிறார். ஒன்று சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல்; மற்றொன்று அமங்கலமான சொற்களைக் கலவாது பாடல். எடுத்துக்காட்டாக, சுருங்கச் சொல்லலுக்கு ஒரு பாடலைப் பார்ப்போம்.

சுந்தரர் அவிநாசித்தலத்தில் பார்ப்பனர் தெருவழியே போகிறார். ஒரு வீட்டில் அழுகையொலியும் அதற்கெதிர் வீட்டில் மணவொலியும் கேட்கிறது. இது என்னே என்றதிசயித்து நிற்கிறார். இந்த நிலையில் ஒரு காட்சியை நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறார், ஒரு பாட்டில் சேக்கிழார் பெருமான்.

அந்தணாளர் வணங்கி அரும்புதல்வர்
இருவர் ஐயாண்டு
வந்த பிராயத்தினர் குளித்த மடுவில்
முதலை ஒருமகவை
முந்த விழுங்கப் பிழைத்தவனை
முந்நூலணியும் கலியாணம்
இந்தமனை மற்றந்தமனை இழந்தார்
அழுகை என்றுரைத்தார்.

இதைவிடச் சுருக்கமாக இந்த நிகழ்ச்சியை உரைக்க முடியுமோ என்பதை அறிஞர் கூர்ந்து ஆராயத்தக்கது. இந்தப் பாட்டிலுள்ள சொல்லை ஏதேனும் ஒன்றை எடுத்து

விட்டு வேறு அவ்வளவு பொருத்தமான ஒரு சொல்லைப் போடவும் இயலாதென்பது என் தாழ்மையான கருத்து.

அமங்கலச்சொல் புணராமை

இனி, அமங்கலச் சொற்களை அறவே களைந்து பாடும் பான்மை சேக்கிழாருக்கே உரிய தனிச்சிறப்பு. சில எடுத்துக்காட்டுக்கள் தந்தால் போதும். 'நினைந்த அப் பரிசே செய்தான்' என்று மெய்ப்பொருள் நாயனார் புராணத்திலும், 'தன் கருத்தே முற்றுவித்தான்' என்று ஏனாதிநாதர் வரலாற்றிலும் கூறியிருக்கிறார். அப்பூதியடிகள் புராணத்தில் 'இப்போதிங்கவன் உதவான்' என்றார். சிறுத்தொண்டர் புராணத்தில், 'இப்போது உதவான் அவன்' என்றும் சொல்லியிருப்பது கூர்ந்து நோக்கத்தக்கது. குழந்தை இறந்து விட்டான் என்று உண்மையைச் சொன்னால் அடியார் உணவு உண்ணாமல் போய்விடுவார். பொய் சொல்வது அடியார்க்கு உகந்ததன்று. உண்மை பொய் இரண்டும் கூறாமல் 'இப்போது உதவான்' என்று சாதுரியமாகக் கூறியிருப்பது குன்றை முனிவரின் நிறைபுல மாட்சியைக் காட்டுகிறது. சிறுத்தொண்டர் புராணத்திலேயே 'இருவர் மனமும் பேருவகை எய்தி அரியவினை செய்தார்' என்பது செயற்கரும் செயல் செய்தார் என்பதைக் குறிப்பிடுவதோடு குழந்தையை அரியும்படியான செய்கையைச் செய்தார் என்று பொருள்படும். காய்கறிகளை அரிகிறோம். ஆடு கோழிகளை அறுக்கிறோம். அதனாலேயே பட்டினத்தடிகள் 'வாளால் மக அரிந்து ஊட்டவல்லேன்' என்று பரஞ்சோதியாரின் செயலைப் பாராட்டுகிறார்.

புரட்சிக் கவிஞர்

எண்ணூறு ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த சேக்கிழார் ஒரு புரட்சிக்கவிஞர் ஆக விளங்கினார். இப்போது நாம் தாழ்ந்த வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் என்று கூறுவோரை அவர் அக்காலத்திலேயே ஐயர் என அழைத்தார். அது ஒரு புரட்சியல்லவா? வேடர் குலத்தவரான கண்ணப்பரை இரண்டு இடங்களில் ஐயர் என்று கூறுகிறார். இப்போது அரிஜனங்கள் என்று அழைக்கப்படும் பறையர் வகுப்பினரான திருநாளைப் போவாரை தில்லைவாழ்அந்தணர், 'ஐயரே' என்று அழைக்கக் காண்கிறோம். 'திருநாளைப் போவாராம் மறைமுனிவர்' என்ற உயர்ந்த நிலையில் வைத்தும் பேசுவார் எங்கள் குன்றைமுனி சேக்கிழார். திருநீலகண்ட யாழ்ப்பாணரும் தாழ்ந்த சாதியினர்தான். ஞானசம்பந்த சுவாமிகள் அவரை நான்கு இடங்களில் ஐயர் என அழைக்கிறார். யாழ்ப் பாணர் முதன்முதலில் சம்பந்தரைச் சந்திக்கும்போது 'ஐயர் நீர் உளமகிழ இங்கணைந்த உறுதி உடையேம்' என்று சொல்லி சம்பந்தர் அவரை வரவேற்கிறார். பாணர் பிறந்த ஊரான திருஎருக்கத்தம்புலியூருக்கு இருவரும் செல்கின்றனர். அவ்வூரையண்மியதும் 'இப்பதி அடியனேன்பதி' என்று பாணனார் மொழிந்தார். அவ்வளவில் ஆளுடைய பிள்ளையார் 'ஐயர் நீர் அவதரித்திட இப்பதி அளவில் மாதவம் முன்பு செய்தவாறென சிறப்புரைத்தருளினார்'. 'மாதர் மடப்பிடி' என்ற பதிகம் யாழில் அடங்காதபோது அதை உடைக்கப்போகிறார் பாணர். சம்பந்தர், ஐயரே என இரண்டு இடங்களில் அவரை விளித்து அச்செய்கையினின்றும் விலக்குகிறார். பறையர் வகுப்பினரை ஐயர் என்றும், மறைமுனிவர் என்றும் அவர்களுக்காக எல்லாம் செய்துவிட்டோம் என்று பெருமை பேசிக்கொள்ளும் இக்காலத்தும்கூட அழைக்கவில்லை யென்றால் அக்காலத்தில் மிகத் துணிவுடன் கூறிய சேக்கிழாரைப் பெரும்புரட்சிக் கவிஞர் என்று அழைக்கத்தானே வேண்டும்.

பெண் பெருமை

சங்க காலப்புலவர்கள் பெண்களுக்குப் பெருமை கூறினார்கள். கம்பருக்குப் பிற்பட்ட புலவர்கள் பலர் பெண்களைப் பழித்து இழிவு கற்பித்தார்கள். பெண்ணின் பெருமை பேசுவதில் சேக்கிழாரைவிட விஞ்சிய புலவர்கள் இருந்தார்கள் என்று சொல்லமுடியாது. எடுத்த எடுப்பிலேயே தடுத்தாட்கொண்ட புராணத்தின் முதல் பாட்டில்,

மங்கையர் வதனசீத மதி இருமருங்கும் ஓடிச்
செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப்பாடி நாடு

என்று கூறுகிறார் என்றால் வேறு சான்றும் வேண்டுமோ? பெண்களைப்பற்றிப் பேசும் போதெல்லாம் அர், ஆர், விகுதிகளில் தான் கூறுவார். அவள் என்று கூறுவதே இல்லை. திருநீலகண்டர் மனைவியைப் பத்து இடங்களில் கூறும்போது ஆறு இடங்களில் மனைவியார் என்றே சேக்கிழார் வாயால் அழைக்

கிறார். மூன்று இடங்களில் சிவபெருமானும், ஒரு இடத்தில் தில்லைவாழந்தணரும் மனைவி என்றழைக்கக் காண்கிறோம். அப்பர் சுவாமி கள் தம் தமக்கையாரை "நந்தமதுகுலம் செய்த நற்றவத்தின்பயன் அனையீர்" என்று மிகப்பணிவுடன் பேசுகிறார். நம்முடைய இல்லங்களில் பணிசெய்யும் பெண்களை வேலைக்காரி என்றுதான் இன்றும் அழைக் கின்றோம். சேக்கிழார் அப்படியழைக்க இசையமாட்டார். சிறுத்தொண்டர் புரா ணத்தில் 'சந்தனமாம் தையலார்' 'சந்தனத் தார் எனும் தாதியார்' என்று பணிப்பெண் ணைக் கூறினார் என்றால் வேறு என்ன சான்றுவேண்டும், பெண்ணுக்குப் பெருமை தருவதற்கு? சிவஞானசுவாமிகள் தம்முடைய சமயற்காரரை அழைத்து "சற்றே துவையல் அரை தம்பி ஒரு பச்சடி வை, வற்றல் ஏதே னும் வறுத்துவை" என்று கூறியது ஈண்டு நினைவுக்கு வருகிறது.

இலக்கிய அறிவு

சேக்கிழாரின் பரந்து விரிந்த இலக்கிய அறிவை நாம் அவர் நூல் முழுவதும் பரக்கக் காணலாம். சங்க நூல்கள், பதினொரு திரு முறைகள், தில்லையுலா முதலிய நூல்களை நன்கு ஆராய்ந்தவர். சிந்தாமணியை ஒரு முன்னூலாகக் கொண்டார் என்பது தேற் றம். திருக்குறளை சுமார் 70 இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார். 'முன்னோர் மொழி பொருளைப் பொன்னேபோல் போற்றும்' பெற்றி அவர் நூலில் யாண்டும் விரவிவரக் காண்கிறோம். தேவாரத்தில் அவர் அப்ப டியே தோய்ந்துவிட்டார். அவைகளுடன் இரண்டறக்கலந்து விட்டார் என்றும் கூற லாம். சம்பந்தர் 'மங்கையர்க்கரசி வளவர் கோன்பாவை வரிவளைக்கை மடமானி' என்று பாடுகிறார். எங்கள் சேக்கிழார் பெருந் தகையார், "மங்கையர்க்குத் தனியரசி எங் கள் தெய்வம் வளவர் திருக்குலக்கொழுந்து வளைக்கைமானி" எனமெருகு கொடுத்துப் பேசுகிறார். அவர் திருமுறைகளில் ஒன்றி உடனானார் என்று கூறவேண்டும்.

உலக அறிவு

அமைச்சராக இருந்ததால் நாட்டு நடப்பை நன்றாக உணர்ந்திருந்தார். எல்லா ஊர்களையும் சுற்றிப்பார்த்திருக்கிறார். உடுப் பூர் முதல் காளத்திவரை கண்ணப்பர் வந்த வழியை வர்ணித்திருப்பதை இன்றும் நாம் காணலாம். இந்த இரண்டிடங்களுக்கும் இடையே சுமார் 40 கல் தொலைவை நாம் கடந்து செல்லும்போது அவர் கூறிய காட்சி கள் நமக்குப் புலப்படுகின்றன. அப்பர், சம் பந்தர், இவர்கள் யாத்திரை செய்த வழிகள், தங்கிய மடங்கள் இவைகளையெல்லாம் கூறிச் செல்வதை நாம் அந்த வழியே சென்றால் காணமுடியும். 'கொள்ளிடக்கரை மேற் கானாட்டு ஆதனூர்' என்றும், 'மிழலைநாட் டுப் பெருமிழலை' என்றும் கூறுகிறார். சுந் தரர், நம்பியாண்டார் நம்பி கூறுவதையும் தெரிவிக்கிறார்.

கற்சிற்பங்கள்

சேக்கிழார் பெருமான் எல்லாக்கோயில் களுக்கும் சென்று வழிபட்டதோடு அங் குள்ள கற்சிற்பங்கள், உருவச்சிலைகள், கல் வெட்டுக்கள் இவைகளை நன்கு ஆராய்ந்தறிந் திருந்தார் என்பதற்குப் பல ஆதாரங்கள் காட்டலாம்.

கங்கைகொண்ட சோழபுரம் கோயில் முதலாம் இராஜேந்திர சோழனால் கட்டப் பட்டது. அதில் சிவபெருமான் சண்டேசு வரருக்கு அருள் புரிவதைக்காட்டும் கற்சிற் பம் ஒன்று இருக்கிறது.

'அண்டர் பிரானும் தொண்டர்தமக்
கதிபனுக்கி அனைத்து நாம்
உண்டகலமும் உடுப்பனவும்
சூடுவனவும் உனக்காகச்
சண்டீசனுமாம் பதந்தோம்
என்றங்கவர் பொற்றடமுடிக்குத்
துண்டமதிசேர் சடைக்கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்'

அந்த அழகிய கற்சிற்பத்தை நேரில்கண்டால் தான் இந்த பாடலின் பொருள் அமைந்தி ருப்பதை உணர முடியும்.

(தொடரும்)

உ

சிவமயம்

மாணிக்கவாசகர் அருளிய பாடல்

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே.

[எனது உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டு வீற்றிருக்கும் எமது தலைவனே, திருப்பெருந்துறைப் பெருமானே, உன்னை எனக்குக் கொடுத்தாய், என்னை நீ ஏற்றுக் கொண்டாய் சங்கரனே! இதனால் நம் இருவரில் யார் திறமையுடையவர்? முடிவில்லாத பேரின்பத்தை நான் பெற்றேன். நீ என்னிடத்தில் பெற்றுக்கொண்டது யாது? (ஒன்றுமில்லை). ஆண்டவனே, எனது உடலைக் கோயிலாகக் கொண்டவனே, இந்த அருட்செயலுக்கு உனக்கு அளித்தற்குரிய பதிலுதவி என்னிடம் ஒன்றுமில்லை.]

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம.

நம்மாழ்வார் அருளிய பாசுரம்

என்ன தாவி மேலையாய் ஏர்கொள் ஏழ்உலகமும்
துன்னி முற்று மாகிநின்ற சோதிஞான மூர்த்தியாய்
உன்ன தென்ன தாவியும் என்ன துன்ன தாவியும்
இன்ன வண்ணமே நின்றாய் என்றுரைக்க வல்லனே.

[என் உயிர் மேல் காதல் கொண்டுள்ளவனே! அழகு பொருந்திய ஏழுலகங்களிலும் பரந்து சோதிமயமான ஞானவடிவமானவனே! என்னுடைய உயிரும் உன்னுடையது; உன் உயிரும் என்னுடையது; இன்னதன்மையில் நின்றாய் என்று சொல்ல வல்லனோ? வல்லவன் அன்று.]

அடியவர் திருநட்சத்திரங்கள்

பிலவ—பங்குனி

சைவம்

11உ—காரைக்கால்அம்மையார்
20உ—தண்டியடிகள்நாயனர்
27உ—நேசநாயனர்
29உ—கணநாதநாயனர்
31உ—முனையடுவார்நாயனர்



இராமேசுவரம் கோயில் இரண்டாம் பிரகாரம் திருப்பணித் துவக்க விழாவில்
டாக்டர். சி. பி. இராமசாமி ஐயர், ஆணையர், திருப்பணிக் குழு உறுப்பினர்கள்.

கபாலீசுவரர் கோயிலில் திருமுறை அர்ச்சனைத் துவக்க விழா

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-34.
... Broadway, Madras-1.